அதற்காகத்தான் எண்ணூர் துறைமுகம் இப்போது உருவாக்கப்படுகிறது. அங்கே ஒரு பகுதி கப்பல்கள் மாற்றப்படுகிறது. அதேபோல் கடலூர் துறைமுகம் ஒரு மீன்பிடித் துறைமுகம் அல்ல. அது வணிகப் போக்குவரத்திற்கு உள்ள துறைமுகம்தான். அதுவும் மேடிட்டிருக்கிறது. ஆழப்படுத்துகின்ற முயற்சியிலே நம்முடைய அரசுத் துறை ஈடுபட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நம்முடைய தமிழ்நாட்டுத் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்காகத்தான் (TACID) - Tamil Nadu Corporation of Infrastructure Development என்ற அந்த ஒரு நிறுவனத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த நிறுவனம் இங்கு தொழில் துறையை விரிவுபடுத்துவதற்கு எந்தெந்த வகையிலே துறைமுகங்களை விரிவுபடுத்தலாம், சாலைகளை அகலப்படுத்தலாம், புதிய சாலைகளை உருவாக்கலாம் என்ற திட்டங்களை எல்லாம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. எனவே மாண்புமிகு முதல்வரிடத்திலே கலந்துபேசி கிழக்குக் கடற்கரையில் உள்ள எந்தெந்தத் துறைமுகங்களை உடனடியாக விரிவுபடுத்தலாம் அல்லது துறைமுகக் கட்டுமானத்தை ஆரம்பிக்கலாம் என்பதற்கான முயற்சிகளிலே ஈடுபடுகிறபொழுது வெளிநாட்டு நிறுவனங்கள், அல்லது தனியார் நிறுவனங்களினுடைய முதலீட்டை, இதற்குக் கொண்டு வந்து சேர்க்கின்ற முயற்சியிலே நம்முடைய அரசு ஈடுபடும் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் துறைமுகத்தை எந்த அளவிற்கு விரைவாக அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றதோ, அதுபோன்று நம்முடைய மாநிலத்தில் எத்தனை சிறிய துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டி உள்ளன? அதில் குளச்சல் துறைமுகம் இடம்பெறுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரையில் எண்ணூர் தவிர, இப்போது இந்த செய்யூர் துறைமுகம் அமைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. கடலூர் துறைமுகத்தை விரிவுபடுத்துகிற வாய்ப்பு இருக்கிறது. திருக்கடையூரில் ஒரு துறைமுகம் உருவாகிற வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே இராமேஸ்வரம், மண்டபத்தில் சிறிய துறைமுகங்கள் இருக்கின்றன. அதுபோன்று குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான

வாய்ப்பு நிரம்ப இருக்கிறது. நாகப்பட்டினம் துறைமுகம் விரைவிலே உருவாவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் துறைமுக வளர்ச்சிக்காகவே Maritime Board—கடல்சார் வாரியம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கின்றார்கள். குளச்சல் துறைமுகத்தைப்பற்றி ஆய்வு செய்வதற்கும் `Consulting Engineering Service' என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிறுவனம் அதுகுறித்த ஆய்வுகளை நடத்திக் கொண்டிருக்கிறது. முழுமையான ஆய்வு முடிவு கிடைத்தவுடன் குளச்சல் துறைமுகம் விரிவுபடுத்தப்படும் என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச.க. வெங்கடேசன்.

திரு. ச.க. வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூருக்கு அருகிலுள்ள ஆலந்துறை கோட்டையில் துறைமுகம் அமைப்பதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் கடந்த வாரம் வந்து பார்வையிட்டார்கள். அந்தத் திட்டம் தொடங்கப்படும் என்று சற்று முன்பு அறிவித்தார்கள். அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அளித்துள்ள பதிலிலே இந்த விளக்கம் இருக்கிறது. செய்யூரில் துறைமுகம் உருவாவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பல ஆய்வுகள் தெரிவித்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் நானும் அதற்குரிய அதிகாரிகளை அழைத்துக்கொண்டு, சென்ற வாரம் சென்று பார்த்தேன். அதிகாரிகள் வந்து பார்த்தவுடனே இது ஒரு அற்புதமான துறைமுகமாக ஆகும், ஆக்கலாம் என்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே, அது குறித்தும் Consulting Engineering Service இடத்திலே நம்முடைய TACID நிறுவனம் ஆய்வு செய்கிற பொறுப்பை ஒப்படைத்திருக்கிறது. அந்த ஆய்வும் நடந்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆய்வு முடிவு இந்த மாத இறுதிக்குள்ளாகவோ, அல்லது அடுத்த மாத இறுதிக்குள்ளாகவோ கொடுக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அந்த ஆய்வு முடிவு வந்த பிறகு, இது குறித்து தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே கலந்து ஆலோசித்து, இறுதி முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. சண்முகம்.

திரு. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வினாவிலே குறிப்பிட்ட கடலூர் துறைமுகத்தைப்பற்றியும், இங்கே சென்னையிலே இருக்கின்ற துறைமுகம் நெரிசலான நிலையில் இருப்பதைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அதன் விளைவாக அடையார் பகுதியில் ஒரு துறைமுகத்தை அமைத்து, அங்கிருந்து, சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கும் மகாபலிபுரம், செய்யூர், பாண்டிச்சேரி, கடலூர் போன்ற இடங்களுக்குத் தரைப்போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கும், சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிப்பதற்கும், இப்படிப்பட்ட திட்டம் செயற்குறிப்பில் இருக்கிறதா என்பதை அறிய ஆவலோடு இருக்கின்றேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெண்ணாகரத்திலே துறைமுகமா? கேளுங்கள். திரு. ஜி. கே. மணி.

முற்பகல் 9-55

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டைய காலத்திலே கடல் கடந்து வாணிபம் செய்த பெருமை நம்முடைய தமிழகத்திற்கு இருக்கிறது. அந்த வகையிலே, நம்முடைய கடலூர் துறைமுகம் விரிவுபடுத்தப்பட்டால் மிகவும் பயனுள்ள வகையிலே இருக்கும் என்றாலும்கூட, இன்னும் அந்தத் துறைமுகம் விரிவுபடுத்தப்படாமல் இருக்கிறது. கிழக்குக் கடற்கரையிலே நிறைய துறைமுகங்கள் ஏற்படுவதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த வகையிலே, தரைவழிப் போக்குவரத்திலே, தற்போது போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. கன்னியாகுமரியிலேயிருந்து சென்னை வரையிலே பல்வேறு துறைமுகங்களை ஏற்படுத்தி கப்பல்களை விட்டு போக்குவரத்திற்காக ஆவன செய்வோம் என்று சொன்னால், மக்கள் போக்குவரத்திற்கு இன்னும் பயனுள்ள வகையிலே இருக்கும் என்ற காரணத்தினாலே, தமிழக அரசு, பயணிகள் போக்குவரத்திற்காக துறைமுகம் அமைப்பதற்காக ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1998 மே 4

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய துறைமுகங்களைக் கையாளுகிற பொறுப்பு மாநில அரசிற்கு இருக்கிறது என்பது ஒரு நல்ல செய்திதான். ஆனால், அதற்கு மூலதனம் 1,000 கோடி, 1,500 கோடி, 2,000 கோடி என்று தேவைப்படுகிறது. மத்திய அரசிற்கே இப்போது நிதி நிலைமையில் சிக்கல்கள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டு மூலதனங்கள் வரவேற்கப்படுகின்றன. புதிய பொருளாதாரக் கொள்கைப்பற்றி உங்களுக்குத் தெரியும். ஆகவே, மத்திய அரசிற்கே நிதி நெருக்கடி இருக்கிறபோது, மாநில அரசுக்கு நிதி நெருக்கடி இருப்பது இயற்கையே. அந்த நிதி நெருக்கடி இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு துறைமுகம் விரிவுபடுத்துவதற்கே ரூ. 800 கோடி, ரூ. 1,000 கோடி, ரூ.1,500 கோடி என்று தேவைப்படுகின்றது. அதற்குத் தேவையான நிதியாதாரங்களைப் பெறுகின்ற முயற்சியில் இன்று தமிழக அரசு ஈடுபட்டிருக்கிறது. ஆகவே, எந்தெந்தத் துறைமுகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம், முன்னுரிமை கொடுக்கலாம் என்பதை ஆய்விலே இருந்து தெரிந்து, அந்த ஆய்வு தெரிவிக்கின்ற கருத்தின் அடிப்படையிலே முன்னுரிமை வழங்குகிற சில திட்டங்கள் விரைவிலே எடுத்துக்கொள்ளப்படுமென்ற செய்தியை மட்டும் நான் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் துறைமுகம் மிகவும் தொன்மை வாய்ந்த துறைமுகமாகும். ஆனால், கடந்த 10 ஆண்டுகளாகச் செயல்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இதனால், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சை மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி பின்தங்கிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறந்த திருக்குவளைக்கு அருகிலே அந்தத் துறைமுகம் அமைந்திருக்கிறது. மேலும், மலேசியா, சிங்கப்பூர், ஜாவா போன்ற நாடுகளுக்கெல்லாம் அங்கேயிருந்து பயணிகள் சென்று கொண்டிருந்தனர். இப்போது அந்தத் துறைமுகம் இயங்காமல், அந்தப் பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிற காரணத்தினாலேயும், அது திருக்குவளைக்கு மிகவும் அருகில் இருக்கிற காரணத்தினாலேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் அந்தத் துறைமுகத்தை இயக்கிட ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

1998 மே 4]

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரை சாலையிலேயுள்ள நல்ல துறைமுகங்களிலே நாகப்பட்டினம் துறைமுகம் ஒரு நல்ல துறைமுகம்தான். வரலாற்றுச் சிறப்பும் அதற்குண்டு. பூம்புகார் துறைமுகம் அழிந்தபிறகு, நாகப்பட்டினம் துறைமுகமும், தொண்டி துறைமுகமும் பிரசித்திபெற்ற துறைமுகங்களாக இருந்தன என்பதும் உண்மைதான். ஆனால், இப்போது நாகப்பட்டினம் துறைமுகம் சற்று மேடிட்டு இருக்கிறது. சில தனியார் துறையினர் அல்லது மத்திய அரசு நிறுவனத்தினர் அங்கு சில தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் அந்தத் துறைமுகத்தை தங்களுடைய சொந்தத் துறைமுகம்போல பாவித்துக்கொள்கின்ற அனுமதியும் கொடுக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இன்னும் கூடிய விரைவில் அது குறித்து ஆய்வு செய்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடலூர் வருகை தந்தபோதுதான் முதன்முதலாக கடலூரிலிருந்து சென்னைக்கு Ferry Service விடுவதற்கான அந்தத் திட்டம் அவருடைய எண்ணத்திலே உருவாகி முதன்முதலாக தமிழகத்திலே அதை நடத்த வேண்டும் என்ற ஆவலோடு அன்றைக்கு முடிவு செய்தோம். பிறகு அதற்கான திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டன. இப்போது மேலும் நவீனப்படுத்தப்பட்டு, புதிய Technician புதிய பொறியியல் வல்லுநர்கள் எல்லாம் வந்திருக்கிற சூழ்நிலையில், அதைப் புதிய முறையிலே மீண்டும் தமிழகத்தில் அறிமுகப்படுத்தி, கடலூரிலிருந்து சென்னைக்கு உல்லாசப் பயணிகள் செல்லக் கூடிய Ferry Service ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கடலூருக்கும், கடலூரிலிருந்து சென்னைக்கும் பயணிகள் செல்வதற்கான ஒரு Ferry Service விடுவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதற்குப்பிறகு டெண்டரும் கோரப்பட்டது. அந்த டெண்டரிலே பலபேர் கலந்து கொண்டார்கள். ஆனால், ஒரு பயணிக்கு சென்னையிலிருந்து கடலூருக்குப் போக அல்லது கடலூரிலிருந்து சென்னைக்கு வர ரூ. 750-லிருந்து 1,000

வரையில் பயணக் கட்டணம் ஆகும் என்று அவர்கள் தெரிவித்ததோடு இந்தப் பயணக் கட்டணத்தை மாநில அரசு Subsidise பண்ண முன்வருமா என்றும் அவர்கள் கேட்டார்கள். தமிழக அரசு இதற்கு உதவித்தொகை வழங்க இயலாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால்கூட அவரே ஒரு Ferry Service நடத்தலாம். யார் முன் வந்தாலும் பயணிகள் போகின்ற அந்த Ferry Service நடத்துவதற்கு தமிழக அரசு அனுமதி தரத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 410, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-00

410—

இணைப்புச் சாலை அமைத்தல்

***9948—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், கடமலைக்குண்டு - மயிலாடும்பாறை ஒன்றியத்தில் மயிலாடும்பாறையிலிருந்து மூலக்கடை முத்தாலம்பாறை வழியாக எம்.கல்லுப்பட்டி வரை இணைப்புச் சாலை அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

13.2 கி.மீ. நீளமுள்ள இச்சாலை அதாவது மல்லபுரம் மயிலாடும்பாறை கி.மீ. 0/0-8/0,8/0,9/0-10/0 மற்றும் 10/0-13/2 வரையில் தார்ச்சாலை அமைத்து அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கி.மீ.8/0-9/0 அந்த ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இரண்டு கொண்டை ஊசி வளைவுகள் இருக்கின்றன. அவற்றில் தார்ச்சாலை அமைப்பதற்கு திருத்திய மதிப்பீடு ரூ.64,32,593/-க்கு தயாரிக்கப்பட்டு ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 411, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

411—

பகுதிநேர நியாய விலைக் கடை திறத்தல்

***6144—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், இமாபுரம் கூட்டுறவுக் கடையைப் பிரித்து கின்னணூரில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம் கின்னணூர் கிராமத்தில் 102 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், இமாபுரம்—மதுரா கின்னணூர், இமாபுரம் சாலையிலிருந்து 1¼ கிலோ மீட்டர் தூரமே உள்ளதாலும் இக்கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. ந. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடை திறப்பதற்கான அத்தனை சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன. கடந்த ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கிராமத்திற்கு வருகை தந்து இமாபுரம், கின்னணூர் ஆகிய இரண்டு கிராமங்களுக்கு இடையே உள்ள பிரச்சினையாலும், கடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலிலே ஏற்பட்ட சண்டை சச்சரவாலும் இந்தப் பகுதியிலே கண்டிப்பாக கடை திறக்க வேண்டும் என்று அங்கே முன்மொழிவுகள் எல்லாம் வாங்கிச் சென்று இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதி நேரக் கடையைத் திறக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நிகழ்வு காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதிப்பாரானால் இந்தக் கடையை அங்கே திறக்கலாம்.

[1998 மே 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 412, திரு. மு. பெ. சாமிநாதன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

412—

தொடக்கக் கூட்டுறவு வங்கியில் பணிமாற்றம்

***8198—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கக் கூட்டுறவு வங்கியில் பணிபுரியும் செயலாளர்களை பணிமாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிமாறுதலின்போது எவ்வகை வழிமுறை கடைபிடிக்கப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்போது பரிசீலனையில் இல்லை.

திரு. மு. பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமப்புறங்களிலே தொடக்கக் கூட்டுறவு வங்கியில் பணிபுரிகின்ற செயலாளர்கள் அங்கே ஒரு பெரிய ஜமீன்தாராகவும், தொழிலதிபராகவும்கூட விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், பல ஆண்டுக்காலமாக அந்தப் பணியிலே அவர்கள் தொடர்ந்து இருப்பதால் அந்தப் பணியின் மூலம் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றுகூட யாருக்கும் தெரிவதில்லை. இடையிலே கூட்டுறவுச் சங்கத்திற்கு தேர்தல்கூட இல்லாத நிலையில், மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால்கூட பல தவறான நடைமுறைகள் அங்கே நடைபெறுகின்ற காரணத்தினால் அந்தத் தொடக்கக் கூட்டுறவு வங்கியிலே பணிபுரிகின்ற செயலாளர்களை அடிக்கடி இடம் மாற்றம் செய்தால்தான் அங்கே நடக்கக்கூடிய தவறுகளைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தச் செயலாளர்களை வேறு இடத்திற்குப் பணி மாற்றம் செய்ய ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1998 மே 4]

மாண்புமிகு திரு. கா. நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் இந்தச் செயலாளர்களை எல்லாம் மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அவர்கள் அத்தனை பேரையும் Common cadre-களாகக் கொண்டுவர வேண்டும் என்று முயற்சி எடுத்து முதல் கட்டமாக மத்திய வங்கிகளிலே பணியாற்றுகின்ற செயலாளர்களை பொதுத் தொகுதியின்கீழே கொண்டு வந்தோம். அவர்கள் அதை எதிர்த்து நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கிறார்கள். நீதிமன்றத்திலே இந்தப் பிரச்சினை நிலுவையில் இருக்கின்ற காரணத்தால் தொடர்ந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலே இருக்கின்ற செயலாளர்களை Common cadre-ல் கொண்டு வருவதை நிறுத்தி வைத்திருக்கிறோம். தொடர்ந்து நீதிமன்றத்திலே அதை வாதாடி வெற்றி பெற்று நிச்சயமாக இவர்களையும் அந்த Common cadre-களாக்கும் முயற்சியை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்கூட மத்திய வங்கியினுடைய செயலாளர்களை எல்லாம் மாவட்டம்விட்டு மாவட்டம் மாற்ற வேண்டும் என்ற ஒரு ஆணையைப் பிறப்பித்தார்கள். பிறகு, திடீரென்று எல்லோருமே ஒன்றாகக் கூட்டுச் சேர்ந்து அவர்கள் மீண்டும் அரசிடம் கோரிக்கை வைத்து அப்போது அதைத் தடுத்து நிறுத்திவிட்டார்கள். மீண்டும் இந்த அரசில் நீங்கள் ஆணை பிறப்பித்து அது நீதிமன்றத்தில் இருக்கிறது. இவர்களை எல்லாம் மாவட்டம்விட்டு மாவட்டம் மாற்றினால்தான் ஓரளவுக்கு இந்தக் கூட்டுறவுத் துறையை நாம் பாதுகாக்க முடியும். இல்லையென்று சொன்னால் ஒரே தொடக்க வேளாண்மையினுடைய செயலாளரோ...(மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொல்கிறார்களே; அதற்குமேலே பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்.?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் இருப்பது மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய Transfer பொறுத்துதான் இருக்கிறதே ஒழிய இந்தத் தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்து நீதிமன்றத்தில் இல்லை. அதுதான் என்னுடைய கூற்று. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயலாளரையும் மற்ற எல்லோரையும் Common category-யில் கொண்டு வந்து இவர்களை மாவட்டம்விட்டு மாவட்டம், இவர்கள் விரும்புகிற இடத்தில்கூடக் கொடுக்கலாம். ஆனால், ஒரே இடத்திலே தொடர்ந்து 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று ஒருவர் பணியாற்றுகிறபோதுதான் அங்கே பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. ஆகவே, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை, 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்களை மாறுதல் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய வங்கி செயலாளர்களுடைய பிரச்சினை நீதிமன்றத்தில் முடிந்தவுடன் தொடர்ந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய செயலாளர்களையும் Common cadre-ல் கொண்டுவர இந்த அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஆர். சரஸ்வதி.

திருமதி ஆர். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் செயலாளர்கள் மற்றும் எழுத்தர்கள் நிலையில் பணியாற்றுகிறவர்களை மத்தியக் கூட்டுறவு வங்கியில் பணி உயர்வு செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய வங்கியில் உள்ள தொழிற்சங்கங்களும் இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் இருக்கிற தகுதி வாய்ந்தவர்கள் எல்லாம் மத்திய வங்கியில் பணியமர்த்தப்பட வேண்டும் என்றும் 25 சதவீதம் வரை தங்களுக்கு அந்த இட ஒதுக்கீடு வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எங்களுக்கு இருக்கிற சங்கடம் என்னவென்றால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மட்டும் மத்திய வங்கியோடு தொடர்பு கொண்டது அல்ல, கிட்டத்தட்ட 20 வகையான சங்கங்களுக்கு மத்திய வங்கியோடு தொடர்பு இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு சங்கத்திலும்

பணியாற்றுகிறவர்கள் தங்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று அதில் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுவரை அதிலே தகுதி வாய்ந்த நபர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகக் கேட்டு அவர்கள் அதிலே 11 சதவீதம், 12 சதவீதம் வரை தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள். தொடர்ந்து அந்த முறைதான் கடைபிடிக்க இயலும். அவர்களுக்குத் தனியாக இட ஒதுக்கீடு என்று செய்ய இயலாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம். உங்களுடைய பிரச்சினையைக் கேட்க அனுமதி கொடுக்கிறேன்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியோடு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு அவசியமான விளக்கம் கேட்டு அதன்மீது தீர்வு காண வேண்டும் என்ற அவசியம் இருக்கிற காரணத்தால் அனுமதி கேட்டு இருக்கிறேன். நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூறியிருக்கிறேன். ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக விவசாயிகளுடைய நெல் கொள்முதல் செய்வதில் இப்போது பிரச்சினை இருக்கிறது என்று நான் அப்போது சொன்னபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடு செய்யப்படும், தேங்கி இருக்கிற நெல் உடனடியாகக் கொள்முதல் செய்யப்படும், சாக்கு இல்லை, பணம் இல்லை என்ற பிரச்சினை இல்லை என்ற நிலையை எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் கூறக்கூடாது என்று சொன்னார்கள். இப்போது, திரும்பவும் 3 தினங்களாக நான் மாவட்டத்திலுள்ள நிலைகளை எல்லாம் அறிந்து வந்திருக்கிறேன். ஆகவே, நேரில் அறிந்து வந்த நிலையின் அடிப்படையில் இப்போது மூடியிருக்கிற கொள்முதல் நிலையங்களில் 500 மூட்டையிலிருந்து 2 ஆயிரம் மூட்டை வரையில் கொள்முதல் செய்யப்படாமல் அந்தக் கொள்முதல் நிலையங்களில் தேங்கி இருக்கின்றன. அங்கே பணம் இல்லை, சாக்கு இல்லை என்ற காரணம் கூறப்படுகிறது. ஆகவே, அதிகாரிகள் தவறான தகவலை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்து. ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்பவும்

அந்தத் தகவலைக் கூறி உடனடியாக அந்தக் கொள்முதல் நிலையங்களில் தேங்கியிருக்கிற நெல்லைக் கொள்முதல் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 2,3 நாட்களுக்கு முன்பு விளக்கமாக இதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். விவசாயிகளுக்கு நன்மை தரும் பொருட்டுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட 35 ரூபாய் கூடுதலாகத் தந்து நெல் கொள்முதல் செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட குறுவைப் பருவத்திலே 7 லட்சம் டன்களும், இந்த சம்பா பருவத்திலே 12 லட்சம் டன்களும் நாம் கொள்முதல் செய்திருக்கிறோம். ஆனால் இதிலே விவசாயிகளுடைய நெல்லுக்குப் பதிலாக சில வியாபாரிகள் உள்ளே இடையிலே புகுந்து வெளியிலே குறைவான விலைக்கு வாங்கிக்கொண்டு வந்து இந்த 35 ரூபாய் மானியத்தை அவர்கள் பெற்றுக்கொண்டு விடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் 500 மூட்டையிலிருந்து 2 ஆயிரம் மூட்டை வரை இருப்பு இருப்பதாக இங்கே சொல்லுகிறார்கள். உதாரணமாக நான் ஒன்றை அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த 2 ஆயிரம் மூட்டையை எடுத்தால் மறுநாள், இன்னும் 2 ஆயிரம் மூட்டை அங்கே வரும். அது விவசாயிகளுடைய மூட்டை அல்ல. வியாபாரிகளுடைய மூட்டை. அதனால்தான் அரசு கொள்முதல் செய்வதிலே கொஞ்சம் தயக்கம் காட்டுகிறது. அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். இவர்கள் விவசாயிகள்தான் என்று கூறுவார்களானால் நாம் அந்த நெல்லை எடுத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலே இப்போது விவசாயிகள் வைத்திருக்கிற இருப்புகளைக் கொள்முதல் செய்தால் மீண்டும் வியாபாரிகள் கொண்டு வந்து வைத்து விடுவார்கள் என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களையும், மாண்புமிகு உணவுத் துறை

அமைச்சரவர்களையும் கேட்டுக்கொள்வது, இன்றையதினம் எந்தெந்த நேரடிக் கொள்முதல் நிலையங்களில் நெல் வைக்கப்பட்டிருக்கிறதோ அதுவரையிலும் எடுத்துக்கொண்டு, இனிமேல் எடுக்க முடியாது என்கிற ஒரு அறிவிப்பை அரசு அறிவிக்குமா? இப்போது இருப்பில் வைத்திருக்கக்கூடிய நெல்லையாவது எடுத்துக்கொள்வதற்கான உத்தரவை அரசு அறிவிக்குமா என்பதுதான் இன்றைக்கிருக்கிற கேள்வி. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அறிவிப்பு ஒரு வாரத்திற்கு முன்பாகவே அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற துறையினுடைய அதிகாரிகள், விவசாயிகளிடம் தெரிவித்து இருக்கிறார்கள். 30ஆம் தேதி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மூட இருக்கிறோம், விவசாயிகள் இருக்கின்ற நெல்லைப் போடுவதாக இருந்தால் கொண்டு வந்து போடுங்கள் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். எங்கள் துறையினுடைய அதிகாரிகள் இப்போது இருக்கின்ற நெல் எல்லாம் வியாபாரிகள் கொண்டு வந்து அடுக்கி வைததிருப்பது என்று சொல்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்பு கொண்டு, விவசாயிகளுடைய நெல்லாக இருந்தால், இருக்கின்ற நெல்லை எடுத்துக்கொள்வதற்குரிய முயற்சியை மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பா. அருண்குமார்.

திரு. பா. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே தொடக்கக் கூட்டுறவு வங்கியிலே பணி புரியக்கூடிய செயலாளர்கள் பல போலிப் பெயர்களிலே கடன்களைக் கொடுத்து, கொள்ளையடித்திருக்கின்றார்கள். என்னுடைய தொகுதியில்கூட, மருதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலேகூட அந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. ஆகவே, இதுவரை எத்தனை செயலாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வியாகக் கேட்டால் முழு விவரத்தை என்னால் அளிக்க இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. அழகிரி

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோழியிலிருந்து முட்டை வந்ததா, முட்டையிலிருந்து கோழி வந்ததா என்பதைப்போல, வியாபாரிகளுடைய நெல், வியாபாரிகளுடைய நெல் என்று உணவு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். வியாபாரிகளுக்கு ஏது நெல்? விவசாயிகளிடம் நெல் வாங்காத காரணத்தினால், விவசாயிகள் அப்போதைக்குப் பணம் தேவைப்பட்ட காரணத்தினால், வியாபாரிகளிடம் கொண்டுபோய் விற்றார்கள். என்னுடைய கிராமத்திலேகூட நெல் போடப்பட்டபொழுது ஒரு நாளைக்கு 400 மூட்டைதான் எடுக்க முடியுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். 400-க்குமேல் அவர்கள் எங்கே கொண்டு போய் போடுவது? எனவே, அன்றைய பணத் தேவைக்காக அன்றைக்கு வியாபாரிகளிடம் போட்டார்கள். அதைப்போல விவசாயிகள் நிறையபேர் கையிலே பணம் வேண்டுமென்பதற்காக வியாபாரிகளிடம் போட்டார்களேயொழிய, வியாபாரிகளுக்கு எந்தவகையிலும் **தனியாக** நெல் வந்துவிடவில்லை. எனவே, அவற்றை எடுத்துக்கொண்டால்தான் விவசாயிகளுடைய பிரச்சினை தீர்க்கப்படும். இன்னும் விவசாயிகளிடம் நெல் இருக்கிறது. எடுக்காத காரணத்தினால் விவசாயிகள் வைத்திருக்கிறார்கள். கஷ்டம் வருகிறபொழுது வியாபாரிகளிடம் விற்கிறார்கள். எனவே, எல்லா நெல்லையும் உடனடியாக விவசாயிகளிடமிருந்து வாங்குவதற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் - உறுப்பினர்களெல்லாம் – பேசுகின்றபொழுது ஏதோ விவசாயிகள்மீது இவர்களுக்கு மட்டும்தான் அக்கறை இருக்கிறது, மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பதைப்போல இங்கே பேசுகிறார்கள். மத்திய அரசு நிர்ணயித்த விலையை 15 நாட்களுக்கு முன்னதாகவே தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு, அப்படி ஏற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல், 35 ரூபாய் கூடுதலாக இடைநிலைச் செலவாகத் தந்து, கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு மானியத்தைத் தந்திருக்கிறார்கள் நம்முடைய

முதல்வரவர்கள். இதிலே வியாபாரிகள் என்று சொன்னால், விவசாயிகளிடம் ரூ. 10,100 என்று முன்னாலேயே அட்வான்சாகத் தந்திருந்து, விவசாயிகளிடமிருந்து நெல்லைப் பெற்றுக்கொண்டு அவர்கள் அதிக இலாபம் வைத்து விற்பதற்காக இந்த மானியம் தரப்படுவது இல்லை. விவசாயிகளுக்காகத் தரப்படக்கூடிய மானியம் விவசாயிகளுக்குச் செல்ல வேண்டுமென்பதுதான் எங்களுடைய முதல் குறிக்கோள். இதிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறுதியிட்டுச் சொல்வார்களேயானால், இது விவசாயிகளுடைய நெல்தான் என்றால் நிச்சயமாக நாங்கள் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். தொடர்ந்து இப்பொழுது 3-வது போக சாகுபடியும் ஆரம்பித்து அந்த அறுவடை நெல் இப்போது வர ஆரம்பித்து இருக்கிறது. அதனுடைய பிரச்சினையையும் நாங்கள் இப்போது தாங்க இருக்கிறோம். இப்பொழுதே கிட்டத்தட்ட 13 இலட்சம் டன் அளவுக்கு நெல் கையிருப்பு இருக்கிறது. ஆனால் தமிழ்நாடு அரசிலே மொத்தமாக இருப்பு வைத்துக்கொள்ள கிட்டங்கி வசதி என்பது ஆறே கால் இலட்சம் டன்னுக்குத்தான் இருக்கிறது. இருந்தாலும்கூட, வெளியிடங்களிலே, அதைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம். நீங்களே இன்றைக்கு விவசாயிகளுடைய நெல் எவ்வளவு ஈரமாக இருந்தாலும், மோசமாக இருந்தாலும் வாங்குங்கள் என்று சொல்வீர்கள். 2 மாதங்கள் கழித்து அரிசி மோசமாக இருக்கிறது என்று சொல்வீர்கள். இரண்டையும் கலந்து பேசித்தான் செய்ய வேண்டியிருக்கிறது. விவசாயிகளுடைய நெல் என்றால் நிச்சயமாக வாங்கிக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 413, திரு. வி.பி. இராசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-15

413—

படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்கு உதவித் தொகை

***1787—திரு. வி.பி. இராசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதா மாதம் ரூ.50, ரூ.75 என்று வழங்கப்பட்ட உதவித்தொகை மீண்டும் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி.பி. இராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் படித்துவிட்டு வேலையற்று இருக்கிற இளைஞர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், ஏதாவது ஒரு வகையில், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்து அவர்கள் வாழ்க்கையில் வளம் சேர்த்தது போல, எட்டாம் வகுப்பு படித்த பெண் பிள்ளைகளுக்குத் திருமணத்திற்கு என்று 10,000 ரூபாய் வழங்கியதைப் போல, இந்த இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நிதியுதவி அளிக்க முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் பொதுத் துறை நிறுவனங்களிலாவது இடஒதுக்கீடு முறையில் இவர்களுக்கு வேலை கிடைக்க மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி ஒரு நல்ல முடிவை அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம் நடைமுறையில் இல்லை. மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலமாக பல இளைஞர்கள் பயனடைந்து வருகிறார்கள். அதோடு, பார்வையற்ற வேலையற்றோருக்கு நிவாரணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உதாரணமாக, கண் பார்வையற்ற வேலையற்ற படித்த பட்டதாரிகளுக்கு, முதுகலைப் பட்டதாரிகளுக்கு மாதம் 250 ரூபாயும், P.U.C. Higher Secondary படித்தவர்களுக்கு மாதம் 200 ரூபாயும், S.S.L.C.-க்கு கீழ் படித்தவர்களுக்கு 150 ரூபாயும் வழங்கப்படுகின்றது. வேலைவாய்ப்பு வழங்குவதிலே விதிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. உறுப்பினர் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்தை அரசு நடைமுறைப்படுத்த இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 414, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

414—

எடைக் கருவிகளைச் சரிபார்த்தல்

***8833— திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோதனை செய்து முத்திரையிட்ட பின்னரும், குறைபாடுள்ள மீட்டர் அளவுகோல், தராசு ஆகிய எடைக்கருவிகளைப் பயன்படுத்துவோர் மீது, திடீர் சோதனை செய்து, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் எத்தனைக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பாண்டில் 27,132 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 415, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

415—

பஞ்சுக்கான கடன் தொகையைச் செலுத்துதல்

***10673— திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம், வேலூர், மேலூர், திண்டிவனம், புதுக்கோட்டை, மசோரியர், மதுரை, கரூர் ஆகிய அரசு கூட்டுறவு நூற்பாலைகள், தமிழ்நாடு பருத்தி-பஞ்சு அரவையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பிலிருந்து ரூ.9.00 கோடி பெறுமான பஞ்சை கடனாக

வாங்கி இன்னும் அதற்குரிய தொகையைச் செலுத்தாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செலுத்தப்படும்?

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பருத்தி - பஞ்சு அரவையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வியாழக்கிழமையன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் ஒரு அறிக்கையை வைத்து, ஏற்கெனவே இதுபோன்ற தமிழ்நாடு பருத்தி-பஞ்சு அரவையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடைய கூட்டமைப்பிலிருந்து அரசு பஞ்சு வாங்கியதினுடைய கடனை எல்லாம் விரைவில் அரசு செலுத்திவிடும் என்கிற ஒரு நல்ல செய்தியை இந்த மாமன்றத்திற்கு அறிவித்தார்கள். அந்தப் பஞ்சு விற்பனையாளர்கள் எல்லாம் இப்போது மகிழ்ச்சிக் கடலிலே திளைத்திருக்கிறார்கள் என்பது உண்மை. கர்ப்பிணி தாய் இப்போது பிரசவ வார்டிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார். குழந்தை எப்போது பிறக்கும் என்பதை due-date வைத்து டாக்டர்கள் உடனடியாகச் சொல்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். எப்போது இந்தப் பணம் அந்தப் பஞ்சு வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தன்னுடைய கேள்வியிலேயே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவில் அரசு அளிக்க வேண்டிய தொகையை செலுத்திவிடும் என்று தெரிவித்ததைச் சுட்டிக்காட்டி நன்றி தெரிவித்துள்ளார்கள். ஆனால், சில நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலை இதிலே இருக்கிறது.

நபார்டோடு பேச வேண்டும்: பஞ்சு கொடுத்தவர்களோடு பேச வேண்டும். எங்களுடைய தகுதியைக் கடன் வாங்குவதற்கு உயர்த்திக் கொடுக்கவேண்டும். என்று மீண்டும் அவர்கள் அரசிடம் அணுக வேண்டும் இவற்றையெல்லாம் உயர்த்துவதன் மூலமாகத்தான் இந்தப் பணத்தை அளிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. விரைவில் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சு ஆலைகளுக்குப் பஞ்சு கொடுத்த வகையிலே பணம் பாக்கி இருக்கிறது. அந்தப் பாக்கியை எந்தக் காரணத்திற்காகக் கொடுக்க மறுத்தார்கள்? அதிலே ஏதாவது முறைகேடுகள் நடைபெற்ற காரணத்தாலே கொடுக்க மறுக்கப்பட்டதா அல்லது தொழிற்சாலை நஷ்டத்திலே இயங்கிய காரணத்தாலே கொடுக்க மறுக்கப்பட்டதா? இன்றைக்குப் பஞ்சு கொடுத்தவர்களுக்கு அரசாங்கம் கொடுத்த Cheque திரும்பி வந்த செய்தியெல்லாம் இருக்கிறது. பஞ்சை கொடுத்த ஒருவர் இறந்தே போய்விட்டார். இவையெல்லாம் கடந்த காலத்திலே, கடந்த ஆட்சியிலே நடைபெற்ற செயல்கள். எனவே, இந்த அரசு பஞ்சு கொடுத்த வகையிலே என்னென்ன முறைகேடுகள் நடைபெற்றன - இவையெல்லாம் கடந்த காலத்தில்தான் நடைபெற்றன - என்பதையெல்லாம் முழுமையாக விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விளக்கமாகச் சொல்கின்ற அளவுக்கு என்னுடைய நிலை இல்லை. கடந்த ஆட்சியிலே பஞ்சு வாங்காமலேயேகூட, பஞ்சு வாங்கியதாகக் கணக்கு எழுதப்பட்டது. இப்படிப் பல அணுகுமுறைகளில் அவர்கள் தவறு செய்ததன் காரணமாக, நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது அனைத்து ஆலைகளையும் மூடக்கூடிய கட்டாயத்திலே,

பஞ்சு வாங்கிய இடத்திற்கு பணம் கொடுக்க இயலாத நிலையும். பஞ்சுக்குக் கொடுக்கப்பட்ட விலை, பஞ்சு விலையைவிட அதிகம் போடப்பட்டு எடுக்கப்பட்ட நிலையாலும், நூலைக் கொடுத்தபோது. நூலின் விலையைவிடக் குறைவாகக் கொடுத்து வேறு முறையில் எடுத்துக் கொண்ட வகையாலும், மொத்தம் 18 ஆலைகள் ஓடமுடியாத நிலையில் ஏற்பட்ட கடன்தான் இந்தப் பஞ்சுக் கடன். ஆனால், இவையெல்லாம் இன்று முறைப்படுத்தப்பட்டு எல்லாத் தரப்பினரிடமும் ஒவ்வொரு அளவிலும் பேசி முடித்து, இப்பொழுது அதற்குத் தகுந்த ஆதாரத்தை அரசிடம் கொடுக்கின்ற சக்தி அந்த நூற்பாலைகளுக்கு உருவாக்கப்பட்டு, இந்தக் கடன் அவர்களுக்குத் தவறான முறையில் கிடைத்திருந்தாலும், அவர்கள் அதனைப் பெற்றுச் சென்றிருந்தாலும், அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், வேறு வழியில்லாத காரணத்தால் அரசு நியாயமாகச் செய்ய வேண்டிய நிலையில் இந்தத் தொகையை திருப்பிக் கொடுக்க முடிவு எடுத்திருக்கிறது. விரைவில் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் NABARD மூலம் பேச்சு வார்த்தை நடத்தி, அதை Settle செய்வதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே மூன்று ஆண்டுகளாக NABARD மூலம் பேசிப் பேசி, கொடுப்பதாகச் சொல்லிச் சொல்லி, காலம் கடத்திவிட்ட நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்குத் தீர்வு கண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்தப் பிரச்சினையின் காரணமாக, தேனி பகுதியிலே இராஜகோபாலன் என்பவர், அதைப்போல சப்பாத்தி வீராசாமி, அதைப் போல சியாமளா மல்லையா, ஜ ஙெ்கு ரவி, அங்கம்மாள் போன்றவர்களெல்லாம் தற்கொலை செய்துகொண்டு விட்டார்கள், அவர்களுக்கு வரவேண்டிய பணம் வராத காரணத்தால், அவர்கள் விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் பதில் சொல்ல முடியாத சூழ்நிலையிலே, அவர்களெல்லாம் தற்கொலை செய்துகொண்டு விட்ட காரணத்தாலே, மீண்டும் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் NABARD மூலம் பேச்சு வார்த்தை நடத்துங்கள், அந்தப் பணத்தைப்

பெறுங்கள். ஆனால், அதற்கு முன்பு அரசே இதற்கு ஏதாவது உடனடியாக ஏற்பாடு செய்து, 15 நாட்களுக்குள்ளோ அல்லது ஒரு மாதகாலத்திற்குள்ளோ எல்லோருக்கும் பணத்தைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? NABARD என்று சொல்லி காலம் தாழ்த்தாமல் அரசே இதற்கு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே இந்தப் பஞ்சுக் கடனுக்குச் சொந்தக்காரர்கள் அவர்களா என்ற கேள்வி பல இடங்களில் எழுப்பப்பட்டுள்ளது. யார் யார் பெயரையோ பயன்படுத்தி இந்தப் பஞ்சை எப்படியாவது கூட்டுறவு ஆலைகளுக்கு நட்டம் ஏற்படுத்துவதற்கு, பச்சையாக தமிழ் வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால், குருட்டுப் பருத்தி என்று சொல்வார்கள், அப்படிப்பட்ட பருத்திகளையெல்லாம், விற்க இயலாத பருத்திகளையெல்லாம் யாருடைய கணக்கிலோ உள்ளே கொண்டு வந்து வைத்து, கணக்கு எழுதியிருக்கிறார்கள். அதுதானே ஒழிய, உண்மையிலேயே இறந்தவர்களில்கூட ஒருசிலர், சில பேரிடம் போய் மாட்டிக்கொண்ட காரணத்தால், தங்களுக்கு இந்த நிலை ஏற்பட்டு விட்டதே என்ற அச்சத்தின் காரணமாக இந்த நிலையெல்லாம் ஏற்பட்டது. ஆனால், அதையெல்லாம் திட்டமிட்டுச் செய்த சதிகாரர்கள் இன்னும் சிலபேர் இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் பணத்தை எப்படியாவது நாம் கொடுத்துவிட வேண்டுமென்று முடிவு எடுத்தார்கள் NABARD உடன் பேசினால்தான் அதற்குரிய வட்டித் தொகையை அதிகப்படுத்தாமல், ஆலையையும் எதிர்காலத்தில் சிரமமில்லாமல் ஓட்ட முடியும், கடன் வாங்குகின்ற சக்தியையும் முறைப்படுத்தினால்தான் ஆலையை ஓட்ட முடியும். சங்கத்தையும் நிறைவாக நடத்த முடியும், இப்படிப்பட்ட கடனையும் திருப்பித் தர முடியும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 416, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

[1998 மே 4

416—

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்.

***10057— திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் மாவட்டத்தில் பின்தங்கிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வறுமைக்கோட்டிற்குக் கீழ் கிராமப்புறங்களில் வாழும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு மட்டும் இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டமானது 1997-98ஆம் ஆண்டிலிருந்து பிற்படுத்தப்பட்டோருக்கும், முன்னேறிய பிரிவினருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் 1997-98ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சம் செலவில் 2,654 பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 417, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

417—

பகுதிநேர கால்நடை மருந்தகம்.

***10124— திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளத்திலுள்ள பகுதிநேர கால்நடை மருந்தகம் நீண்ட காலமாக செயல்படாமல் உள்ளது அரசிற்குத் தெரியுமா?

1998 மே 4]

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வடக்கன்குளத்தில் போதிய கால்நடைகள் சிகிச்சைக்கு வராததால் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. அதிகமாக கால்நடைகள் அங்கிருக்கின்றன. ஏற்கெனவே மிக நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருந்த அந்தக் கால்நடை மருத்துவமனை பழுதடைந்து, மருத்துவர்களே உள்ளே செல்ல முடியாத ஒரு மிக மோசமான நிலைக்குச் சென்றுவிட்டது. நாம் பொறுப்பேற்ற பின்பு, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 5 பகுதி நேர மருத்துவ நிலையங்கள் தொடங்கப்படும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே 5 கிராமங்களின் பெயர்களை எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆனால், அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தொன்மையான அந்தக் கால்நடை மருத்துவமனையை—அங்கே கட்டடங்கள் இருக்கின்றன; நிலங்கள் இருக்கின்றன—மீண்டும் திறப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1962 ஆம் வருடம் ஜுன் மாதம் முதல் 1969 டிசம்பர் வரை வடக்கன்குளம் கால்நடை மருத்துவ நிலையம் உதவி சிகிச்சை மையமாக செயல்பட்டிருக்கிறது. 1970 சனவரி மாதம் முதல் கால்நடைக் கிளை நிலையமாகச் செயல்பட்டிருக்கிறது. 1977 மே மாதம் முதல் 1985 மே வரை முகாம் கால்நடை மருந்தகமாக வாரத்திற்கு ஒரு முறை செயல்பட்டு வந்திருக்கிறது. தொடர்ந்து வடக்கன்குளத்தில் போதிய கால்நடைகள் சிகிச்சைக்கு வராததால் இந்நிலையம் செயல்படவில்லை. வடக்கன்குளத்தில் பகுதிநேர கால்நடை நிலையம் அமைப்பது தொடர்பாக இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ள 5 இடங்களில் வடக்கன்குளம் கிராமமும் ஒன்றாகும்.

[1998 மே 4

எனவே, வடக்கன்குளத்தில் பகுதிநேர கால்நடை மருத்துவ நிலையம் அமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 418, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

418—

கால்நடை கிளை மருத்துவமனை தொடங்குதல்

***10636—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதியில் திருவைகாவூரில் கால்நடை கிளை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. கருப்பண்ண உடையார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்த அவையிலே வட்டாரத்திற்கு 5 கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஆதனூரிலிருந்த கால்நடை கிளை நிலையம் மருந்தகமாக மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. திருவைகாவூர், அண்டகுடி, இன்னம்பூர், அகராத்தூர், சேங்கலூரர் ஆகிய 5 இடங்களில் கால்நடை கிளைநிலையம் அமைக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, இந்த இடங்களில் கால்நடை கிளை நிலையம் ஆரம்பிக்கப்படுமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

1998 மே 4]

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பாபநாசம் தொகுதியிலுள்ள திருவைகாவூருக்கு அருகில், 8 கிலோமீட்டர் தூரத்தில் சுவாமிமலையில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. மேலும் திருவைகாவூர் கிராமத்தில் ஒரு பகுதிநேர கால்நடை கிளை நிலையம் மூலமாக அங்கேயுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் கருவூட்டல் பணி வாரத்திற்கு 3 நாட்கள் செய்யப்படுவதாக துறையின் மூலமாக பதில் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். அதைக் கவனித்து, செயல்படுகின்ற வகையில் ஆலோசனைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. மோகன் கந்தசாமி.

திரு. ப. மோகன் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு என்னுடைய பொங்கலூர் தொகுதியிலே சின்னமோளர்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகம் அரசால் கொடுக்கப்பட்டு, அது தற்காலிகமாக உப்பாறுடேமில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஊரிலேயே அது செயல்பட வேண்டுமென்ற காரணத்தால், அந்த ஊர் பொது மக்கள் அதற்காக இடம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், உப்பாறுடேமில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்தக் கால்நடை மருத்துவமனையை சின்னமோளர்பட்டியில் உருவாக்குவதற்கு அரசு அதிகாரிகள் ஏனோ தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகள் அங்கே மிகவும் சிரமப்படுவதால் நம்முடைய ஆட்சியிலே அந்த இடத்திற்கு கால்நடை மருத்துவமனையைத் தர ஆணையிட்டீர்கள். ஆகவே, குண்டடம் ஒன்றியத்தில் உள்ள சின்னமோளர்பட்டியில் கால்நடை மருந்தகத்தை உருவாக்குவதற்கு அதிகாரிகளுக்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற பேரவை உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கால்நடை மருந்தகத்திற்கு ஒரு ஏக்கர் நிலமும், ஓர் ஒன்றியத்தில் முதல் கால்நடை மருத்துவமனை தோற்றுவிக்கப்பட வேண்டுமானால் 25 விழுக்காடும்,

[1998 மே 4

இரண்டாவது கால்நடை மருத்துவமனை தோற்றுவிக்கப்பட வேண்டுமானால் 50 விழுக்காடும், மூன்றாவது கால்நடை மருத்துவமனை தோற்றுவிக்கப்பட வேண்டுமானால் 75 விழுக்காடும். அந்த ஒன்றியத்தின் மூலம் நிதி அளிக்கப்படும் என்று தீர்மானம் போட்டுத் தருவார்களேயானால், அதைக் கவனித்துப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. அடுத்து, திருமதி வாசுகி முருகேசன்.

திருமதி வாசுகி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பார்வைக் கிளை நிலையங்களுக்கு மருத்துவர்கள் வாரத்தில் மூன்று நாட்களுக்கு மட்டுமே வருகை தருகிறார்கள். எனவே, பணி நாட்கள் முழுவதும் மருத்துவர்கள் வந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளை நிலையத்தில்தான் ஒரு கால்நடை ஆய்வாளர் வாரம் ஏழு நாட்களும் பணியாற்றுவார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 2126 பார்வைக் கிளை நிலையங்கள் செயல்படும் என்று அறிவித்தார்கள். எனவே, கிளை நிலையங்களில் பணியாற்றுகின்ற கால்நடை ஆய்வாளர்கள் அந்த 2126 பார்வைக் கிளை நிலையங்களுக்கும் வாரத்திற்கு மூன்று நாட்கள் சென்று பணியாற்ற வேண்டும் என்பதுதான் தற்போதுள்ள விதி. எனவே, வாரத்திற்கு மூன்று நாட்கள்தான் அவர்களால் பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 419, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

1998 மே 4]

419—

கல்வி, தொழில்நுட்ப மையம் அமைத்தல்

***13448— திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, உடையார்பாளையம் வட்டத்திற்குப் பார்வையற்றோர், மூளை வளர்ச்சி குன்றியவர், உடல் ஊனமுற்றவர் பயன்பெறுமாறு கல்வி, தொழில்நுட்பம் கற்றுத் தரும் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் இத்தகைய பள்ளிகள் பல செயல்படுவதால் ஆண்டிமடம் தொகுதி, உடையார்பாளையம் வட்டத்திற்குத் தனியாகப் பார்வையற்றோர், மூளைவளர்ச்சி குன்றியோர், உடல் ஊனமுற்றோர் பயன்பெறுமாறு கல்வி, தொழில்நுட்பம் கற்றுத் தரும் மையம் அமைப்பதைப் பற்றிய கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 420, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

420—

பழனியைச் சுற்றுலாத் தலமாக்குதல்

***7086— திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனி நகரைச் சுற்றுலாத் தலமாக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பழனி, தமிழகத்தில் புகழ் பெற்ற யாத்திரிகர் நகரம். வெளிமாநிலப் பயணிகளும் இங்கு வந்து செல்கின்றனர். தமிழக சுற்றுலா வரைபடத்தில் பழனிக்குச் சிறப்பான இடமுண்டு.

(ஆ) அரசு எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. எந்த ஒரு சிறப்பு மிக்க இடம் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவருகிறதோ அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்து, அடிப்படை வசதிகளை அரசு செய்து தருகின்றது. மேலும், பழனியில் அனைத்து அடிப்படை வசதிகளும் தற்போது உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. பூவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி நகரம் புண்ணிய ஸ்தலம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அங்கு சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக வருகின்ற காரணத்தினால், சென்னை மாநகரத்தில் கோல்டன் பீச், எம்.ஜி.எம். போன்றவை இருப்பதைப்போன்று, பழனி நகரத்திலும் தொடர்ந்து இயங்குகின்ற வகையில், ஒரு பொருட்காட்சியை அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் மூலமாக பொருட்காட்சி அமைக்கக்கூடிய அளவிற்கு அனைத்து வசதிகளும் அந்தப் பகுதியில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கபெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

(அ) சங்கரன்கோயில் நகர தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஆலங்குளம் பகுதிக்கு தனித் திட்டம் கொண்டு வருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு திரு. சொ. கருப்பசாமி அவர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் நகரப் பகுதிக்கு வருகின்ற தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், மேலும் ஆலங்குளம் பகுதியையும், 73 கிராமங்களையும் கூடுதலாகச் சேர்க்கும் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, தனித் திட்டமாகக் கொண்டுவருவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தாமிரபரணி படுகையில் 6 கிணறுகள் அமைத்து 7.2 மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு எடுத்து, கண்டப்பட்டி என்ற இடத்தில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு, சங்கரன்கோவில் மற்றும் 88 வழியோர குடியிருப்புகளுக்கு ரூ. 12.91 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டம் தற்போது பயனில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின் மூலம், தற்போது சங்கரன்கோவில் நகராட்சிக்கு நாளொன்றுக்கு 22 லட்சம் லிட்டர் (நபர் ஒன்றுக்கு 40 லிட்டர்) வீதம் வழங்கப்படுகிறது. இதைத்தவிர, கோட்டைமலையார் குடிநீர் திட்டத்தின் மூலம் சங்கரன்கோவில் நகராட்சிக்கு நாளொன்றுக்கு 20 லட்சம் (நபருக்கு 36 லிட்டர்) வழங்கப்படுகிறது. ஆக மொத்தம்,

சங்கரன்கோவில் நகராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் என்ற தேவைக்கு மேல் 76 லிட்டர் நபருக்கு என்ற அளவில் வழங்கப்படுகிறது. கோடை காலத்தில், கோட்டைமலையார் குடிநீர்த் திட்டத்திலிருந்து பெறப்படும் குடிநீரின் அளவு மிகவும் குறைந்தும், சில நேரங்களில் இல்லாமலும் போகும் நிலையுண்டு.

தற்போது, சேந்தமங்கலம் மற்றும் 72 வழியோர குடியிருப்புகளுக்கு ரூ. 6.69 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, தாமிரபரணி ஆற்றில் தனியாக ஒரு நீர் உறிஞ்சு கிணறு அமைத்து, நாளொன்றுக்கு 1.8 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுத்து சுமார் 12 கி.மீ. நீளத்திற்கு தனியாக நீரேற்று குழாய் அமைக்கப்பட்டு, கண்டப்பட்டி நீர் தொட்டியின் கொள்ளளவு அதிகமாக உள்ளபடியால், அதில் சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கண்டப்பட்டி நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 25 குடியிருப்புகளுக்கு புதியதாக நீரேற்றுக் குழாய்கள் அமைத்து விசை இறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது. கண்டப்பட்டி நீர்த் தேக்கத்தொட்டியிலிருந்து சங்கரன்கோவில் செல்லும் பழைய திட்டத்தின் நீரேற்று குழாய்களின் நீர் கொண்டு செல்லும் திறன் அதிகப்படியாக உள்ளதால், எஞ்சியுள்ள 48 குடியிருப்புகளின் குடிநீர்த் தேவை மேற்படி நீரேற்று குழாய்களின் மூலம் எடுத்துச் சென்று புதிய 12 கிளைக் குழாய்களின் மூலம் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு புதியதாக சேர்க்கப்பட்டுள்ள 73 குடியிருப்புகளுக்கு வழங்கப்படவுள்ள நாளொன்றுக்கு 1.8 மில்லியன் லிட்டர் குடிநீர் தாமிரபரணி ஆற்றுப் படுகையில் புதியதாக தோற்றுவிக்கப்படவுள்ள ஒரு நீர் உறிஞ்சு கிணற்றிலிருந்து கிடைக்கப்பெறும் குடிநீரைக் கொண்டே வழங்கப்படவுள்ளபடியால், சங்கரன்கோவில் குடிநீர் திட்டத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை.

திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்த பின்புதான் தெரிகிறது; இது தவறான உண்மைக்குப் புறம்பான அறிக்கை என்று. அதற்காக வேதனைப்படுகிறேன். சங்கரன்கோவில் நகராட்சி மற்றும் 78 வழியோரக் கிராமங்களுக்கு உலக வங்கியின் மூலம் 12.91 கோடி ரூபாய் கடன் பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கான வட்டியை நகராட்சி கட்டி வருகிறது. இந்தத் திட்டத்தில் கை வைக்கக் கூடாது

என்ற குறிப்பும் அந்தத் திட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. இருப்பினும், தாமிரபரணி படுகையில் ஆறு கிணறுகளை அமைத்து 7.2 மில்லியன் லிட்டர் தண்ணீர் சேகரிக்கப்படுகிறது. இதைக் கொண்டு 88 வழியோரக் குடியிருப்புகளுக்கும், ஒரு நகர சபைக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதில் கூடுதலாக ஒரு கிணறு மட்டும் போட்டு, நாளொன்றுக்கு 1.8 மில்லியன் லிட்டர் தண்ணீர்மட்டும் எடுத்து, எப்படி கூடுதலாக 73 கிராமங்களுக்குக் கொடுக்க முடியும்? மேலும், இதில் ஒரு நபருக்கு எழுபது லிட்டர் முதல் எழுபத்தாறு லிட்டர் வரை தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது தவறான, உண்மைக்குப் புறம்பான செய்தி. ** தற்போது மின்சாரத் தட்டுப்பாடு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்றெல்லாம் சொல்லக் கூடாது. நீங்கள் கேள்வியைத்தான் கேட்கலாமேயொழிய, உங்கள் கருத்தைச் சொல்லும்போது முறையாகப் பேச வேண்டும். அப்படியே எழுதி வைத்ததைப் படித்துக் கொண்டு, ** என்று சொல்லக்கூடாது. நகரமன்றத் தலைவர் சரியில்லை என்றால் வேண்டுமானால், அமைச்சரைக் கேளுங்கள்.

முற்பகல் 10-35

திரு. சொ. கருப்பசாமி: அதனால், பொதுமக்களால் கடையடைப்பு, ஆர்ப்பாட்டம், ஊர்வலம் எல்லாம் நடத்தப்பட்டன. தற்போதுள்ள, சங்கரன்கோயில் நகரமன்றத் தலைவரைக் கொண்டு, இத்திட்டத்தைத் தனித் திட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடிநீர்த் திட்டத்தைத் தவிர, வேறு விஷயங்கள் பேசினால், நான் பேசவே அனுமதிக்கமாட்டேன். பேசுவதை முறையாகப் பேச வேண்டும். குடிநீரைப் பற்றிப் பேசுங்கள். நீங்கள் பேசியதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகின்றேன்.

திரு. சொ. கருப்பசாமி: இத்திட்டத்திற்காக 6.69 கோடி ரூபாயை, இன்னும் சற்றுக் கூடுதலாக ரூ. 7 கோடியோ, ரூ. 10 கோடியோ ஒதுக்கித் தனித் திட்டமாகக் கொண்டுவர வேண்டும். அதில் 73 கிராமங்களுக்கு இணைப்புக் கொடுத்தால், எங்களுக்கு வருகின்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

தண்ணீருக்கு பாதிப்பு கண்டிப்பாக ஏற்படும். ஆகவே, கண்டிப்பாக தனித் திட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையைக் கிளப்பி, கேள்வி-பதில் என்ற முறையிலே அறிவித்திருக்கிறேன். அதற்குப் பிறகும், நான் அதிகாரிகளை அழைத்து நேற்று வரை ஆய்வு நடத்தியிருக்கிறேன். இப்புதிய திட்டத்தின் பயனாக நிச்சயமாக சங்கரன்கோயில் திட்டம் பாழ்படாது. ஆனால் ஒன்று; இந்தத் திட்டம் — சங்கரன்கோயில் திட்டம் — உலக வங்கியின் மூலம் கடன்பெற்று, பழைய திட்டத்தில் உருவாக்கப்பட்டது. பழைய திட்டத்திலே, அவர்களுடைய ஆட்சியிலே இருந்த நீராதாரக் கொள்கை வேறு; தற்போது இந்த அரசு ஏற்றிருக்கிற கொள்கை வேறு. நிச்சயமாக, கிராமப்புறங்களுக்கு 40 லிட்டரும், நகர்ப்புறங்களுக்கு 70 லிட்டரும், ஏறக்குறைய 1991-வது ஆண்டிலிருந்து 2021-வது ஆண்டுவரை, என்ன மக்கள் தொகை பெருக்கம் இருக்குமோ, அந்த அடிப்படையிலே தண்ணீர் கிடைக்க வேண்டுமென்ற திட்டத்தை, மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு இப்போது அறிவித்திருக்கிறது. ஆனால், பழைய திட்டத்தின்படி, சங்கரன்கோயில் திட்டத்தில், அப்படிப்பட்ட நிலை இல்லை. உலக வங்கித் திட்டத்தின்கீழ் அது உருவாக்கப்பட்டதால், 2001-வது ஆண்டிற்குள் அதைப் பரிசீலிக்க இருக்கிறோம். காரணம், எல்லாத் திட்டங்களையும் — பழைய திட்டங்கள் அனைத்தையும் — நகரமாக இருந்தாலும், கிராமமாக இருந்தாலும், அந்தக் கொள்கையின்கீழ் இருக்கிற திட்டங்கள் அனைத்தையும் பரிசீலித்து, படிப்படியாக ஒரு கட்டத்திற்குக் கொண்டுவரும் நிலை இருக்கிற காரணத்தினால், சங்கரன்கோயில் திட்டம் அப்போது பரிசீலிக்க இயலும். இப்படிப்பட்ட தகராறுகள், குறைவு, கூடுதல்கள் வருமானால், அப்போது பரிசீலிக்கலாமே தவிர, இப்போது பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இருங்கள்: நான் இதை முடித்துவிட்டு உங்களை அழைக்கிறேன்.

அடுத்து, திரு. கே. ரவி அருணன் அவர்கள். . .

திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களுக்கு அனுமதி கொடுத்திருப்பேன். நீங்கள் 10 நிமிடங்களாக, முதலிலேயே சொற்பொழிவு ஆற்றிவிட்டீர்கள். அதற்குப் பிறகு, இரண்டாவது கேள்வி ஏன்?

திரு. சொ. கருப்பசாமி: தண்ணீர் பிரச்சினை, தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தண்ணீர் பிரச்சினை என்பதற்காகத் தான் நான் அனுமதியே கொடுத்தேன்.

திரு. சொ. கருப்பசாமி: தலைவர் அவர்களே, மக்கள் வாடிப்போய் இருக்கிறார்கள். நீங்கள் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முறைகேடாகப் பேசுகிறீர்கள். நான் உங்கள்மீது நடவடிக்கை எடுப்பேன். தண்ணீர் பிரச்சினை என்பதால்தான் உங்களுக்கு விதி 55-இன்கீழ் நான் அனுமதியே கொடுத்தேன். அதைத் திரும்ப நீங்கள் ஏன் எனக்கு நினைவுபடுத்துகிறீர்கள். ஒழுங்காகப் பேசுங்கள்.

திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். இப்போது கடுமையான வறட்சி. ஏற்கெனவே, அக்னி நட்சத்திரம் வேறு ஆரம்பித்து விட்டது. பத்து நாளைக்கு ஒருமுறைதான் தண்ணீர், ஒவ்வொரு பகுதியாக வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, எங்கள் பகுதி மக்கள்மீது கருணை வைத்து, அதனை முறையாக, தனித் திட்டமாகக் கொண்டு வருவீர்களா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டு, தனித் திட்டமாக அதனைக் கொண்டுவந்து, எங்கள் பகுதிக்கு ஆபத்து ஏற்படாத வகையில் செய்வீர்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1998 மே 4

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைத் தனியாக நிறைவேற்றுவதற்கு 11 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். ஆனால், அங்கு புனரமைப்புத் திட்டம் என்றுவேறு தனியாக இருக்கிறது. இந்த இரண்டையும் பரிசீலித்த காரணத்தினாலேதான், அதிகச் செலவை இப்போது செலவழித்துவிட்டு பிறகு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற நோக்கத்தோடு, இந்த ஒரு திட்டத்தை, சரியான செலவில், குறைந்த செலவில் இப்போது அறிமுகப்படுத்தி இருக்கிறோம். தேவைப்பட்டால், சங்கரன்கோயில் திட்டத்தைப் பரிசீலிக்கிறபோது, நிச்சயமாக இந்தத் திட்டத்தையும் பரிசீலிக்கலாம். இன்னும்கூட சொல்கிறேன், இந்தத் திட்டம் இரண்டும் செயல்படவில்லை என்றால். அப்போதேகூட, அளவு குறையுமானால், நிச்சயமாக தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படுமானால், இதற்கு முன்பிருந்த நிலை மாதிரி இல்லாமல், இந்த அரசு உடனடியாகத் தலையிட்டு ஆவன செய்துதர இருக்கிறது. இன்னும்கூட நான் சொல்லிக்கொள்கிறேன், இந்த அக்கறையும், கரிசனமும் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, இந்த உறுப்பினருக்கு ஏற்பட்டதற்கு என்ன காரணம்? ஏற்கெனவே அந்தத் திட்டம் போடப்பட்டு, சீர்கெட்டு, தண்ணீரே 27 லிட்டருக்கு மேல் கிடைக்காது இருந்த நிலை இருந்ததே; அதை 70 லிட்டருக்கு மேல் உருவாக்கியதே இந்த அரசுதானே? ஏன் அதற்கு அப்போது அக்கறை செலுத்தவில்லை? ஏன் அதற்கு இப்போது இவ்வளவு அக்கறை செலுத்துகிறார். வேறொன்றும் இல்லை; அவரே குறிப்பிட்டுவிட்டார். அந்த நகராட்சி மன்றத் தலைவர் அவராகவே அந்தக் கட்சி பிடிக்கவில்லை என்று வந்த காரணத்தினால் அதை அரசியலாக்கிக் கொண்டு கடையடைத்துப் பார்த்தார்கள், ஊர்வலம் விட்டுப் பார்த்தார்கள். அதிலெல்லாம் ஒன்றும் முடியாத காரணத்தினால் இங்கே இதைச் சொல்கிறாரே தவிர வேறு ஒன்றும் அல்ல. நிச்சயமாக இந்த அரசு அந்த மக்களுக்கு பாதிப்பு ஏற்பட விடாது.

திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்றாவது கேள்விக்கு அனுமதி கிடையாது. உட்காருங்கள். வேறு எதுவும் கிடையாது. நீங்கள் உட்காருங்கள். திரு. கருப்பசாமி உடனே உட்கார வேண்டும்.

1998 மே 4]

முற்பகல் 10.40

(ஆ) குற்றாலம் பேரூராட்சியில் வாகனம் நிறுத்துமிடங்கள், உடை மாற்றுமிடங்கள் ஆகியவற்றிற்குக் கட்டணம் வசூலிப்பதை ஏலம் விட நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ரவி அருணன் அவர்கள். விதி 55-ன்கீழ் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறார்.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் வாகனம் நிறுத்துமிடங்கள், உடை மாற்றுமிடங்கள் ஆகியவற்றிற்குக் கட்டணம் வசூலிப்பதை ஏலம் விடவேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(திரு. சொ. கருப்பசாமி தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சொ. கருப்பசாமி உட்காருங்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(திரு. சொ. கருப்பசாமி தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சொ. கருப்பசாமி நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காரவில்லையென்றால் நான் வெளியேற்றுவேன். இரண்டு கேள்விகள் கேட்க அனுமதி கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள் என்று எத்தனை முறை சொல்லியாகிவிட்டது. நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினரை அவையை விட்டு வெளியேற்றுகிறேன்.

(அவைக் காவலர்களும், மார்ஷலும் அவையில் நுழைந்தனர். உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி இருக்கையில் அமர்ந்துவிட்டார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உறுப்பினர் இருக்கட்டும்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சியில் தங்கும் விடுதிகள், மெயின் அருவி, ஐந்தருவி போன்ற இடங்களில் வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் உடை மாற்றும் அறைகளுக்கான கட்டணங்களை, பேரூராட்சியே துறை மூலமாக தற்பொழுது வசூலித்து வருகிறது. கடந்த 1997-98 ஆம் ஆண்டில் மேற்படி கட்டணங்கள் வசூலிக்கப்பட்ட விவரங்கள் வருமாறு:

1997-98

1. தங்கும் விடுதிகள்		:	4
(அ) மொத்த அறைகள்	120		
கட்டண வசூல் தொகை		:	ரூ. 8,70,000
(ஆ) சிறுகுடில்கள்:			
எண்ணிக்கை:	52		
கட்டண வசூல் தொகை		:	ரூ. 2,11,000
2. வாகனங்கள் நிறுத்துமிடம் (மெயின் அருவி, ஐந்தருவி மற்றும் புலி அருவி)			
கட்டண விகிதம்	கார்		ரூ. 10
	பேருந்து		ரூ. 20
	மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர்		ரூ. 2
கட்டண வசூல் தொகை		:	ரூ. 6,02,000
3. ஆடைகள் மாற்றும் அறை: (ஐந்தருவி) கட்டண விகிதம் ஒரு நபருக்கு ஒருமுறை ரூ. 1			
கட்டண வசூல் தொகை		:	ரூ. 15,000

குற்றாலம் நகராட்சி, அரசாணை எண் 203, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13-8-1997 மற்றும் எண் 239/ நாள் 6-10-1997-ன்படி பேரூராட்சியாக வகை மாற்றம் செய்யப்பட்டு, சிறப்பு நிலை பேரூராட்சியாக செயல்பட்டு வருகிறது. இப்பேரூராட்சிக்கு, இன்னும் தேர்தல் நடைபெறவில்லை. தேர்தல் நடைபெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மன்றம் பொறுப்பு ஏற்றவுடன், மேற்படி இடங்களுக்கான கட்டணங்கள் வசூலிக்க, ஏலம் விடுவது குறித்து பரிசீலனை செய்து தக்க முடிவு செய்யப்படும்.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம் பேரூராட்சியில் உள்ள 4 தங்கும் விடுதிகளில் உள்ள 120

அறைகளை கடந்த ஆண்டு வாடகைக்கு விட்டு வசூல் செய்ததன் மூலமாக 8 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ளதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதே கட்டணத்தை நிர்ணயித்து அந்த 120 அறைகளையும் ஏலம் விடுவதன் மூலம் கூடுதலாக 20 இலட்ச ரூபாய்வரை பேரூராட்சிக்குக் கிடைக்க வாய்ப்புகள் இருக்கின்றன. அதேபோன்ற 52 சிறுகுடில்களை ஏலம் விடுவதன் மூலமாக கூடுதலாக 10 இலட்ச ரூபாய் பேரூராட்சிக்குக் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. மெயின் அருவி, ஐந்தருவி, புலி அருவி போன்ற இடங்களில் வாகனங்கள் நிற்கும் இடங்களை வாகனங்கள் நிறுத்துவதற்கு எப்போதும்போல் அதே கட்டணத்தை வசூலிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏலம் விட்டால் கூடுதலாக 10 இலட்ச ரூபாய் கிடைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஆடைகள் மாற்றும் அறைகளை எல்லா அருவிப் பகுதியிலும் ஏலம் விட்டால் கூடுதலாக 1 இலட்ச ரூபாய்வரை கிடைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஐந்தருவி, மெயின் அருவி பகுதிகளிலும், பேருந்து நிலையம் அருகிலும் உள்ள கழிப்பறைகளை ஏலம் விட்டால் கூடுதலாக 3 இலட்ச ரூபாய் வரை பேரூராட்சிக்குக் கிடைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. பேரூராட்சித் துறை இந்தக் கட்டணத்தை வசூல் செய்வதால் வருடா வருடம் பேரூராட்சிக்குச் சேரவேண்டிய 50 இலட்ச ரூபாய் சில தனி நபர்களால் சுரண்டப்பட்டு வருகின்றது. அந்த வசூல் கட்டணத்தைப் பிரிக்கும் பொறுப்பில் உள்ள அலுவலர்கள் குறுகிய காலத்திலேயே 4, 5 பங்களாக்களுக்குச் சொந்தக்காரர்களாக மாறியிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் Lecture கொடுத்துவிட்டு கேள்விக்கு வருகிறீர்கள். நேரடியாகக் கேளுங்கள்.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்ட வருவாய் இழப்புகளை எல்லாம் சீர் செய்து வருகிற இந்த அரசு, குற்றாலம் பேரூராட்சியில் தற்போது ஏற்பட்டு வருகிற இந்த வருவாய் இழப்புகள் எல்லாம் மீண்டும் பேரூராட்சிக்குக் கிடைக்கும் வகையிலும், சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையிலும் அந்த வருவாய் இழப்பை வரும் சீசன் காலத்திற்கு முன்பு சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடுகள் நடப்பதாக எந்தப் புகாரும் மாண்புமிகு உறுப்பினர் இதுவரை தரவில்லை. அப்படி புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்குள்ள பரிகாரம் தேடப்படும். கூடியவிரைவில் தேர்தல் நடைபெறவிருக்கிறது. அந்தத் தேர்தல் நடைபெறுகிற நேரத்தில் இந்த முறையை மாற்றி நாம் ஏலம் விடுவது என அறிவித்தால் அது சந்தேகத்திற்கு வழிவகுக்கும். எனவேதான் குறிப்பிடுகிறேன். இன்னும் சில நாட்களுக்கு அதாவது ஒன்றிரண்டு மாதங்களில் தேர்தல் முடிந்தபிறகு நிச்சயமாக அதுபற்றி அந்த மன்றம் பரிசீலித்து நமக்கு தெரிவிக்குமேயானால், அதை மாற்றி ஏலம் விடுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

முற்பகல் 10-45

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம் பேரூராட்சிப் பகுதிக்கு விரைவாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதிலே எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் அந்தப் பகுதிக்கு வருகிறார்கள். தினசரி ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் அங்கே வருவது வழக்கம். வருகின்ற ஜூன் மாதம் அங்கே தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டிருப்பதாக நான் அறிகிறேன். மேற்படி இந்த 3 மாதங்களில் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டுதான் அந்தப் பகுதி மக்கள் தங்களது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். எனவே, வருகின்ற சீசன் முடிந்த பின்பு, செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் அங்கே உள்ளாட்சித் தேர்தலை நடத்த அரசு தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாத கெடு முடிகிறது. எந்தப் பகுதியாக இருந்தாலும் 6 மாதத்திற்குள் முடித்துவிட வேண்டுமென்ற உத்தரவும், அதற்கான விதியும் ஏற்கெனவே இருக்கின்றது. எனவே, தேர்தலை ஒத்தி வைக்கின்ற சூழ்நிலை தற்போது இல்லை. நிச்சயமாக தேர்தலை நடத்தலாம். எந்தவித பாதிப்பும் இருக்காது. தேர்தலை நடத்திவிட்டு, மறு ஏலமா, ஏலமா அல்லது கட்டணம் வசூலிப்பதா என்பது குறித்து உடனடியாக முடிவு எடுக்கலாம்.

3. உரிமைமீறல் பிரச்சினை

உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி திருநெல்வேலி - மேலப்பாளையம் அருகேயுள்ள கிராமத்திற்குச் செல்கிறபோது தடுக்கப்பட்டது

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர். க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே ஒரு உரிமைப் பிரச்சினையை தங்கள் மூலமாக நான் எழுப்ப விரும்புகிறேன். இரண்டு தினங்களுக்கு முன்பாக, மே மாதம் ஒன்றாம் தேதி அன்று, திருநெல்வேலி, மேலப்பாளையத்தில் ஒரு பொதுக் கூட்டத்தை முடித்துவிட்டு, அடுத்த நாள் 2 ஆம் தேதி அன்று — அருகிலுள்ள ஆழ்வார் கற்குளத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த முத்துமாலை என்பவர் படுகொலை செய்யப்பட்டார். அவருடைய குடும்பத்தாரிடம் துக்கம் விசாரிப்பதற்காக — மதியம் 12 மணிக்கு அப்பால் நான் புறப்பட்டுச் சென்றேன். அங்கே 15 கிலோ மீட்டருக்கு அப்பால் என்னைக் காவல் துறையினர் தடுத்து நிறுத்தினார்கள். தூத்துக்குடி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு கண்காணிப்பாளர் கரன்சிங் அவர்களுடைய உத்தரவின்பேரில் காவல் துறையினர் என்னைத் தடுத்து நிறுத்திவிட்டார்கள். ஏறக்குறைய 10-க்கும் மேற்பட்டவர்கள், கடந்த 4 மாதங்களில், அந்தப் பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் முதல் நாள் அன்றே வந்திருந்து, தங்கியிருந்து என்னை அழைத்துச் செல்வதற்காக என்னோடு இருந்தார்கள். அவர்களோடு செல்ல நான் புறப்பட்டபோது 15 கிலோ மீட்டருக்கு அப்பால் என்னைத் தடுத்து நிறுத்தியது, சாதாரணமாக என்னுடைய நடமாடக்கூடிய உரிமையில் தலையிடுவதாகும். அதைப்போல தென் மாவட்டங்களில் இருக்கின்ற பல காவல் துறை கண்காணிப்பாளர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்தப் பிரச்சினையை மட்டும் சொல்லுங்கள். நீங்கள் இதை எழுப்பியிருக்கிறீர்கள். நான் அறிக்கை கேட்டுவிட்டு என்னுடைய முடிவைச் சொல்கிறேன். நீங்கள் சொன்ன அதிகாரிகளிடம் விவரம் கேட்டு, அறிக்கை கேட்டு அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதா, இல்லையா என்ற தீர்ப்பை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதைத்தான் சொல்லிவிட்டீர்களே. ஒவ்வொரு Incident-ஆகச் சொல்ல விடமாட்டேன்.

[1998 மே 4

டாக்டர் க. கிருஷ்ணசாமி: முதல் நாள் நடந்த பொதுக் கூட்டத்தின்போது வாகனங்கள் எல்லாம் சோதனை இடப்பட்டன. அது குறித்த அறிக்கைளை அதிகாரிகள் கொடுத்தார்கள். நான் கலந்து கொள்கின்ற எல்லாக் கூட்டங்களிலும் இவ்வாறு செய்வது என்னை அவமானப்படுத்துவதாகும். தேவை இல்லாமல், இல்லாத ஒரு பிரச்சினையை அதிகாரிகளே உருவாக்குவதாகத் தெரிகிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

4. தகவல் கோரல்

மத்திய சட்ட அமைச்சர் சேலத்தில் கூறியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு மத்திய சட்ட அமைச்சர் திரு. தம்பிதுரை அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நீங்கள் எழுப்பியிருக்கிறீர்கள். இன்றைக்கு எடுத்துக்கொள்ள முடியாது. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள்.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

இலவச மின்சார சலுகை ரத்து பற்றி மத்திய அமைச்சர் பத்திரிகைகளுக்கு அளித்த செய்தி

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் 'இந்து' பத்திரிகையில் ஒரு அதிர்ச்சி தரத்தக்க செய்தி வந்திருக்கிறது. மத்திய அமைச்சரவையில் மின்சாரத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் ஏற்கனவே பத்திரிகைகளுக்கு ஒரு செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நாட்டில் இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் இலவச மின்சாரத்தை கடந்த 6, 7 ஆண்டு காலமாக அனுபவித்துக்

1998 மே 4] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

கொண்டிருக்கிறார்கள். இந்த மாநில அரசு கிட்டத்தட்ட 7½ ஆண்டுக்காலம் மின்சாரத்தை விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுப்பதை விவசாயிகள் அனுபவித்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, அதையெல்லாம் இரத்து செய்து, அவர்கள் குறைந்தபட்சம் எந்த அளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்களோ, அதில் 50 சதவிகித அளவுக்காவது வரி விதிக்க வேண்டுமென்று மத்திய அரசிடமிருந்து ஒரு தாக்கீது நம்முடைய மாநில அரசுக்கு வந்து, நம்முடைய மாநில அரசும் அதனைப் பரிசீலனை செய்வதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. நம்முடைய விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இருக்கின்ற பல துன்ப, துயரங்களுக்கிடையில், மேலும் அவர்களுடைய விளைபொருட்களுக்கான விலைகள் வீழ்ந்த நிலையிலும், இந்த இலவச மின்சாரம் ஒன்றுதான் அவர்களுக்கு இன்று உயிர்ப்பொருளாக இருக்கின்றது.

முற்பகல் 10-50

இந்தச் சூழ்நிலையில், இதுபோன்று நம்முடைய மத்திய அரசு, குறிப்பாக நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம் அறிவித்திருக்கின்றார். மேலும் மூன்று மாத காலத்திற்குள் விவசாயிகளுக்கு இந்த வரியை விதிக்காவிட்டால், அவர்கள் உபயோகிக்கிற மின்சார அளவிற்கு ஏற்றபடி வரி விதிக்காவிட்டால் பிரிவு 356-ஐக் கூட நாங்கள் பயன்படுத்தத் தயங்க மாட்டோம் என்று சொல்லி இருக்கின்றார்கள். ஆகவே, இதை எப்படி நம்முடைய மாநில அரசு எடுத்துக்கொள்ளப் போகிறது என்றும், விவசாயிகள் இதுவரை அனுபவித்து வந்திருக்கின்ற இந்த மின்சார சலுகையை ரத்து செய்யப் போகிறதா என்பதையும் இந்த அவைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கட்சிகளுமே, எல்லோருமே கொடுத்திருக்கிறோம்....

[1998 மே 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைய 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிறது என்று சொன்னார்கள், அதற்காக அனுமதி கொடுத்தேன். இந்தப் பிரச்சினை குறித்து எல்லோருமே பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கலாம், இதுபற்றிப் பேசுவதற்கு.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய 'இந்து' பத்திரிகையில் வந்திருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய 'இந்து' பத்திரிகையிலா வந்திருக்கிறது? இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலே அந்த அமைச்சர் இதுபற்றிச் சொன்னார் என்று பல உறுப்பினர்கள் தங்கள் பெயரை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அமைச்சர் பத்திரிகைக்கு செய்தி சொல்லியிருக்கலாமே தவிர, இது ஒரு தாக்கீதாகவே இன்று வந்திருக்கிறது. அதை படிப்பதற்குத் தயவு செய்து அனுமதிக்க வேண்டுகிறேன்.

"As per the Centre's notification, the States have to establish such Commissions in three months. The central issue before the State is the question of charging agriculturists for power supply whatever the tariff fixed".

என்று, ஒரு தாக்கீதாகவே அந்தச் செய்தி வந்திருக்கிறது என்பதால் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகக் கருதி, நான் உங்களுடைய அனுமதியை இதற்குக் கேட்டேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடுகள்)

1998 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யார், யார் பெயர் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதனாலே அவரைக் கூப்பிட்டிருக்கின்றேன். யார், யார் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற பட்டியலை வாங்கிவிட்டுப் பிறகு பேச அழைக்கின்றேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மத்திய மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிக்கும் மின் கட்டணத்தை மாநில அரசுகள் நடைமுறைப்படுத்திட வேண்டும். அதைப் புறக்கணித்தால்தான் இந்த மாதிரி 356ஆவது பிரிவு பாயும். இல்லாவிட்டால் பாயாது" என்று ரங்கராஜன் குமாரமங்கலம் சொல்லியிருக்கிறார். அதனாலே இந்த மாதிரியானவைக்கு அந்தப் பிரிவை பயன்படுத்த மாட்டார்கள். கடந்த ஆண்டு நடந்த மாநில முதல்வர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படிதான் இந்த அவசரச்சட்டம் பாயும் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் முதலமைச்சர் அந்தக் கூட்டத்திலே ஒத்துக்கொண்டு வந்து, இப்போது... (குறுக்கீடு) எந்த முதலமைச்சராக இருந்தாலும், தமிழக அரசு சார்பிலே ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். மத்திய அரசு என்ன கட்டளையிடுகிறதோ, அதற்குக் கட்டுப்பட்டு மாநில அரசு நடைபெறுவதுதான் முறை. அதற்கு மாறுபட்டுச் செயல்பட்டால்தான் 356ஆவது பிரிவைப் பயன்படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் நீங்கள் பயப்படவே மாட்டீர்கள். எதற்கு இதற்கெல்லாம் பயந்து கொண்டு இருக்கிறீர்கள்? ஆகவே, முதலமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானித்தபடி தமிழக அரசு நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்றே பேசவிடவில்லை. அதற்குள் நீங்கள் கிளாரிஃபிகேஷன் கேட்கிறீர்களே? முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலே, இந்த முடிவை அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்த மாதிரியான முடிவு எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் சொன்னதைப்போல இன்றைய முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட எந்த வாக்குறுதியையும் முதலமைச்சர்கள் மாநாட்டில் கொடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மின்சாரத் துறை அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் சில தினங்களுக்கு முன்பாக பத்திரிகைகளுக்குத் தெரிவித்த ஒரு செய்தியினைப் பார்த்தேன். இலவச மின்சாரத்தைப் பொறுத்தவரையில், அதற்குக் குறைந்தபட்சக் கட்டணம் வசூலிக்கப்படும் என்று அவர் அறிவிக்கப் போவதாகவும், அதை மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டுமென்றும் தன்னுடைய அறிவிப்பிலே தெரிவித்திருந்தார்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, விவசாயிகள் நீண்டகாலப் போராட்டங்களை நடத்தி, அதற்குப் பின்னால்தான் இந்த இலவச மின்சாரத்தைப் பெற்றார்கள். இன்றைக்கு, இந்த இலவச மின்சாரத்திற்கு ஒரு கட்டணம் வசூலிக்கக்கூடிய அளவுக்கு, மத்திய அரசு, அதுவும் பாரதிய ஜனதா அரசு நிர்ப்பந்தித்தால், தமிழகத்திலே மிகப்பெரிய கொந்தளிப்பு ஏற்படக்கூடிய நிலை ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. தாமரைக்கனி அவர்கள்கூட இது குறித்துப் பேசினார்கள். நான் அவரிடம் கேட்க விரும்புவது, மின்சாரத்தை இலவசமாக வழங்க வேண்டும் என்று சொல்லுகிறார்களா அல்லது வேண்டாம் என்று சொல்கிறார்களா என்பதைச் சரியாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னாலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து, தமிழ்நாட்டு மக்களை குழப்பத்திலே ஆழ்த்திக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், விவசாயிகள் மத்தியிலே இப்படி ஒரு கிளர்ச்சி ஏற்பட வேண்டுமென்பதற்காக, ஒரு உள்நோக்கத்தோடு நடத்தக்கூடிய ஒரு நாடகமாக, மத்திய அரசும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து செய்கின்றன. ஆகவே, விவசாயிகள் மீது கை வைத்தால் நாடு கொந்தளிக்கும் என்பதைச் சொல்லி, இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பாரா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வா. சந்தானம்.

திரு. வா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: திரு. சந்தானம் அவர்கள் பேசிய பிறகு நான் பேசுகிறேன்.

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயர் அதிலே இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய பெயர் இல்லை.

திரு. ம. அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, ஏன் இல்லை?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் இல்லை என்று என்னிடம் கேட்டால் என்ன அர்த்தம்?

Thiru M. ABDUL LATHEEF: Mr. Speaker, Sir, you have said that you will give an opportunity to all the Members.

Hon. SPEAKER: No, no. You don`t understand. I have said that I will give opportunity to those Members who have given notices.

Thiru M. ABDUL LATHEEF: Hon. Speaker Sir, as a representative of a party you can permit me.

[1998 மே 4

Hon. SPEAKER: No, no. You cannot make a demand like this. You please sit down. I am giving an order. I have told earlier that I have sent for the list of Members who have given notices.

Thiru M. ABDUL LATHEEF: When you are allowing all parties, what is the harm in allowing me? I don't understand.

Hon. SPEAKER: You don't understand. Please sit down. I will make you understand. I have told the House that I am going to get the list of Members who have given notices on this resolution.

Thiru M. ABDUL LATHEEF: Mr. Speaker, this is not proper. I have been observing your activities for the past few months. This is highly unjust.

Hon. SPEAKER: Please listen to me. I strongly object your conduct. You please sit down. Whatever you say will not go on record.

Thiru M. ABDUL LATHEEF: Mr. Speaker, then you can get me out.

Hon. SPEAKER: No, I will not order you out. I will not give permission to you. Thiru L. Santhanam.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு மத்திய மின்சாரத் துறை அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள், மின்சார விநியோகத்தைப் பொறுத்த அளவிலே ஒரு தன்னாட்சி ஆணையத்தை நிறுவப் போவதாகவும், அந்த ஆணையத்தின் மூலமாகப் பல்வேறு மின் விநியோக முறைகளுக்கும் கட்டணங்கள் விதித்து, அந்தக் கட்டணங்களை அமல்படுத்தத் தவறுகின்ற மாநில அரசுகள் மீது 356-வது சட்டப் பிரிவை அமல்படுத்துகின்ற நிலையை ஏற்படுத்துவோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்தியாவிலேயே, விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைக் கொடுத்து, விவசாயிகள் நலனிலே மிகுந்த அக்கறை கொண்ட அரசாக, என்ன கஷ்டம் வந்தாலும் அதை அமல் செய்கின்ற அரசாகத் தமிழக அரசு இருந்து கொண்டிருக்கிறது. இந்த அரசினுடைய செயல்திட்டத்தைக் கருத்திற்கொண்டுதான் இந்த அறிவிப்பு வெளியாகி இருக்கும் என்பதுபோல எங்களுக்கெல்லாம் ஓர் அச்சம்

1998 மே 4] [திரு. லா. சந்தானம்]

ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற இலவச மின்சாரத்தை, இந்த மாநிலத்திலே வழங்கிவிடக்கூடாது என்ற நோக்கத்தோடுதான் இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது என்று நாங்கள் எல்லோரும் உணருகின்ற காரணத்தால், இன்றைக்கு விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கின்ற நேரத்திலே, அவர்களுக்கு என்று வழங்கப்பட்டிருக்கின்ற வரப்பிரசாதம் - நமது தலைவர் கலைஞர் அவர்களால் அளிக்கப்பட்டு வந்தது - வருகின்ற காலத்திலும் தொடர்ந்து அமல்படுத்தப்பட வேண்டும். அப்படி அந்த இலவச மின்சாரத் திட்டத்திற்கு ஏதாவது இடையூறுகள் ஏற்படுமானால், தமிழகத்து விவசாயிகள் நிச்சயமாக அந்த இடையூறுகளைத் தாங்கிக்கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை மட்டும் எடுத்துக் கூறி, அமைகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை, எளிய விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை மத்தியிலே இருக்கக்கூடிய அமைச்சர், தவறு என்பதைப்போல சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கடந்த 30 ஆண்டு காலத்திற்கு முன்னால் வந்த ஒரு திரைப்படம்—முதல்வர் அவர்களுக்கும், இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும் மிக நன்றாகத் தெரியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நடித்த நாடோடி மன்னன் என்ற திரைப்படத்திலே "காடு வௌஞ்சென்ன மச்சான், நமக்கு கையுங் காலுந்தானே மிச்சம்" என்ற அற்புதமான ஒரு பாடல், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதி எம்.ஜி.ஆர். நடித்த நாடோடி மன்னன் படத்திலே - எம்.ஜி.ஆர். வாய் அசைத்துப் பாடிய பாடல் (சிரிப்பு). அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை நமது ஏழை எளிய விவசாயிகள் எந்தவகையிலுமே முன்னுக்கு வரமுடியாத நிலையில் இருக்கிறார்கள். நெல்லுக்காகச் செய்யக்கூடிய செலவிலே பாதிகூட அந்த விவசாயிகளுக்கு வந்து சேரவில்லை. செலவுகள் அதிகமாகிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, ஏழை விவசாயிகள் அல்லல்படுகிறார்கள், தொல்லைப்படுகிறார்கள். ஆனால், இங்கே வரக்கூடிய அமைச்சர்கள் இந்த மின்சாரத்தை ரத்து செய்வோம் என்று கூறுவதை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கண்டிக்கிறோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் கணேசன் அவர்கள் பேசும்போது, இங்கு வருகின்ற மத்திய அமைச்சர்கள் மின்சாரத்தை இரத்து செய்வோம் என்று சொல்வது கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் சரியான விளக்கம் இல்லை. 'மின்சாரத்தை இரத்து செய்வதாக' என்று அவர்கள் சொன்னார்கள். சரியாகச் சொன்னால்தான் ஒழுங்காக ரெக்கார்டு ஆகும். இது முக்கியமான விஷயம். உறுப்பினர் முக்கியமான கூட்டணியில் இருப்பவர்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம்தான் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விளக்கம் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நம்முடைய மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் தமிழ்நாட்டில் இலவசமாக வழங்கி வருகின்ற மின்சாரத்தைத் தடுத்து நிறுத்தக்கூடிய அளவிலே, ஒரு பத்திரிகையின் மூலம், 'தாக்கீது' என்ற முறையிலே சில விவரங்களைத் தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், ஏழை, எளிய விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டினுடைய சாமானிய விவசாயிகள் இலவசமாக மின்சாரத்தைப் பெற்று, விளைபொருட்களை உற்பத்தி செய்வதன்மூலம், ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகின்ற இந்தச் சூழ்நிலையில், மத்திய அமைச்சர் அவர்கள் மூலம் ஒரு தாக்கீது இப்படி வருவதும், அச்சுறுத்தப்படுவதும் நல்லதல்ல. அதைக் கண்டிக்கின்ற அதே நேரத்தில், இந்த நடவடிக்கையிலிருந்து, அவருடைய முயற்சியிலிருந்து அவர் பின்வாங்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், திடீரென்று இன்று காலை 'இந்து' பத்திரிகையை வைத்துச் சொன்னார்கள். அவர்கள் என்ன பேசப்போகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் பேசிய பிறகு, திரு. தாமரைக்கனி அவர்களும், திரு. சந்தானம் அவர்களும், 'நாங்கள் இந்தப் பொருள் பற்றி அறிவிப்பு கொடுத்திருக்கிறோம்' என்று சொன்னார்கள். இந்த அறிவிப்பு கொடுத்தவர்கள் பட்டியலைக் கொண்டு வருவதற்குள்,

கொடுத்தவர்கள் இரண்டு பேர் என்று, திரு. தாமரைக்கனியைப் பேச அழைத்தேன். நம்முடைய இந்திய தேசிய லீக் கட்சித் தலைவர் திரு. லத்தீப், என் மேல் உள்ள உணர்வுகளைக் கொட்டுவதற்கு இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, பல மாத காலமாக என்னுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வருவதாகவும், அது முறை அல்ல என்றும், அவருடைய கருத்தைச் சொன்னார். அவர் மூத்த உறுப்பினர். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால், பேரவைத் தலைவர் என்ற முறையில் எந்த அச்சுறுத்தலுக்கும், எந்தக் காலத்திலும், எதற்கும் நான் பணியமாட்டேன். இருந்தாலும், எல்லோரும் பேசிய காரணத்தால், திரு. அப்துல் லத்தீப் அவர்களை இப்போது பேச அழைக்கின்றேன்.

முற்பகல் 11-05

திரு. ம. அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, நமக்குள்ளே இருக்கிற உணர்வுகளை வைத்து, இந்த மாதிரித் தாங்கள் passing of an observation, aspersion against me என்பது சரியல்ல. I give high respect to the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்ன வார்த்தைகளைத்தான் நான் சொன்னேன். நீங்கள் ஆங்கிலத்திலே சொன்னீர்கள்; நான் அதைத் தமிழிலே சொன்னேன், அவ்வளவுதான். 'I have been observing your activities for some months. This is highly unjust,' என்றெல்லாம் சொன்னீர்கள். சொல்லாததை ஒன்றும் நான் சொல்லவில்லை.

திரு. ம. அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை கடந்த வாரமும் பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டு இருந்தது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப்போல, இன்று காலையிலே விரிவாக 'இந்து' பத்திரிகையிலே வந்து இருக்கிறது. இது ஒரு முக்கியமான அரசமைப்புச் சட்டப் பிரச்சினை. இந்தப் பொருளைக் குறித்த வரையில், இது கன்கரன்ட் லிஸ்டில் குறிக்கப்பட்டு இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்கும் இதிலே பொறுப்பு இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கும் பொறுப்பு இருக்கிறது. ஆனால், dominating responsibility, dominating power—whether the Centre has got the dominating power to the extent to issue a direction to the State Government? Mr. Rengarajan Kumaramangalam is not only a lawyer, but the son of a very famous lawyer and we expect certain constitutional decency and constitutional observance of the separation of powers as

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 மே 4

enunciated in our Constitution. This is an item which has been included in the concurrent list of our Constitution. How can he make such an observation regarding free power supply to the agriculturists? It is a policy matter. அது ஒரு கொள்கை முடிவு. தமிழ்நாடு அரசாங்கம் எடுக்க வேண்டிய ஒரு கொள்கை முடிவு. அந்த முடிவிலே, அவர்கள் எடுக்காவிட்டால் நடவடிக்கை எடுப்போம் என்று ஒரு டைரக்ஷன் கொடுக்கலாம். இல்லை என்று சொன்னால், மாநில அரசாங்கத்தோடு ஒரு கூட்டுக் கூட்டம் நடத்தி, இந்த இலவச மின்சாரத்தால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றி மத்திய அரசாங்கம் கலந்துபேசலாம்; ஒரு மாநாட்டை நடத்தலாம்; கருத்தரங்கம் நடத்தலாம் அல்லது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளலாம். 50%—அவர்கள் எவ்வளவு செலவு செய்கிறார்களோ, அதிலே 50 சதவிகிதத்திற்கான கட்டணத்தை வசூல் செய்ய வேண்டும் என்பது அவர்களுடைய கொள்கை. We do not stand in the way. அது அவர்களுடைய கொள்கை. ஆனால், காலம் காலமாக, பல காலமாக, 6 ஆண்டு, 7 ஆண்டு காலமாக மின்சாரத்தை இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. அந்தக் கொள்கைக்கு மாறாக, — 'நடவடிக்கை எடுக்காவிட்டால், ஆர்ட்டிகிள் 356-ஐப் பயன்படுத்துவோம்' என்று சொன்னால், I do not understand whether he is the repository of all that power that is given to the Centre. It is highly objectionable, reprehensible unworthy of a Central Government Minister. For coming and telling that he is going to use Article 356 as if he is the Central Cabinet and repository of the Constitution, I take strong objection Hon. Chief Minister must come out with a statement, giving him a warning and then asserting, reiterating our policy of the availability of free electricity supply to the agriculturists.

மறுபடியும் இந்த அரசாங்க,ம் அதனுடைய கொள்கைப்படி சொல்லவேண்டும். நாங்கள் சொல்கிறோம் என்பதற்காக அல்ல; இந்த அரசாங்கத்திற்கென்று ஒரு கொள்கை இருக்கிறது. அதற்கு மந்திரி சபையில் தீர்மானம் எடுக்க வேண்டும். ஆகையினால், இந்த மாதிரியான threatening posture is unbecoming of a Central Minister Therefore, if he comes and talks like this quite opposite to the Constitutional esteem, then, I am sorry to say that, Mr. Rengarajan Kumaramangalam is transgressing the limits prescribed by the Constitution, thereby inviting trouble not to the State Government but to the Government in which he

1998 மே 4] [திரு. ம. அப்துல் லத்தீப்]

is a Minister. With this observation, Mr. Speaker, I submit to the State Government that it should come out and reiterate its policy about free power supply to the agriculturists.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொண்டு வந்த அவசரச் சட்டம் குறித்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமரைக்கனி, திரு. பழனிசாமி, திரு. சந்தானம், திரு. ஐ. கணேசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மணி, திரு. அப்துல் லத்தீப் ஆகியோரும் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

1975-76 ஆம் ஆண்டு முதற்கொண்டு, விவசாயிகள் இலவச மின்சாரம் வேண்டும் என்று போராடி வந்தார்கள். பல ஆண்டுகாலம் அவர்களுடைய கோரிக்கை தமிழகத்திலே ஏற்கப்படவில்லை. 1989 ஆம் ஆண்டு, இன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மீண்டும் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, தமிழகத்திலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அன்று முதற்கொண்டு இன்று வரையிலே இலவச மின்சாரச் சலுகையைத் தமிழக விவசாயிகள் அனுபவித்துக் கொண்டு வருகின்றார்கள்.

இப்போது மத்திய அரசாங்கம், Central Electricity Regulatory Commission and State Electricity Regulatory Commission நிறுவவேண்டுமென்று ஓர் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அந்த அவசரச்சட்டத்தில், விவசாயிகளிடம் மின்சாரக் கட்டணம் எந்த அளவுக்கு வசூலிக்க வேண்டும், அதை எப்படியெல்லாம் வசூலிக்க வேண்டுமென்ற விபரங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், இந்த அவையிலே பேசிய உறுப்பினர்கள் அனைவரும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களைத் தவிர, இலவச மின்சாரம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கின்றார்கள். இதைப் பொறுத்தவரையிலும்.........

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேனோ, அதைப் பார்த்துவிட்டுப் பேச வேண்டும். பேசாததையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசக்கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணத்தை நிர்ணயிக்கும் அதிகாரம் கொண்ட மத்திய மற்றும் மாநில மின் சக்தி ஒழுங்குமுறையை வகைப்படுத்தும் அந்தச் சட்டத்தைத் தமிழக அரசு மதித்துச் செயல்படுத்த வேண்டும் என்றுதான் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லாம் கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினரைத் தவிர, இலவச மின்சாரம் தொடர்ந்து தமிழகத்திலே இருக்க வேண்டுமென்று மற்றவர்கள் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள், மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்த அவசரச்சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று சொல்கிறார். அதை அமல்படுத்தினால்—அந்தச் சட்டத்தில் இருக்கிற ஒரு பிரிவு, மின்சார உற்பத்திக்கு ஆகிற கட்டணம் எவ்வளவோ அதிலே .... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள். இலவச மின்சாரம் கொடுக்கலாமா, வேண்டாமா என்பதை ஒரே வார்த்தையில் நீங்கள் சொல்லி முடித்துவிட்டால் பிரச்சினை இல்லையே!

திரு. இரா. தாமரைக்கனி: மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், கடந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் சம்மதம் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறார்கள். இப்போது திசை மாற்றிப் பேசக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திசை மாற்றிப் பேசுவதும், திசை மாறிப் போவதும் அவர்களுடைய வழக்கம். அது என்னுடைய வழக்கமல்ல. கடந்த மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு முன்பிருந்த ஐக்கிய முன்னணி அரசு, இப்போதைய மத்திய அரசு வருவதற்கு முன்பு இயங்கிக் கொண்டிருந்த அரசு, இந்த

இலவச மின்சாரம் விஷயமாக ஒரு கடிதத்தை எனக்கு அனுப்பியது, முதலமைச்சர் என்ற முறையில். அப்போது நான் திட்டவட்டமாக, கடுமையாக, ஒரு பதிலைக், கடந்த காலத்திலே ஐக்கிய முன்னணி அரசுக்கு எழுதியிருக்கின்றேன். எந்த வகையிலும் இலவச மின்சாரம் வழங்குவதை நிறுத்த முடியாது என்று நான் கண்டிப்பாக ஐக்கிய முன்னணி அரசுக்கு எழுதியிருக்கிறேன். ஏற்கெனவே ஒத்துக்கொண்டதாகச் சொல்லப்படுகின்ற அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு அல்ல. ஜாடைமாடையாக அதற்கு இணக்கம் தெரிவித்து உலக வங்கிக்கே ஒப்புதல் அளித்த அரசு ஜெயலலிதாவினுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அந்தச் சட்டத்தையோ, அதனுடைய பிரிவிலே ஒன்றாக இருக்கக்கூடிய மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற அறிவிப்பையோ என்றைக்கும் ஏற்றுக் கொள்ளவில்லை. கடந்த ஆண்டு, குறைந்தது ஒரு யூனிட்டுக்கு 50 பைசாவாவது வசூலிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம் சொன்னபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயிகளிடத்திலேயிருந்து மின்சாரக் கட்டணத்தை இப்போது வசூல் செய்ய முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்கள். ஆனாலும் இன்றையதினம் இப்படிப்பட்ட ஒரு அவசரச்சட்டம் வந்திருக்கிறது. இது குறித்து, இன்றையதினம் எப்படி இந்த அவையில் பேசப்படுகிறதோ, அதைப்போல வெளியில் இருக்கக்கூடிய கட்சிகளும் இந்தச் சட்டத்தை எதிர்த்துக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். தொழிலாளர்கள் மத்தியிலும் இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஆற அமர நாம் விவாதிக்க வேண்டும் என்ற வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி முடிவு செய்யலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த அடிப்படையிலே அனைத்துக் கட்சிக் கூட்டம் விரைவிலே கூட்டப்படும், அதிலே முடிவு எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மே 4
முற்பகல் 11-15

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே ஒன்றை விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இது அரசினுடைய கொள்கை, எனவே அரசினுடைய கொள்கை என்ன என்பதைச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். இந்த அரசினுடைய கொள்கை முதலமைச்சருடைய கொள்கைதான். எந்தக் காரணத்தைக் கொண்டும் இலவச மின்சாரத்தை இப்போது இந்த அரசு ரத்து செய்வதாக இல்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, கடந்த ஆண்டும் 50 சதவிகித மின்சாரக் கட்டணத்தை வசூலிக்க வேண்டும் என்றவொரு உத்தரவு இருந்ததாக இங்கே சொன்னார்கள். கடந்த ஆண்டு மத்திய அரசிலே இருந்தது ஐக்கிய முன்னணியினுடைய ஆட்சி. அப்போது அறிவித்த நேரத்திலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதை வசூலிக்க முடியாது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்பதை ஆணித்தரமாக இங்கே வலியுறுத்தி அறிவித்திருக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. அதேபோல இந்த ஆண்டும்கூட, இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறபோது, மத்திய அரசு ஒரு அவசரச் சட்டத்தை அறிவித்திருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் இதை அறிவிப்பாகச் சொன்னார்களா, சட்ட வடிவிலே அறிவித்திருக்கிறார்களா என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிற அதே நேரத்திலே, அப்படி சட்ட வடிவத்திலே அறிவித்திருந்தாலும்கூட, மத்திய அரசிலே பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகிக்கின்ற காரணத்தினால், நிச்சயமாக, அதற்குக் குரல் கொடுத்து, விவசாயிகளினுடைய நலனில் அக்கறையுள்ள எங்களுடைய கட்சி. இலவச மின்சாரத்திற்குக் குரல் கொடுக்கும்: மத்திய அரசை வலியுறுத்தி இலவச மின்சாரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யும் என்ற கருத்தைச் சொல்லி, அமர்கிறேன்.

1998 மே 4]

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. மத்திய அரசினுடைய அந்தச் சட்டத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று சொன்ன அ.தி.மு.க. உறுப்பினர் கருத்துக்கு மாறாக பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர்கள், 'அதை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று' கூறியதற்காக. என்ன இருந்தாலும் 'பெருங்காயம் இருந்த பாண்டம் வாசம் போகாது' என்ற அளவில் பாராட்டி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம்

(ஆ) கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

(இ) கோரிக்கை எண் 11 - மாவட்ட நிருவாகம்

(அ) கோரிக்கை எண் 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ.100,86,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1391, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மசாலாப் பொடிக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,86,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 164, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "பொள்ளாச்சி மிளகாய் வற்றல் வியாபாரிகள் வெளி மாநில ஏஜென்டிடம் எஃப்-ஃபாரம் ஆவணங்களைப் பெற முடியாத நிலையிலுள்ளதால் அரசு சார்பு ஆணையர் 1991-92 வரையிலும் முன்பு இருந்தமாதிரி, கணக்குகளை ஏற்றுக்கொண்டு வரிவிலக்களித்த மாதிரி 1994-95 ஆம் ஆண்டு வரையிலும் அந்த அறிவிப்பை நீட்டிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,86,09,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1430, திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,86,09,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1140, திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,86,09,000-ல். ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1661, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—. நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,86,09,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 22, திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "தேங்காய்க் கொப்பரைக்கு முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,86,09,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3211, திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "மசாலாப் பொடிகளுக்கு விற்பனை வரி 100 சதவீதம் தள்ளுபடி

[திரு. அ. வ. அப்துல்நாசர்] [1998 மே 4

செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,86,09,000 ல். ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2441, திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருட்களின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 100,86,09,000 ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3570, திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "பாண்டிச்சேரி மாநிலம் காரைக்காலில் விற்பனை வரி விலக்குக் கொடுப்பதால் அனைத்துத் தொழில் முனைவோரும் அங்கு சென்று தொழில் தொடங்குவதைத் தடுக்க, நாகப்பட்டினம் தாலுக்காவில் தொழில் தொடங்குவோரை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு 5 வருடம் விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 100,86,09,000 ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3636, திரு. வி.கே. லட்சுமணன்.

1998 மே 4]

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"கிராமங்களில் வணிகச் சின்னம் இல்லாமல் தயார் செய்யும் வெண்ணெய்க்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,86,09,000 ல். ரூ.100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 9, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.152,76,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1379, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதத்திற்குப் பதில் அளிக்க, அவர்கள் தந்த மனுவின் மீது நடவடிக்கை எடுத்து அவ்வப்போது தெரிவிக்கவும் முதலமைச்சர், அமைச்சர்கள் ஆகியோருக்கு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்ற மனுக்களைக் கவனிப்பதற்கும் என்று தனியாக நேர்முக உதவியாளர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. சி. ஞானசேகரன்] [1998 மே 4

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,76,32,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 157, திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.152,76,32,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1470, திரு. ஜி.கே. மணி.

முற்பகல் 11-20

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.152,76,32,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1190, திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.152,76,32,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3569, திரு. ஜி. நிஜாமுதீன்

1998 மே 4]

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,76,32,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1666, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி." விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,76,32,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1798, திரு. பி. வெங்கடசாமி.

***திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி." விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,76,32,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

(இ) கோரிக்கை எண் 11 - மாவட்ட நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.458,80,04,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2705, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்ட நிருவாகத்திற்குச் சட்டப் பிரச்சினைகளில் அவ்வப்போது ஆலோசனை வழங்க சட்டம் படித்த சட்ட அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம்" குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,80,04,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 155, திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,80,04,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1489, திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,80,04,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1201, திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாட்சியருக்கு புதிய தாலுகா அலுவலகத்திற்கு அருகிலேயே ஒரு குடியிருப்புக் கட்டடம் கட்டித் தர

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,80,04,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2201, திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட அலுவலர்களுக்கு அனுப்பும் கடிதங்களுக்கு உரியகாலத்தில் பதில் கிடைக்கச்செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,80,04,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2516, திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,80,04,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1668, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கென புதிய கட்டடம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,80,04,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1799, திரு. பி. வெங்கடசாமி.

Thiru B. VENKATASAMY: Hon. Speaker Sir, to discuss the need to direct District Collectors and other Revenue officials to reply to the letters received from MLAs and other Public within a time limit, I move-

"That the allocation of Rs.458,80,04,000" under Demand No.11 - District Administration be reduced by Rs.100".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும், நிருவாகம் மற்றும் மாவட்ட நிருவாகம் ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சு ஏற்றப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கோரிக்கை எண் 9, மாநில ஆளுநர், அமைச்சர்கள் மற்றும் தலைமையிடப் பணியாளர்கள் ஆகியோரின் செலவினைக் கொண்ட ஒரு கூட்டுக் கோரிக்கையாகும். இதில் மாநில ஆளுநர் அவர்களின் செலவினம் வருவதாலும், மாநில ஆளுநர் அவர்களின் சாட்டிய செலவினத்தின்கீழ் வருவதாலும், இத்தலைப்புகளின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் ஏதும் சட்டமன்றத்தில் வைக்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைகள் மீது தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதில் உரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

@ 159 முதல் 206 வரையுள்ள பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர்கள் பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஏறத்தாழ 12-45 அல்லது 12-50 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற சூழ்நிலை ஏற்படும் வகையில் உறுப்பினர்கள் தம் பேச்சை அமைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, திரு. ஆர். சொக்கர் அவர்களை முதலில் பேசுமாறு அழைக்கிறேன்.

***திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து செய்துவரும் வணிக வரிச் சீர்திருத்தங்களின் மீது, இந்த அரசு கொண்டிருக்கின்ற அக்கறையையும், முதல்வர் அவர்களுடைய சீர்திருத்தங்களையும் முதற்கண் நாங்கள் பாராட்டி வரவேற்கின்றோம். என்னுடைய நண்பர்கள் எல்லாம் சில பேர் கேட்கிறார்கள், என்னய்யா, Sale Tax Reforms, reforms என்று சொல்கிறீர்களே, சீர்திருத்தம் என்றால் என்ன என்று கேட்கிறார்கள். வரிச் சீர்திருத்தம் என்பது, அவசியப்பட்ட பொருட்களுக்கு வரியைக் குறைத்து அல்லது நீக்கி, ஆட்சேபணை இல்லாத இனங்களிலே வரியை உயர்த்தி, வாணிபத்திலும், தொழிலிலும் வளர்ச்சிகண்டு, அரசின் வருவாயையும் உயர்த்துவதே ஆகும் என்பது என்னுடைய கருத்து. இந்த விவாதத்தில் முதற்கண் என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட மெழுகுத் தீப்பெட்டிக்கு இன்னும் ஒரு குழப்பமான நிலையிலே வரி அமைப்பு இருக்கின்றது என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

1989-லே மாண்புமிகு முதல்வர் அவர்கள், கையினால் செய்யப்படக் கூடிய தீப்பெட்டிக்கு வரி விலக்கு அளித்தபோது. இந்த மெழுகுத் தீப்பெட்டிக்கும் சேர்த்துதான் வரி விலக்கு அளித்தார்கள். அதேபோல்தான் கடந்த 17-7-1996 ஆம் தேதியன்று கையினால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு வரி விலக்கு உண்டு என்று சொன்னபோது அங்குள்ள உற்பத்தி செய்வோர்கள் எல்லாம் மெழுகு தீப்பெட்டிக்கும் வரி விலக்கு உண்டு என்ற எண்ணத்திலே அவர்கள் தொழிலைச் செய்து வருகிறார்கள். ஆனால் அதிகாரிகள் கொடுக்கக்கூடிய விளக்கம் வேறுவிதமாக இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மெழுகுத் தீப்பெட்டிக்கும் சேர்த்தே வரி விலக்கை அளிக்க வேண்டுமென்பதை என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், குடியாத்தம் போன்ற பல பகுதிகளிலே உள்ள தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சார்பாகவும் நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11 25

இந்த வரி விதிப்பு முறையினால் எந்த அளவிற்குத் தொழிலும். ஏற்றுமதியும் பாதிக்கப்படும் என்பதை ஒரு சில உதாரணங்களின் மூலமாக நான் சொல்ல விரும்புகின்றேன். விவசாயிகளிடமிருந்து விளையக்கூடிய பொருள்களை வாங்கி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தால். அதற்கு வரி விலக்கு கொடுக்கப்பட வேண்டுமென்பது முதலிலேயிருந்து மத்திய அரசினுடைய கொள்கை. 1975 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு தீர்ப்பின்படி. அந்தப் பொருளும் வரி விதிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டுமென்ற ஒரு தீர்ப்பு வந்தது. உடனேயே மத்திய அரசு 1976 ஆம் ஆண்டு **Central Sales Tax Act**-ல் 5 (3) என்ற ஒரு பிரிவை அவர்கள் அதிலே உண்டாக்கி, ஏற்றுமதி செய்யக்கூடிய பொருளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்ற சட்டத்தை ஏற்படுத்தினார்கள். அந்தச் சட்டத்தை மாநில அரசுகளும் ஏற்றுக்கொண்டன. 1982 ஆம் ஆண்டுகூட தூத்துக்குடியிலே உள்ள பி.பி.எம்.டி. என்ற நிறுவனமும், கர்நாடகாவிலே உள்ள ஒரு நிறுவனமும் நீதிமன்றத்திற்குச் சென்றபோது இதே கருத்து உறுதி செய்யப்பட்டது.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

1994 ஆம் ஆண்டு தமிழகத்தில் உள்ள விற்பனை வரித் துறை கமிஷனர் அளித்த விளக்கத்திலேகூட, ஏற்றுமதி செய்யக்கூடிய பொருளுக்கு. செக்ஷன் 7 (ஏ) 'applicable' ஆகாது என்று சொன்னார்கள். செக்ஷன் 7 (ஏ) என்பது கொள்முதல் வரி. ஆகவே விவசாயிகளிடமிருந்து ஒரு பொருளைக் கொள்முதல் செய்து, ஏற்றுமதி செய்பவர்களுக்கு அந்தப் பொருளைக் கொடுக்கும்போது அந்தப் பொருளின்மீது கொள்முதல் வரியை வசூலித்து அரசாங்கத்திற்குச் செலுத்தத் தேவையில்லை என்பதை 1994 ஆம் ஆண்டு தமிழகத்தில் உள்ள விற்பனை வரி ஆணையர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால் 1997 லே வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பின்படி, 7 (ஏ)படி கொள்முதல் வரிக்கு அது உட்படுத்தப்படும் என்ற ஒரு தீர்ப்பு வந்துவிட்டது. நீதிமன்றத்திலே தீர்ப்பு வந்தாலும்கூட, எப்படி 1975 ஆம் ஆண்டு நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு, அதற்கு அடுத்த ஆண்டு மத்திய அரசு **Central Sales Tax Act**-ல் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்ததோ—அதேபோல தமிழக அரசும் ஒரு திருத்தத்தை, செக்ஷன் 7 (ஏ)-க்குக் கொண்டுவர வேண்டும்.

மேலும் இப்போது இந்தச் சட்டத்தை. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிற்குப் பிறகு, 'ரெட்ராஸ்பெக்டிவ்'-ஆக அமல்படுத்த துறையினர் அவர்கள் நோட்டீஸ் கொடுத்து வருகின்றார்கள். இதேபோல் நீதிமன்றத் தீர்ப்புகள் வரும்போது அதனை **`Retrospective'**-ஆக அமல்படுத்தாமல், **`prospective'**-ஆக அமல்படுத்த வேண்டுமென்ற கொள்கை முடிவினை அரசு அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தம் **Sales tax**-ல் 5,000 அல்லது 6,000 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. பல நூற்றுக்கணக்கான பொருள்களிலிருந்து இந்த வருமானம் வருகிறது. ஆனால் குறிப்பிட்ட 5 பொருள்களிலிருந்து மட்டுமே 40 சதவீத வருமானம் வந்துவிடுகிறது. அவை என்னவென்றால் **I.M.F.L., Petrol, Diesel, Cement, Iron and Steel, Cotton yarn.** இந்த 5, 6 பொருள்களிலேயிருந்து மட்டும் 40 சதவீத வருமானம் வந்துவிடுகிறது. இன்னும் 50, 55 பொருள்களிலேயிருந்து 50 சதவீத வருமானம் வந்துவிடுகிறது. மீதமுள்ள 10 சதவீத வருமானம்தான் எஞ்சியுள்ள நூற்றுக்கணக்கான பொருள்களிலேயிருந்து வசூல் செய்ய வேண்டியிருக்கின்றது. இந்த 10 சதவீத வரியை வசூலிப்பதில்தான் அனைத்துக் குழப்பங்களும், அனைத்து கஷ்டங்களும் இருக்கின்றன. இதைச் சரி செய்ய வரி விகிதங்களில் மாறுதல் செய்தால் மட்டும் போதாது. சட்டங்களிலே தேவையான இடங்களில் புல சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதும் மிகவும் அவசியம் என்று கருதுகின்றேன்.

1989 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் ஒரு **Bold Decision** எடுத்தார்கள். அதாவது **'Multi Point tax'** என்று இருப்பதை **'Single Point Tax'** என்று ஒரே வரியிலே அதைக் கொண்டு வந்தார்கள். பல ஆண்டுகளாக இருந்த, நீண்ட நாளைய கோரிக்கை, அந்த ஒரே வரியில் நிறைவேற்றி வைக்கப்பட்டது. எந்த ஒரு நல்ல காரியத்திற்கும் சில பக்க விளைவுகள் ஏற்படுவது உண்டு. இந்த மல்டி பாயின்ட்டை சிங்கிள் பாயின்ட்டாகக் கொண்டு வந்தவுடனேயே சில பொருள்களுக்கு அது சிங்கிள் பாயின்டில் எப்படி வருகிறது, அல்லது மல்டி பாயின்டாக எப்படி வருகிறது என்பதிலே ஒரு குழப்பம்.

முற்பகல் 11-30

அதற்கு உதாரணமாக மசாலாப் பொடி. இது பொடி படும் பாடு. வரி விதிப்பிற்கு உட்பட்ட பொருள்களை வாங்கி, அதைப் பொடியாக்கி, மறுபடியும் விற்கும்போது Single Point Tax System-என்பதின்படி வரி வராது என்று அதிகாரிகளும் நினைத்தார்கள். வணிகர்களும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், 1991 ஆம் ஆண்டு தூத்துக்குடியிலே ஒரு டி.சி.டி.ஓ., எஸ்.வி.எஸ். நடராஜன் என்கிறவருக்கு நோட்டீஸ் கொடுக்கிறார். நீங்கள் வரி செலுத்தி அந்தப் பொருளை வாங்கி பொடியாக்கி விட்டீர்கள் என்று சொன்னால் அந்தப் பொடி வேறு பொருள் ஆகிவிடுகிறது. அதனாலே, நீங்கள் மறுபடியும் அதற்கு Tax கட்ட வேண்டும் என்று சொன்னார். உடனே, எஸ்.வி.எஸ். நடராஜன் ஹைகோர்ட்டுக்குப் போனார். ஹைகோர்ட்டிலே என்ன சொன்னார்கள் என்றால், ஏற்கெனவே Tax suffered ஆகியிருக்கிற பொருளை வாங்கி, நீங்கள் பொடியாக்கி விற்றீர்கள் என்று சொன்னால், மறுபடியும் Tax Collect பண்ண வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டார்கள். சரி என்று அப்படியே போய்கொண்டு இருந்தது. அடுத்த வருடம் நாகர்கோயிலிலே, ஒரு டி.சி.டி.ஓ. சாமி & கோ. என்ற நிறுவனத்திலே சோமசுந்தரம் என்ற ஒருவருக்கு நோட்டீஸ் கொடுக்கிறார். என்ன என்று? இந்தப் பொடிக்கு மறுபடியும் Tax உண்டு என்று. சோமசுந்தரம் சொல்கிறார் இல்லை, எஸ்.வி.எஸ். நடராஜன் கேசிலே ஹைகோர்ட்டிலே சொல்லிவிட்டார்கள். இது சிங்கிள் பாயின்ட்டில் வரும், மல்ட்டி பாயின்ட்டில் வராது என்று சொல்லிவிட்டார்கள் என்கிறார். இவர்கள், இல்லை அது எஸ்.வி.எஸ். நடராஜன் தூத்துக்குடியிலே இருக்கிறவருக்குத்தான். நீங்கள் சாமி & கோ. நீங்கள் வேண்டுமானால் ஹைகோர்ட்டுக்குப் போய் ஆர்டர் வாங்கிக் கொண்டு வாருங்கள் என்று சொன்னார்கள். இப்படி எல்லாம் நடந்தது. நடக்கிறது. உடனே அவர்—சாமி & கோ. கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டிலே மறுபடியும் அந்தத் தீர்ப்பு, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அந்தத் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது 1993-லே, அதற்குப் பிறகு கமிஷனரிடமிருந்து ஒரு கிளாரிஃபிகேஷன் வாங்கினார்கள். அந்தக் குழப்பம் பல இடங்களிலே இருந்து கொண்டிருந்தது. 3-2-1997-லே, அதாவது நம்முடைய ஆட்சி வந்த பிறகு கமிஷனர் ஒரு கிளாரிஃபிகேஷன் கொடுக்கிறார். Tax suffered பொருட்களை வாங்கிப் பொடியாக்கினால், அதற்கு மறுபடியும் வரி கிடையாது என்று சொல்கிறார். அதற்குப் பிறகு, 1993-லே நடந்ததே, அந்தக் கேசை

மறுபடியும் பெஞ்ச் அப்பீலுக்குக் கொண்டு வருகிறார்கள். யார்? டிபார்ட்மெண்ட். அவர்கள் விடுவதாக இல்லை. அந்த Bench appeal-க்குப் போகிறபோது, அந்த சோமசுந்தரத்திற்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை, அவர் கோர்ட்டுக்கு வர முடியவில்லை. exparte judgement ஆகிறது. exparte judgement-ல் என்ன சொல்லிவிட்டார்கள் என்றால், பொடியாக்கி மறுபடியும் நீங்கள் விற்கிறபோது கண்டிப்பாக இன்னொரு தடவை Tax போடலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பு சொல்லிவிட்டது. நீதிமன்றத்தினுடைய அந்தத் தீர்ப்புக்குள்ளே நான் போக விரும்பவில்லை. இப்போது Tax போடலாம். ஆனால், Tax போடுகிறபோது, இதுகாலம் வரையிலே அந்தப் பொருளுக்கு வரியில்லை என்று துறையும், அதிகாரிகளும் எண்ணி, கணக்கு ஒவ்வொரு ஆண்டும் முடிக்கப்பட்டு வந்துவிட்டது. அப்படி இருக்கிறபோது, நீதிமன்றத் தீர்ப்புக்கு முந்தைய காலத்திலிருந்தே வரியைக் கட்ட வேண்டும், retrospective-ஆகக் கட்ட வேண்டும் என்று நோட்டீஸ் கொடுப்பது எந்த வகையிலே நியாயம்? ஆகவே, இது போன்ற தீர்ப்புகளுக்கு retrospective effect கொடுக்காமல் prospective effect கொடுக்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்துக் இந்த 'ரெட் லைட்டை' காட்டுவதற்கு நான் பேரவைத் தலைவரிடம் அனுமதி வாங்கியிருக்கிறேன். (ஒரு ரெட் லைட்டை திரு. சொக்கர் அவையில் காண்பித்தார்) இது வண்டிகளின் பின்னால் பொருத்தக் கூடிய டேஞ்சர் லைட் அல்லது ரெட் லைட் அல்லது 'டெயில் லேம்ப்' என்று சொல்வோம். இதற்கு எவ்வளவு Tax இருக்கும்? இந்தப் பொருளுக்கு எவ்வளவு Tax என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. இந்தத் துறையின் பொறுப்பிலே இருக்கக்கூடிய முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு டிபேட் முடிவதற்குள்ளாக அதிகாரிகளிடம் கேட்டு இதற்கு எவ்வளவு Tax என்று நீங்கள் சொல்ல வேண்டும். இதிலே இவ்வளவு குழப்பம் இருக்கிறதே என்று சொல்லி நான் நேரே ஜெனரல் பேட்டர்ஸ் ரோடுக்கே சென்று விட்டேன். இதற்கு எப்படித்தான் Tax போடுகிறார்கள் பார்ப்போம் என்று சொல்லி, சென்றேன். ஒரு கடையிலே 4, 5 பேர் நின்றார்கள். ஒருவர் டேஞ்சர் லைட் வேண்டுமென்று கேட்டார். நீங்கள் எதற்காக வாங்குகிறீர்கள் என்று கேட்டார்கள். அவர் என்னுடைய லாரிக்காக வாங்குகிறேன் என்றார். உடனே அவருக்கு பில்லைப் போட்டார்கள். அடுத்து, இன்னொருவர் டேஞ்சர் லைட்

வேண்டுமென்று சொன்னார். நீங்கள் எதற்காக வாங்குகிறீர்கள் என்று கேட்டபோது, அவர் என்னுடைய டிராக்டருக்காக வாங்குகிறேன் என்றார். அவருக்கும் பில் போட்டார்கள். அடுத்து, இன்னொருவர் டேஞ்சர் லைட் கேட்டபோது, உங்களுக்கு எதற்காக என்று கேட்டார்கள். உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. என்ன ஐயா, உங்களிடம் சொல்லிவிட்டுத்தான் வாங்க வேண்டுமா. பில்லைப் போடுங்கய்யா என்றார். இல்லை, நீங்கள் சொன்னால்தான் போட முடியும் என்று சொன்னவுடனே அவரும் சொல்லி அவருக்கு ஒரு பில்லை போட்டுக் கொடுத்தார்கள். அந்தப் பொருளின் விலை 100 ரூபாய். முதலிலே பில் போட்டவருக்கு 111 ரூபாய். இரண்டாவது பில் போட்டவருக்கு 104 ரூபாய். மூன்றாவது பில் போட்டவருக்கு 108 ரூபாய். ஆனால், பொருள் ஒன்றுதான். லாரிக்கு வாங்குவதாக இருந்தால் 11 சதவிகித டேக்ஸ்.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பேரும் நீங்கள் அங்கே இருக்கும்போது வந்துவிட்டு போனார்களா? அதற்கு எவ்வளவு காலம் பிடித்தது? ஒவ்வொருவரும் வருவதற்கு இடையிலே எவ்வளவு நேரம் இருந்தது?

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கடையிலே கூட்டம். பெரிய கூட்டம். வாங்குவதற்கு நிறையப் பேர் வந்திருந்தார்கள். இந்தக் கதை இத்தோடு முடியவில்லை. அதிலே இன்னொரு அகராதி படித்த பையன் இருந்தான். அவன் உடனே எனக்கு ஒரு ரெட் லைட் கொடு என்று கேட்டான். நீங்கள் எதற்கு வாங்குகிறீர்கள் என்று கேட்க, அவன் உடனே நான் வீட்டிலே கொண்டுபோய் வைத்துக் கொள்வேன் என்று சொன்னான்; அப்படி என்றால் முதல் ஷெட்யூல்லே பார்ட் 'D'-ல் இனம் 67-ல் வரும்.

முற்பகல் 11-35

'**Items not mentioned anywhere else in the Schedule**' என்று ஒன்று இருக்கிறது என்று சொல்லிவிட்டு அதற்கு 11% போட்டார்கள். இதை ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். **Automobile spare parts** ஒரு கடையிலே நூற்றுக்கணக்கான பொருட்களை விற்கிறார்கள். இது 4% Tax-ல் இருக்கிறது. 8% Spareparts Tax-ல் இருக்கிறது. 11% Tax-ல் இருக்கிறது. 16% Tax-ல் இருக்கிறது. 20% Tax-ல் இருக்கிறது. இதை நமக்கு வருமானம் பாதிக்காத அளவிலே ஏதாவது ஒருவிதத்திலோ

அல்லது இரண்டு விதத்திலோகூட நாம் Fit in பண்ண முடியும். ஆகவே தயவு செய்து துறையினர் இதில் கவனம் செலுத்துமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரி சீரமைப்புக் குழுவிலே இருந்தார்கள். அப்போதே இதைக் கண்டுபிடித்து சீரமைப்புக் குழுவிலே ஒரு பரிந்துரையாக வைத்திருப்பாரேயானால் அதை நாங்கள் ஏற்றுக்கொண்டு செயல்பட்டிருக்க ஏதுவாக இருந்திருக்கும். இப்போதும் ஒன்றும் வீணாகிவிடவில்லை. இப்போதும் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். சொக்கர்: துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் இப்படியெல்லாம் கேட்பார் என்று எனக்குத் தெரியும். அதற்காகத்தான் நான் பரிந்துரை செய்த புத்தகம் இரண்டு வால்யூம்களை எடுத்துக்கொண்டு வந்து எதிர்க்கட்சித் தலைவர் ரூமிலே வைத்திருக்கிறேன். 3 பக்கங்கள் இதைப்பற்றி தெளிவாக எழுதியிருக்கிறோம். மிகத் தெளிவாக எழுதியிருக்கிறோம். இதை எப்படி வருமானம் குறையாமல் சீரமைக்கலாம் என்பதையெல்லாம் எழுதியிருக்கிறோம். முதல்வர் அவர்களுக்கு இருக்கக்கூடிய வேலைப் பளுவின் காரணமாக அதைப் படித்துப் பார்த்தாரோ, இல்லையோ தெரியவில்லை. குறைந்தபட்சம் அதிகாரிகளாவது அதைப் படித்துப் பார்த்து, இந்த யோசனை பரிசீலிக்கத்தக்கதாக இருக்கிறது அல்லது அதிலே ஒரு கஷ்டம் இருக்கிறது என்று முதல்வர் அவர்களிடம் ஒரு Discussion-க்கு வந்தார்கள் என்றால் இதையெல்லாம் உடனே நீங்கள் கிளியர் பண்ணிவிடுவீர்கள். சொல்கிறார்களோ, இல்லையோ தெரியவில்லை. மாதத்திற்கு 3 நாட்களாவது இந்த விற்பனை வரிக்காக ஒரு General meeting போடுங்கள். எங்களை எல்லாம் கூப்பிடுங்கள். நாங்கள் எல்லாம் வந்து உட்காருகிறோம். பொது மக்களையும் கூப்பிடுவோம். இதையெல்லாம் சீர் பண்ணலாம். சின்னச் சின்ன வேலைகள்தான். இதேபோல Tractor Engine and parts-லே ஒரு கோளாறு இருக்கிறது. ட்ராக்டர் பார்ட்ஸுக்கு எல்லாம் 4% Tractor Engine-க்கு மட்டும் ஏதோ ஒரு சந்தேகப் பார்வை கொண்டு 11% ஆக வைத்திருக்கிறார்கள். Tractor engine-யும் அந்த 4%-க்குக் கொண்டு வருவது நியாயம் என்று நான் கருதுகிறேன். சரி என்று ஏற்றுக்கொண்டால் அதைச் செய்துவிடுங்கள். இதே மாதிரி இன்னொரு

கஷ்டம் எதிலே இருக்கிறது என்றால் Iron and Hardware and building materials விற்பனை ஒரே கடையிலே விற்கிறார்கள். இதுவும் பல்வேறு வரி விதிப்புகளுக்கு உள்ளாகி 4, 8, 11, 16 சதவிகிதம் என்று இருக்கிறது. இதையும் ஒழுங்குபடுத்த வேண்டும்.

அதேபோலElectricals and Electronic goods. அதுவும் பல்வேறு வரி விதிப்புகளில் இருக்கிறது. அதையும் சரி பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். Building materials என்று வருகிறபோது Paint industry பற்றி நான் கொஞ்சம் சொல்ல வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) தமிழகத்திலே சிறு உற்பத்தியாளர்கள் தயாரிக்கின்ற பெயிண்டுக்கு 4% ஆக விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு வொர்க்ஸ் கான்ட்ராக்டிலே இதே மாதிரி பெரிய பிரச்சினை இருக்கிறது. 1986-லிருந்து 1993 வரையிலேயும் பலவிதமான பிரச்சினைகள் இருந்து, அந்தப் பிரச்சினைகள், குழப்பங்கள் எல்லாம் 1993-க்குப் பிறகு, அதுவும் நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளுக்குப் பிறகுதான் நீங்கியது. ஆகவே Works contract-ல் இப்போது வரி விதிப்பு செய்யும்போது 1986-லிருந்து 1993 வரை இருந்த ஒரு குழப்பமான நிலையை துறையும் ஒப்புக்கொள்கின்றது; நீதிமன்றமும் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆகவே 1986-லிருந்து 1993 வரை உள்ள காலத்திற்கு வொர்க்ஸ் கான்ட்ராக்டில் வரி விதிப்பிலிருந்து வெய்வர் கொடுத்து, 1993-க்குப் பிறகு நீங்கள் அதை வசூல் செய்வது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதிலே ரொம்ப கஷ்டப்படுகிறவர்கள் Mosaic Tiles பண்ணுகிறவர்களும், Photography தொழிலில் இருக்கிறவர்களும்தான். அவர்களுடைய நியாயமான கோரிக்கையை இந்த அரசு செவி மடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னும் முக்கியமானது. போன வருடம் நான் திரும்பத் திரும்பப் பேசவில்லை; புலம்பியே, தீர்த்துவிட்டேன். அதாவது Consignment sales-என்பதிலே சில பேர் ஏமாற்றுகிறார்கள் என்பது உண்மை. சில பேர் ஏமாற்றுகிறார்கள் என்பதற்காக எல்லோர் மேலேயும் சந்தேகப்பட்டுக்கொண்டு Consignment sales-ல் போகிற பூராவையும் நிறுத்தி வைத்துக்கொண்டு கண்டபடி பெனால்டி போட்டு அவர்களை வரி விதிப்புக்கு உட்படுத்தினோம் என்றால் ஏறக்குறைய நூற்றுக்கணக்கான யூனிட்டுகள் I.P. கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள்.

ஆகவே அந்த Consignment sales-ல் உயர் அதிகாரிகளை வைத்து தனிக் கவனம் செலுத்தச் சொல்லி, நியாயம் வழங்க வேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

எதிர்க்கட்சித் தலைவருடைய ஒரு முக்கியமான கோரிக்கை. திரு. பாலகிருஷ்ணன் - கிருஷ்ணனுக்குப் பிடித்தது வெண்ணெய்.—அந்த வெண்ணெய்க்கு வரி விலக்கு வேண்டும் என்று கேட்டு இருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார். பாலகிருஷ்ணனுக்குப் பிடித்தது வெண்ணெய்தானே; அதற்கு வரி விலக்குக் கொடுக்கிறோம் என்று. அந்த வெண்ணெய்க்கு வரி விலக்குக் கொடுக்கும்போது, மொத்தத்திற்கும் கொடுக்க வேண்டாம். வருமானம் பாதிக்காமல் pasteurised பட்டர், unpasteurised பட்டர் என்று பிரித்து இயற்கையான unpasteurised பட்டருக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று நெய்க்கும்- Trade and merckandise Marks Act-ல் பதிவு செய்யப்படாத நெய்க்கு 4%. இது வரிக் குறைப்பு அல்ல. ஒரு விளக்கம் மட்டும் அதற்கு கொடுக்க வேண்டும். Branded ghee — `Branded ghee, with brand or without brand but not registered under Trade and Merchandise Marks Act' என்ற ஒரு விளக்கத்தை மட்டும் சேர்த்தால் போதும். இதற்கு வரி விலக்கு வேண்டாம்; வரிக் குறைப்பும் வேண்டாம்: அந்த ஒரு விளக்கம் மட்டும் தேவை.

அதற்குப் பிறகு காகிதப் பை, கற்கண்டு போன்றவைகளுக்கும் விலக்கு கேட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-40

மிக முக்கியமான ஒரு பிரச்சினை. விற்பனை வரியினால் எப்படி இங்கே தொழில் துறை பாதிக்கப்படுகிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் மட்டும் சொல்லி நான் முடித்து விடுகிறேன். அதாவது மொலாசஸ்க்கு (Molasses) 1992-ல் கடந்த ஆட்சிக் காலத்தில் 3 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக வரி உயர்த்தப்பட்டது. அதற்குக் காரணம் என்ன சொன்னார்கள் என்றால், to prevent misuse of molasses, அதற்காக இந்த Tax போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இதிலே என்னுடைய வாதம் எல்லாம் இன்றைக்கு 2½ ரூபாய் ஒரு கிலோ molasses அதற்கு நீங்கள் 30 சதவீதம் Tax போட்டாலும் கூட அதிலிருந்து கூடுவது 75 பைசா தான். அந்த 75

பைசா கூடுவதால் மிஸ்யூஸைத் தடுக்க முடியாது. மிஸ்யூஸைத் தடுப்பது என்றால் அதற்குரிய அதிகாரிகளை வைத்து சட்டப்படி நடவடிக்கை எடுத்துத்தான் தடுக்க முடியும். இப்படிச் செய்து இருப்பதால் என்ன ஆகிறது என்றால் மொலாசஸ் விலை தமிழ்நாட்டில் கூடுதல் ஆகிறது. இதே moloses-ஐ நாம் வெளி மாநிலத்திற்கு 4 சதவீதம் சி.எஸ்.டி.யில் விற்கிறோம். அவர்கள் வாங்கி, அதை மூலப்பொருளாக வைத்து, கெமிக்கல் தயார் செய்து தமிழ்நாட்டில் கொண்டுவந்து மறுபடியும் விற்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற தொழிற்சாலைகளுக்கு நாம் என்ன செய்கிறோம், 30 சதவீதம் Tax கொடு என்று சொல்கிறோம். ஆக மூலப்பொருளினுடைய அடக்க விலையை நாம் artificial-ஆக உயர்த்தி இங்கே உள்ள தொழிற்சாலைகள் எல்லாம் நசிந்து, பாதிக்கக்கூடிய அளவுக்கு இன்று தொழில் கொள்கை இருக்கிறது என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். போன வருடம் ஸ்டேட் எக்சைஸ் பாலிசியில் சொல்லியிருக்கிறீர்கள். Alcohol based chemical industries-களுக்கு எல்லாம் நாம் என்கரேஜ்மெண்ட் கொடுப்போம், molasses இங்கே Surplus-ஆக வந்து விட்டது. அதனால் அதைத் தொழிலில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நாம் செய்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். சொன்னதற்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்பதை நான் என்னுடைய வினாவாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே டிபார்ட்மெண்டில் பல. . . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது.

திரு. ஆர். சொக்கர்: ஒரு நிமிடத்தில் கண்டிப்பாக முடித்து விடுகிறேன். Department-ல் இருக்கிற Staff welfare-க்காக சில கருத்துக்களை ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் எழுதி கொடுத்திருக்கிறேன். அவைகளையும் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்; பரிசீலனை செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

வருமானத்தைப் பெருக்குவதற்காக 2 யோசனைகள். Sale in transit என்று இருக்கிறது. வெளி மாநிலத்திலிருந்து தமிழ் மாநிலத்திற்குள் விற்கக்கூடிய பொருட்களுக்கு—sale in transit என்று சொல்கிற முறையினால் தமிழகத்திற்கு வரக்கூடிய வருமானம் பெரிய அளவுக்குப் பாதிக்கப்படுகிறது. இதில் கவனம் செலுத்தினால் தமிழகத்திற்கு

வரக்கூடிய வருமானம் கண்டிப்பாக உயரும். அதேபோல் non-resident dealer-க்கு ரூ. 10 லட்சத்திற்கு மேலே போனால் A.S.T. கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதனால் தமிழ்நாட்டில் நடக்கக்கூடிய வாணிபம் குறைந்து விடுகிறது. உங்களுடைய பாலிசி நோட்டிலேயே சொல்லியிருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் உற்பத்தியைக் கூட்ட வேண்டும், இங்கே வாணிபத்தைப் பெருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த non-resident dealer-க்கு ரூ. 10 லட்சத்திற்கு மேலே போனால் A.S.T., கட்டவேண்டும் என்று சொல்லியிருக்கிற சட்டத்தினால் தமிழ்நாட்டில் விற்பனை ஆகக்கூடிய பொருட்களின் விற்பனை குறைந்து தமிழ்நாட்டிற்கு வரக்கூடிய வருமானம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இதையெல்லாம் மாற்றும்போது நிச்சயமாக நீங்கள் பாடுபடுகின்ற உழைப்புக்கு ஏற்ற அளவுக்கு வருமானம் பெருகும். தமிழ்நாட்டிற்கு நல்ல வாழ்வு இன்னும் வரும், இந்த அரசுக்கும், இந்த அரசுக்குத் தோழமையாக இருந்து கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடிய எங்களுக்கும் மக்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும் என்ற கருத்தோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

என்பது வள்ளுவன் வாக்கு. இந்த வழியிலிருந்து சற்றும் பிறழாமல் ஆட்சி நடத்திவரும் தமிழனத்தின் தன்னிகரில்லா தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசின் பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிருவாகம் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விற்பனை வரிச் சீர்திருத்தக் குழு கலைஞருடைய நல்லாட்சி 1996 ஆம் ஆண்டு மே திங்களில் உதயமாகுமுன், பொது நலத்தைக் கருத்தில் கொண்டுதான் விற்பனை மற்றும் ஏனைய வரிகள் விதிக்கப்பட்டன என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கடந்தகால ஆட்சியில் விற்பனை வரி விதிப்பினால் ஏற்பட்ட சங்கடங்கள், தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில உள்ள குறைபாடுகள், அதனால் வணிகர்கள் மற்றும் பொது மக்களுக்கு ஏற்பட்ட சிரமங்கள் அனைத்தையும் களை எடுக்கவும், வரி ஏய்ப்புகளைக் குறைத்து அரசின் கருவூலத்திற்கு மக்கள் செலுத்தும் வரிப் பணத்தை முழுவதுமாகக் கொண்டு வரவும். ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை அரசுக்கு வழங்க. 18-9-1996 அன்று மாண்புமிகு கலைஞர் அவர்களால் விற்பனை வரிச் சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் பெரும்பாலான பரிந்துரைகள் ஏற்கப்பட்டு. விற்பனை வரிச் சட்டத்தில் பல உன்னதமான மாற்றங்களைச் செய்து, தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது. இந்த விற்பனை வரிச் சீர்திருத்தக் குழுவினை ஒரு நிரந்தரமான குழுவாக அமைத்து மீண்டும் செயல்படச் செய்தால் வணிக வரி அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு மேலாக அரசுக்குப் பல தரப்பிலிருந்தும் ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் பெற வழி உண்டு. இதையே என்னுடைய முதல் கோரிக்கையாக மாண்புமிகு முதல்வர் முன் வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

கோடைக் காலங்களில், தேவைக்கேற்றபடி மின் உற்பத்தி இல்லை என்பதுதான் தமிழகத்தின் உண்மை நிலை. அதனால் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு. தொழிற்சாலைகளில் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. இருந்தாலும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் நூற்பாலைகள், சிமெண்ட் ஆலைகள், இரசாயன மற்றும் சர்க்கரை ஆலைகள் போன்ற ஆலைகள் ஜெனரேட்டர் கருவிகளைப் பொருத்தி, தானாகவே மின் உற்பத்தி செய்து மின் பற்றாக்குறையை ஈடுகட்டி, தொழிலைத் தடைபடாமல் நடத்தி வருகின்றன. இது ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆகவே, கலைஞர் அவர்களுடைய சீரிய தலைமையில், தொழில் துறையில் வேகமாக முன்னேறி வரும் தமிழகத்தின் தொழிற்சாலைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தொழிற்சாலைகளில் ஜெனரேட்டர்களுக்காக உபயோகிக்கபபடும் டீசல் மீது விதிக்கப்படும் விற்பனை வரியை 18 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைப்பது பொருந்தத்தக்கதாக அமையும். இதனால் அரசுக்கு வருவாய் அதிகரிக்குமே தவிர, இழப்பு இருக்காது என்பதற்குக் கீழ்க்கண்ட விவரங்களை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உதாரணத்திற்காக, "சைமா"வின் உறுப்பினர்களாகிய 89 நூற்பாலைகள் மட்டும் எடுத்துக் கொள்வோம். 1995-96 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி அவைகளுடைய மொத்தத் தேவையான 4.59 கோடி லிட்டர் டீசலில் 82 பர்சென்ட் வெளி மாநிலங்களிலிருந்து ரூ. 25.43 கோடிக்கு "சி" ஃபார்ம் அடிப்படையில் 4 பர்சென்ட் வரியாக - ரூ. 1.02 கோடி கொடுத்து வாங்கப்பட்டது. மீதமுள்ள தேவையான ரூ. 83 இலட்சம் லிட்டர் டீசலை ரூ. 96 இலட்சம் வரி கொடுத்து நமது மாநிலத்திலேயே வாங்கப்பட்டது. தொழிற்சாலைகள் உபயோகிக்கும் டீசலின் வரி 4 பர்சென்ட் ஆக இருந்திருக்குமேயானால் இந்த நூற்பாலைகள் அவைகளுடைய டீசல் தேவையை முழுவதுமாக நமது மாநிலத்திலேயே வாங்கி அரசுக்கு ரூ. 1.23 கோடி வரி கிடைத்திருக்கும். அதாவது 27 இலட்சம் ரூபாய் கூடுதலாக அரசுக்கு வரி கிடைத்திருக்கும்.

அனைத்துத் தொழிற்சாலைகளிலும் பொருத்தப்பட்டுள்ள ஜெனரேட்டர்களுக்குச் சலுகை முறையில், டீசல் விநியோகம் செய்வதில் எந்தவித முறைகேடுகளும் நடக்காத வண்ணம் மின் வாரியத்தின் வாயிலாகப் பார்த்துக் கொள்ள போதிய கட்டுப்பாடுகள் ஏற்கெனவே உள்ளன. ஆந்திரா மற்றும் கர்நாடகத்தில் இதுபோன்ற டீசல் விநியோகம் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. என்னுடைய மேற்படி கோரிக்கை அரசுக்கு ,வருவாய் இழப்பு ஏற்படாத, ஆனால் மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் ஒரு திட்டமாக உள்ளதால், அதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, வெண்ணெய் மற்றும் நெய் மீது விதிக்கப்படும் விற்பனை வரியைப் பற்றி என்னுடைய பணிவான கருத்துக்களையும் நான் சொல்ல வேண்டிய அவசியம் உள்ளது. ஏனென்றால், காங்கேயத்தில் நல்ல நெய்யும், வெண்ணெயும் தயாரிக்கப்படுகின்றன என்பதை உலகு அறியும். தற்போது, பதப்படுத்தப்பட்ட, அதாவது pasteurised வெண்ணெய், பதப்படுத்தப்படாத, Non-pasteurised வெண்ணெய் என்று வேறுபாடு இல்லாமல் 4 பர்சென்ட் வரி விதிக்கப்படுகிறது. பதப்படுத்தப்படாத வெண்ணெயிலிருந்துதான் வரிக்குட்பட்ட பொருளான நெய் தயாரிக்கப்படுகிறது. இம்முறையில் நெய்யிற்கு மறைமுகமாகவும், நேரடியாகவும் இரட்டிப்பு வரி கொடுக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, குடிசைத் தொழில் வழியாகத் தயாரிக்கப்படும், அழுகும் பொருளான பதப்படுத்தப்படாத

[திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்] [1998 மே 4

வெண்ணெய்க்கு முழு வரி விலக்கு அளிப்பது நியாயமானதொன்று என்று கருதுகிறேன்.

மேலும், வணிகச் சின்னம் உடைய - Branded–நெய்யிற்கு 10 பர்சென்ட் வரி என்றும், வணிகச் சின்னம் இல்லாத - Non-branded–நெய்யிற்கு 4 பர்சென்ட் வரி என்றும் தற்போது விதிக்கப்படுகிறது. இதில் நடைமுறையில் உள்ள சிரமம் என்னவென்றால், வணிகச் சின்னம் இல்லாத நெய்யை உண்மையாகவே விற்றாலும்கூட, அவை அக்மார்க் செய்யப்படுவதால், இது வணிகச் சின்னம் உடைய நெய்யாகத்தான் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அதன்மீது கட்டாயமாக 10 பர்சென்ட் வரி விதிக்கப்படுகிறது. இந்த நிலையைத் தவிர்க்க பிஸ்கட்டுகளுக்கு வரி உள்ளது போல், டிரேட் மார்க் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வணிகச் சின்னம், பதிவு செய்யப்படாத வணிகச் சின்னம் என்று வேறுபடுத்தி, பதிவு செய்யப்பட்ட வணிகச் சின்னம் உடைய நெய்யிற்கு 10 பர்சென்ட் வரி என்றும், பதிவு செய்யப்படாத வணிகச் சின்னம் மற்றும் வணிகச் சின்னமே இல்லாத நெய் ஆகிய இரண்டிற்கும் 4 பர்சென்ட் என்றும் வரி விதிக்க அரசைக் கேட்டுக் கொள்கின்றேன்.

விசைத்தறி மற்றும் ஆலைகளின் கடுமையான போட்டியினை எதிர்கொள்ள இயலாமல் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரக்குகள் தேக்கமுற்று, நெசவாளர்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த சூழ்நிலையில், கைத்தறி நெசவாளர்களுக்கு அடுக்கடுக்காகச் சலுகைகளைச் சட்டப் பேரவையில் அறிவித்து, பல்லாயிரக்கணக்கான நெசவாளர்களுக்கு மறுவாழ்வு அளித்து, ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் என் ஒப்பற்ற தலைவர் அவர்களே, by a stroke of your mighty pen, you have wiped away the tears of millions of poverty stricken weavers. You have rekindled their hopes and their aspirations. You have assured them of a bright future and a life to look forward to. நெசவாளர்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்தி, அறிஞர் அண்ணா கண்ட நமது தி.மு. கழகம் அன்றும், இன்றும், என்றும் ஏழைகளின் பாதுகாவலன் என்பதை உலகிற்கு மீண்டும் தெளிவுப்படுத்தியுள்ளீர்கள். தங்களை மனதாரப் பாராட்டும் இவ்வேளையில், கைத்தறி மூலம் தயாரிக்கப்படும் தலையணை உறைகளுக்கு வரி விலக்கு அளித்து, தேங்கியுள்ள சரக்குகளை விற்பனை செய்ய மேலும் உதவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

1998 மே 4] [திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்]

முற்பகல் 11-50

தமிழ்நாட்டிலிருந்து ரூ. 600 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதில் 60 முதல் 70 விழுக்காடு கூட்டுறவுத் துறை அல்லாத தனியார் துறையினரால் தயாரிக்கப்படுகிறது. இத்துறையில் ஈடுபட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்களின் நன்மை கருதி, ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், கைத்தறித் துணிகள் தயாரிக்க உபயோகிக்கப்படும் சிட்டா நூல் (hank yarn) மீது விதிக்கப்படுகின்ற 2 சதவீதம் வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறித் துணிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த 2 சதவீதம் export incentive சில ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளதால், மேற்சொன்ன வரிச் சலுகை இதனை ஈடுகட்டும் வகையில் அமையும்.

மேழிச் செல்வம் கோழைபடாது. 1-4-1977 முதல் அப்போது தமிழ்நாடு Dairy development corparation இருந்த நிறுவனம் தயாரிக்கும் கலப்பு மாட்டுத் தீவனத்திற்கு வரி விலக்கு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் 21-9-1980 அன்று இந்த நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஃபெடரேஷனாக மாற்றப்பட்டது. இந்தப் பெயர் மாற்றத்தின் காரணமாக, மாட்டுத் தீவனத்திற்கு ஏற்கெனவே கொடுத்து வந்த வரிவிலக்கு தொடரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1997-98 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் மாட்டுத் தீவனத்திற்கு வரி விலக்கு அளித்தார்கள். இதனைத் தொடர்ந்து, தமிழக Gazette Extraordinary நாள் 5-3-1997-ல் மாட்டுத் தீவனம் சேர்க்கப்பட்டு, விற்பனை வரி விலக்கு பெற வேண்டிய நிலை இருந்தும், தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில், பகுதி 'பி' தொகுப்பு எண் 1-ல் இருந்து கலப்பு மாட்டுத் தீவனம் நீக்கப்படாத காரணத்தால் இதன்மீது இன்று வரை 4 சதவீதம் வரி விதிக்கப்பட்டு வருகிறது.

எனவே, கூட்டுறவுத் துறையில் தயாரிக்கப்படும் "ஆவின்" கலப்பு மாட்டுத் தீவனங்களுக்கு மட்டுமாவது வரி விலக்களித்து, 8,500-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 26.6 இலட்சம் விவசாயிகள் பயன் பெறச் செய்து, "மேழிச் செல்வம் கோழைபடாது" என்பதை உணர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்] [1998 மே 4

என்னுடைய உரையின் தொடக்கத்தில் நான் கோடிட்டுக் காட்டியது போல, குடிமக்களை அரவணைத்து, அவர்களுடைய நன்மை கருதி, செங்கோல் ஆட்சி நடத்தி வரும் என் உயிரினும் மேலான மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய நல்லாசின் அடிச்சுவட்டை நானிலமே என்றென்றும் போற்றி நிற்கும் என்று கூறி அமர்கிறேன். வாழ்க கலைஞர்! வளர்க தமிழகம்!! நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வணிக வரித் துறை மற்றும் மாவட்ட நிருவாகம் ஆகியவற்றுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது ஒரு சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வணிக வரித் துறையைப் பொறுத்தவரையிலும், 6,000 கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்கு வருமானத்தை ஈட்டித் தருகிற ஒரு துறை என்று நாம் பெருமைகொள்கிற அதே நேரத்தில், பணத்தைக் கையாளுகின்ற இடத்தில் இருக்கின்ற இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளின் நடவடிக்கை அரசின் பெருமைக்கு மேலும் வலுவூட்டுகிறதா, பலவீனப்படுத்துகிறதா என்பதையும் நாம் கவனிக்க வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அர்த்தசாஸ்திரத்தில் சாணக்கியர் ஒன்றைக் குறிப்பிடுகிறபோது அரசுக் கருவூலங்களைக் கையாளுகிற அதிகாரிகள் எவ்வளவு முறைகேடாகப் பணத்தைக் கையாண்டார்கள் என்று கேட்டபோது, "தண்ணீரிலே நீந்துகிற மீன் எவ்வளவு தண்ணீர் குடித்தது என்று சொன்னால் கருவூலத்தைக் கையாளுகிற அதிகாரிகளின் கையாடல் எவ்வளவு என்பதைச் சொல்லிவிடலாம்" என்று சொன்னாராம். நான் ஏன் இதைக் குறிப்பிட வருகிறேன் என்றால், இந்த வணிக வரித் துறை என்பது, பல்வேறு துறைகளில் சிறப்பைப் பெற்றுள்ள நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களின் தலைமையில் இயங்குகிற அரசுக்குக் களங்கத்தை ஏற்படுத்துகிற அதிகாரிகள் நிறைந்த ஒன்றாக இருக்கிறது என்பதற்காகத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வணிக வரித் துறையில் இரண்டு வசூல்கள் நடைபெறுகின்றன. வணிக வரித் துறைக்கு இரண்டு முகங்கள் இருக்கின்றன. ஒரு முகம் அரசுக்கு வருமானத்தைக் கொண்டு வருகின்ற முகம். பிரிதொரு முகம் அதிகாரிகள்

1998 மே 4] [திரு. கே. சுப்பராயன்]

தங்களுக்குத் தாங்களே வருமானத்தைத் தேடிக்கொள்கின்ற முகம். இந்தப் பிரிதொரு முகத்தை நாம் உடைத்தெறியாதவரை, அரசுத் துறைக்கு வருகின்ற வருமானத்தைக் காப்பாற்றிக் கொள்வது என்பது கஷ்டமாக இருக்கும் என்பதோடு, அரசின் நல்ல பெயருக்குக் களங்கத்தை உருவாக்கும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

குறிப்பாக நான் தெரிவிக்க விரும்புவது Hotel-களைப் பற்றி. Hotel-களைப் பொறுத்தவரையிலும் என்னிடம் ஏராளமான report-களின் நகல்கள் இருக்கின்றன. இந்த அரசு அதிகாரிகள், வணிக வரித் துறை அதிகாரிகள் Hotel-களில் நடந்துகொள்கின்ற முறை என்பது கடுமையான நடவடிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசு 25 இலட்சம் ரூபாய் வரை வரி விலக்கு அளித்துள்ளது. 50 இலட்சம் ரூபாய் வரை 1% compound rate. 50 இலட்சத்திற்கு மேல் 2% என்று இருக்கிறது. இதிலே என்ன விஷயம் என்றால், ஏறத்தாழ அந்த வகையிலே நாம் கணக்குப் பார்த்தால், ஸ்டார் Hotel-களில் மட்டும் 6 கோடி ரூபாய் வரை வரலாம். ஸ்டார் அல்லாத Hotel-களில் 6 கோடி ரூபாய் வரை வரக்கூடும். அரசுக்குக் கிடைக்கிற இந்த 12 கோடி அளவிற்குத் தங்களுக்கும் வணிக வரித் துறை அதிகாரிகள் வசூலித்துக் கொள்கிறார்கள் என்பதை நான் ஏதோ போகிற போக்கில், பொறுப்பற்ற நிலையில் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. கிடைக்கின்ற விவரங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, அரசின் கருவூலத்திற்கு வருகின்ற அளவுக்கு, கருவூலத்திற்குக் கொண்டு வருகின்ற பொறுப்பிலுள்ள அதிகாரிகள், தங்களுக்குத் தாங்களே வசூலித்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது. எனவே, இந்த விஷயத்தில் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று, வருமான வரித் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அரசுக்கு வசூலிப்பதற்குப் பதில் தங்களுடைய வசூலைப் பெற்றுக்கொள்கின்ற வாய்ப்பைத் தடுக்கின்ற உத்திகளைக் கையாள வேண்டும். இதிலே எப்படி அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது என்றால், நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, நல்ல முகூர்த்த நேரம், நல்ல திருமண நேரத்தில் Hotel-களில் போய்ப் பார்த்தால், அளவற்ற கூட்டம் இருக்கும். அந்த அளவற்ற கூட்ட நேரத்தில் போய் survey செய்வார்கள். காலையிலிருந்து மாலை வரை நடைபெற்ற

வியாபாரத்தைக் கணக்கிட்டு, இதுதான் 30 நாட்களுக்கும் நடைபெறுகிறது என்று சொல்லி, 'நான் இவ்வளவு ரூபாய் உனக்கு வரி போடவேண்டி இருக்கும். அரசுக்கு இவ்வளவு கட்டப் போகிறாயா அல்லது எங்களுக்கு இவ்வளவு கட்டிவிட்டு முடித்துக் கொள்கிறாயா' என்று நிர்பந்திக்கின்றபோது, 10 இலட்சம் ரூபாய் அரசுக்குக் கட்ட வேண்டியதைக் காட்டிலும், 2 இலட்சம் ரூபாயை அதிகாரிகளுக்குக் கட்டிவிட்டால், 8 இலட்சம் ரூபாய் இலாபம் என்று கணக்குப் போடுகின்ற நிலைமை Hotel துறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த Hotel துறையைப் பொறுத்தவரையிலும் நான் தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், இதுகுறித்த விவரங்களைக் கொடுத்து இருக்கிறேன். Flat rate-ஆக ஹோட்டல்களுக்கு வரி நிர்ணயித்துக் கொள்வதன் மூலம் அரசின் வருமானம் குறையாது. மேலும் அரசின் வருமானமும் அதிகப்படுத்தப்படும். அதே நேரத்தில், வணிகவரித் துறை அதிகாரிகள் Hotel அதிபர்களிடம் முறைகேடாகப் பணம் பெறுகின்ற வாய்ப்பும் மறுக்கப்படும். எனவே நாம் செய்ய வேண்டிய ஒன்று, flat rate முறையை வணிகவரித் துறைமூலம் அவர்களுக்கு நிர்ணயித்து— வேண்டுமானால் Hotel-களுக்கு B, C, D என்ற ஒரு நிலையைக்கூட மேற்கொள்ளலாம். இப்பொழுது அவர்கள் கும்பகோணத்தில், நாகப்பட்டினத்தில் எந்தெந்த Hotel-களில் எவ்வளவு லஞ்சம் வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்லி, முதல்வர் செல் வரை ரிப்போர்ட் கொடுத்ததன் நகல் என் கைவசம் இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கின்றபோது உண்மையிலேயே அதிர்ச்சியாக இருக்கிறது. ஆகவே மாநில அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டிய ஒன்று இந்த Hotel துறை. இதில் A, B, C, D என்று வகைப்படுத்தி, A ரகத்திற்கு இவ்வளவு, B ரகத்திற்கு இவ்வளவு என்று வருடத்திற்கு இவ்வளவு ரூபாய் என்று flat amount-ஐ fix செய்து, அதை வசூலித்தால், அவர்களிடம் முறைகேடாக வசூலிக்கின்ற வாய்ப்பு பறிக்கப்படும். இதை நம்முடைய மாநில அரசு கவனிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்னொரு விஷயம் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். Consignment sale. குறிப்பாக, பெரியார், கோவை மாவட்டங்களில் மட்டுமே இந்தப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் என்று திரு. ஆர். சொக்கர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, consignment sale வரி விலக்குக்குரிய ஒன்றுதான் என்று அரசே ஒப்புக் கொண்டுள்ளது. ஆனாலும் மீண்டும் இந்தப் பிரச்சினை வந்து கொண்டிருக்கிறது. நான் விரிவாகப் போக விரும்பவில்லை. இதிலே யாராவது ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை, வணிகவரிச் சட்டங்களில் expert-ஆக உள்ளவரைக் கொண்டு குழுவாகப் போட்டு இதிலுள்ள பிரச்சினைகள் என்ன என்பது பற்றி ஆய்வு செய்யச் சொல்லி, அறிக்கை பெற்றுகூட முடிவு எடுக்கலாம். எனவே இதுகுறித்து அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

அடுத்து வெளி மாநில விற்பனைக்கு 'C' Form பெறுவது என்பதும் பிரச்சினைக்குரிய ஒரு விஷயமாக இருந்து வருகிறது. திருப்பூரிலே பனியனுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டும்கூட, அரசுக்கு முறையிட்டு, அதனடிப்படையில் 31-3-1996 வரை நடந்த விற்பனைக்கு 'சி' பார்ம் கலெக்ட் செய்வதில்லை. ஆனால் பனியனுக்கு 5-3-1997 முதல் வரி விலக்கு அளிக்கப்பட்டது. அதிகாரிகள் 1-4-1996 முதல் 5-3-1997 வரை 'C' Form கேட்கிறார்கள். இதைப் பெறுவதில் பெரும் சிரமமிருக்கிறது. இந்த விஷயத்தையும் அரசு கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் வெண்ணெய் பற்றி. எனக்கு முன்னர் பேசிய சர்வோதய சங்க மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்டார்கள். வெண்ணெய்க்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. வெண்ணெய், விவசாயிகளிடமிருந்து வருகிற ஒரு விற்பனைப் பொருள்தான். வெண்ணெய் ஒரு அழுகுகிற பொருள். வெண்ணெய்க்கு வரி போட்டதே ஜெயலலிதா அவர்கள்தான். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். ஜெயலலிதா அவர்கள் இந்த மாநிலத்தில் இழைத்த பல்வேறு தவறுகளைத் திருத்தியமைத்துக்கொண்டு வருகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வெண்ணெய்க்கும் — ஜெயலலிதா அவர்கள்தான் 1991-ல் வரி போட்டார்கள், ஜெயலலிதா அவர்களால் இழைக்கப்பட்ட அந்த அநீதியை அகற்றி நீதி தர வேண்டுமென்ற முறையிலே — முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி நெய்யைப் பொறுத்தவரையிலும் பல்வேறு முறைகேடுகள் ஏற்படுவதற்கு வழியிருக்கிறது. பிராண்டு உள்ளது, பிராண்டு இல்லாதது என்றிருக்கிறது. பிராண்டுக்கு 10 சதவீதம், பிராண்டு இல்லாததற்கு 4 சதவீதம் என்னும்போது இதைத் தீர்மானிப்பதில்—4 சதவீதத்திற்கு உரிய பிராண்டு இல்லாததை அவர்கள் விற்றாலும்கூட 10 சதவீத வரிக்கு நிர்பந்தித்து இருப்பது, அந்த நிர்பந்தம் அரசுக்கு வருமானம் தேடித் தருவதற்காக அல்ல, அதிகாரிகளுக்கு வருமானம் பெற்றுத் தருவதற்காக இருக்கிறது. ஆகவே ஒரு Uniformity-யாக, ஒரே சீரான முறையில் வரியைப் போட்டுவிட்டால் அரசுக்கு வருமானம் பெருகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசுக்கு வருமானம் பெருகும் என்பதோடு அதிகாரிகளின் லஞ்ச வேட்டைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதையும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு விஷயத்தைப் பற்றி நான் குறிப்பிட விரும்புவது (மணியடிக்கப்பெற்றது) மொசைக். மொசைக் என்பது ஒரு குடிசைத் தொழில். அதற்கு 2 சதவீத வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் வரி விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் நியாயமானது என்பதோடு இராஜபாளையம். . . .

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டுமே?.

திரு. கே. சுப்பராயன்: நான் பேசி முடித்துவிடுகிறேன். என்னுடைய நேரம் போய்விடும்.

திரு. ஆர். சொக்கர்: Point of Order. நான் குறுக்கிடுவதற்குக் காரணம் அவைக்குத் தவறான தகவலை உறுப்பினர் தரக்கூடாது என்பதால்தான். Mosaic Tails-க்கு 20 சதவீத வரி விதிக்கப்படுகிறது. உறுப்பினர் 2 சதவீதம் என்று சொன்னார்கள். தற்போது 20 சதவீதம் விதிக்கப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் திரு. சொக்கர் இருப்பதே. இந்த மாதிரி விஷயங்களை முறைப்படுத்துவதற்காகத்தான் திரு. சொக்கர் இந்த அவையில் இருந்துகொண்டிருக்கிறார். ஆகவே அவர் சொன்ன மாதிரி

திருத்திக்கொள்ளலாம். Mosaicகிற்கு இருக்கிற 20 சதவீத வரியை முறைப்படுத்த வேண்டுமென்று நான் வேண்டுகோளாக வைக்கிறேன்.

இறுதியாக ஒரே ஒரு விஷயம். மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் மனுக்கள் என்பது முக்கியமானது. ஜனநாயகக் கட்டமைப்பிலே தங்கள் முறையீடுகளை, தங்கள் குறைகளை, தங்களுக்கு ஏற்படுகிற பிரச்சினைகளை முறையிடுகிற ஒரு கருவியாக, ஜனநாயகக் கட்டமைப்பிலே இருப்பது மனுக்கள்தான். இந்த மனுக்கள், காலத்தில் கவனிக்கப்படவில்லையென்றால்தான் சமூக வாழ்வில் தீவிரவாதம் கருக்கொள்கிற வாய்ப்பு இருந்துவிடுகிறது. எனவே தீவிரவாதத்தை போலீஸை வைத்தோ அல்லது Machinery-களை வைத்தோ ஒடுக்குவது பொருத்தமானதல்ல. தீவிரவாதத்தை ஒடுக்குகிற முதல் இடமே, மனுக்கள் கொடுக்கப்படுமானால், மனுக்கள் உரிய காலத்தில் பைசலாக்கப்படுமென்ற உத்திரவாதத்தை சிரமப்பட்டு உருவாக்குவதால், சமூக வாழ்வில் தீவிரவாதம் தோன்றாததோடு, ஜனநாயகக் கட்டமைப்பின்மீது மக்களுக்கு நம்பிக்கையும் ஏற்படும். அதுவும் மனு நீதி நாளைக் கொண்டுவந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்விஷயத்தில் அதிக அக்கறை எடுத்து மாவட்ட நிர்வாகத்தில்—குறிப்பிட்ட கால வரையறை கொடுக்கப் பட்டிருந்தாலும்கூட—மனுக்கள் மீது ஆக்கப்பூர்வமான முடிவு வருவதற்குரிய சில வழிவகைகளை, முறைகளைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டா வேண்டும், குடிக்கத் தண்ணீர் வேண்டும், வேறு பல அடிப்படைத் தேவைகள் வேண்டுமென்று, அடிப்படைத் தேவைகளுக்காக 50 ஆண்டுகால சுதந்திரத்திற்குப் பின்னரும்கூட, முறையிட்டும்கூட, அந்த முறையீடு கவனிக்கப்படாது விட்டுவிடுகிற ஒரு துயரம், தவிர்க்கப்படுவதற்குரிய வழிவகைகளை மாவட்ட நிர்வாகத்தில் காண வேண்டும். அமைச்சர்களிடத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கிற மனுக்களானாலும், மற்றவர்கள் கொடுக்கிற மனுக்களானாலும், வருகிற மனுக்களுக்கு உடனடியாகத் தீர்வு காண அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. ஏ. ராசேந்திரன், கண்டிப்பாக 5 நிமிடங்களுக்குள் பேசி முடிக்க வேண்டும்.

பிற்பகல் 12-05

திரு. ஏ. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்த மானியத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றி கூறி எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொது விற்பனை வரிச் சட்டம் இராஜாஜி அவர்களால் 1939-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் முதல் தேதி அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த பொது விற்பனை வரியை Sugar Coated Pills என்று சொல்லி, வருவாய் இழப்பை ஈடுகட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டமாகும். இந்தப் பொது விற்பனை வரியைப் பொறுத்த வரையில் எதை எதையெல்லாம் குறைக்க வேண்டுமென்று இங்கு பேசிய உறுப்பினர்களெல்லாம் சொன்னாலும், நீதிமன்றங்களில் பொது விற்பனை வரியின் மூலம் சில சங்கடங்கள் இருப்பதை வணிகர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக, நீதிமன்றங்களில் Limitation Act Section - V - என்ற ஒரு சட்டத்திலே ஒரு குறிப்பு இருக்கிறது. இப்போது அந்தப் பிரிவை எடுத்துவிட்டார்கள். அதனால், பல துன்பங்கள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. அதே சமயத்தில் மேல்முறையீடு செய்யும்போது, தடையாணை பிறப்பிப்பதற்கு மேல்முறையீட்டாளர்கள் வேண்டியும் நீதிமன்றங்கள் தர மறுக்கின்றன; சட்டத்தில் இடம் இல்லை என்ற காரணத்தால். அதற்கான சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்ணா அவர்கள் செல்லியதைப்போல, "Tap the rich; pat the poor"— என்று சொல்லிய வண்ணம், இந்தப் பொது விற்பனை வரியில் ஒருசில சங்கடங்கள் இருப்பதாக வியாபாரிகள் சொல்கிறார்கள். 1996-97-ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை செய்தால், கூடுதல் வரி கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், அது இப்போது 25 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், வசதி படைத்தவர்கள் கட்டலாம். அதிலும் ஒரு சில சங்கடங்கள் இருக்கின்றன என்று வியாபாரிகள் கூறுவது என்னவென்றால், 25 கோடி ரூபாய்க்கு மேல் ஒரு ரூபாய் சென்றால்கூட அந்த 25 கோடி ரூபாய்க்கும் அந்த ஒரு ரூபாய்க்கும் சேர்த்து கூடுதல் வரி கட்ட வேண்டுமென்று சொல்லி, சுமார் 37.5 இலட்சம் ரூபாய் வரி கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, 25 கோடி ரூபாய்க்கு மேல் எவ்வளவு வியாபாரம் செய்கின்றார்களோ அதற்கு மட்டும் வரி போட்டால் வியாபாரிகளுக்கு நன்மை செய்ததாக

இருக்கும். அதையும் இந்த அரசு நிச்சயமாகக் கனிவுடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது உலகமே கணினியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற காரணத்தினால், கணினி மின் பொருட்களுக்கு முழு விற்பனை வரி விலக்கு அளித்திருப்பதற்காக இந்த நாடே இந்த அரசையும், கலைஞர் அவர்களையும் போற்றிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், முன்பெல்லாம் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இருந்தன. சட்டமன்ற உறுப்பினர்களும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டு, தங்களுடைய பகுதியிலே இருக்கின்ற குறைகளையெல்லாம் சொன்னார்கள். ஆனால், இப்போது அம்மன்றங்கள் நீக்கப்பட்டுவிட்டன. அதன் காரணமாக, சட்டமன்ற உறுப்பினர்களும், ஊராட்சிப் பெருந்தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை அதிகாரிகளிடத்திலே சொல்வதற்கு திங்கட்கிழமை செல்ல வேண்டியிருக்கிறது. அன்றையதினம் அதிகாரிகள் இல்லையென்றால், அதையும் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. இதையும் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராம நிர்வாகச் சீர்திருத்தத்திற்காக சபாநாயகம் குழு அமைக்கப்பட்டது. அந்த குழு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வரும்போது எங்களுடைய குறைகளையெல்லாம் நாங்கள் சொன்னோம். அந்தக் குழுவின் பரிந்துரைகள் பரிசீலனையில் இருப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோன்று, கிராமங்களிலே இருக்கின்ற வி.ஏ.ஓ-க்கள்—கிராம நிர்வாக அலுவலர்கள்—எப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்பதை நாங்கள் தொகுதிக்குள் செல்லும்போது மக்கள் குறையாகச் சொல்கிறார்கள். இவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், மக்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மாவட்டங்களைப் பிரிக்கும்போது, வருவாய்க் கோட்டங்கள் மற்றும் வட்டங்களை அதிகமாக்க வேண்டும். குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்தைப் பிரிக்கும்போது, போளூரைப் பிரித்து சேத்துப்பட்டு வட்டம் என்றும், செங்கம் வட்டத்தைப் பிரித்து தண்டராம்பட்டு வட்டம் என்றும் பிரிக்கப்படும் என்றும் சொன்னார்கள்.

219093.

அதை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. அதையும் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வேங்கைக்கால் பகுதியிலே கட்டப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருந்தாலும், வேலைகள் இன்னும் தொடங்கப்படவில்லை. அதையும் விரைவில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

மாநில ஆட்சித் தலைவர் என்பது பற்றிய மானியத்திலே, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி விடைபெறலாம் என்று இருக்கிறேன். கருவறையிலிருந்து கல்லறை வரை சில்லரை இல்லாமல் ஆட்சி நடத்த முடியாது என்று போதித்தவர், நம்முடைய முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள். அதன் காரணமாகத்தான், சென்ற ஆட்சியில் அரசாங்கத்தினுடைய பணம் வாரி இறைக்கப்பட்டது. பிற்காலத்திலே சரித்திரம் எழுதுபவர்கள், கலைஞரைப் பற்றிச் சொல்லும்போது, வள்ளுவர் கோட்டம் கண்டவர் என்று சொல்வார்கள்; கட்டபொம்மனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பியவர் என்று சொல்வார்கள். ஆனால், ஜெயலலிதாவைப் பற்றிச் சொல்லும்போது,— எங்கள் பகுதிக்கு வேலூர் வழியாக செல்கின்ற போது அப்போது ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது, வேலூர் மாவட்ட எல்லையிலே, அவர் வேலூருக்குச் செல்வதற்காக அங்கு ஒரு கழிப்பறையைக் கட்டியிருக்கிறார்கள்; அது இன்னும் அங்கே நினைவுச் சின்னமாக அப்படியே இருக்கிறது; ஜெயலலிதாவைப் பற்றிச் சொல்லும்போது—அந்த நினைவுச் சின்னம் அவர் கட்டியதாக மக்களுக்கு நிச்சயமாகத் தெரியவரும். அப்படிப்பட்ட ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தித் தந்தவர் ஜெயலலிதா அவர்கள்.

இன்னும் இந்தத் துறையில், மாவட்ட நிர்வாகத்திலே பல்வேறு வாய்ப்புகள் ஏற்பட சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரியைப் பற்றிச் சொல்லும்போது, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே, சிறிய அளவிலே சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. பெரிய தொழிற்சாலைகளில் 13 சதவிகிதம் இப்போது வரி விதிப்பு இருக்கிறது. சிறிய தொழிற்சாலைகளிலும், அதே வரி விதிப்பைச் செய்வதால்,

அவையெல்லாம் இலாபத்திலே இயங்க முடியாத நிலையில், அவற்றை மூடுகின்ற நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு 4 சதவிகிதம் வரி விதித்து, அந்தத் தொழிலைக் காப்பாற்றுவதற்கு, தாயுள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கூறிக் கொண்டு, இந்த வாய்ப்பை நல்கியமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. சண்முகம். கணடிப்பாக 5 நிமிடங்களுக்குள் பேசி முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ராசேந்திரன் அவர்கள் சொல்கிறபோது, முந்தைய ஆட்சிக் காலத்திலே, முன்னாள் முதல்வர் அவர்கள், எங்கள் மாவட்டத்தினுடைய நுழைவாயிலில் ஒரு கழிப்பிடத்தை — நினைவுச்சின்னத்தை — எல்லாம் உருவாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். அது உண்மையிலேயே 'பக்கா பில்டிங்'. நான்கூட, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறுகிறபோதெல்லாம், அதை Out post police station-ஆக மாற்ற வேண்டும்; அவ்வளவு ரூபாய் செலவழித்து, அது சும்மா கிடப்பதைத் தயவுசெய்து, தவிர்க்க வேண்டும் என்றுகூடச் சொன்னேன். ஆகவே, அந்த நினைவுச் சின்னத்தை, Out post police station-ஆக மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்குத் தனிக் கேள்வி எழுப்ப வேண்டும். திரு. சி. சண்முகம்.

• **திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மணி 12 மணி 12 நிமிடம்; துணை சபாநாயகர் அதைப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிமிடத்தைப்பற்றி நான்தான் சொல்ல வேண்டும்; நீங்கள் 5 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திரு. சி. சண்முகம்: மன்னிக்கவும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்த மானியத்தின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, சுருக்கமாக நான் சார்ந்திருக்கும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்தில் சில நன்மைகள் பெற, சில கோரிக்கைகளை இங்கே வைக்க ஆசைப்படுகிறேன்.

சென்னை மாநகரத்தைப்போல ஒரு Commissionerate-ஆக காஞ்சிபுரம் ஆக வேண்டுமென்று ஏற்கெனவே 1989-லே வலியுறுத்தப்பட்டது. காரணம், சென்னைக்கு அருகாமையில் இந்த மாவட்டம் உள்ளதால், இந்த மாவட்டத்திலும் குற்றங்கள் பரவி, பொதுமக்கள் அவதிப்படுகிற காரணத்தினால், மேலும் அங்கே காவலர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும், அதை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, அதை Commissionerate -ஆக அமைத்தால் நன்றாக இருக்கும் என்று ஏற்கெனவே ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. ஆனால், அதற்கு ஒரு வரம்பு இருப்பதாகச் சொன்னார்கள். 10 இலட்சம் மக்கள் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இவ்வாறு உள்ள வரம்பைத் தளர்த்தி, திருநெல்வேலி மாவட்டத்தில் 5 இலட்சம் பேர் இருக்கிற அந்த இடத்தில் Commissionerate ஆக்கியிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் 7½ இலட்சம் பேர் இருக்கிற இடத்திலேயும் Commissionerate ஆக்கியிருக்கிறார்கள். அந்தவகையிலே, எங்கள் மாவட்டத்தைப் பற்றியும் விசாரித்துப் பார்க்கிறபோது, இதையும் ஒரு மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்று ஒரு குறிப்பு இருப்பதாகவும் நான் அறிந்தேன். ஆகவே, இப்போது நமது தமிழக முதல்வர் அவர்களுடைய காலத்திலே. சென்னைக்கு அருகாமையில் இருக்கிற ஆலந்தூர் நகராட்சி, பல்லவபுரம் நகராட்சி, தாம்பரம் நகராட்சி ஆகிய 3 நகராட்சிகளையும் உள்ளடக்கி இதை ஒரு மாநகராட்சியாக ஏற்படுத்தித் தந்தால் இங்கிருக்கின்ற பிரச்சினைகள் யாவும் தீர்வதற்கும், பல்வேறு அடிப்படை வசதிகள் பெறுவதற்கும், மற்றபடி காவல் துறை பலப்படுவதற்கும், 'கமிஷனரேட்' ஆவதற்கும் வசதி இருக்குமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குரோம்பேட்டை மருத்துவமனை: நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வது. இங்கே சென்னையிலே உள்ள பொது மருத்துவமனை—ஜி.எச்.—போல, குரோம்பேட்டையில் ஒரு பொது மருத்துவமனை இருக்கிறது: பெயருக்கு அது ஒரு பொது மருத்துவமனையாக இருக்கிறது. அந்தப் பொது மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டிருப்பதால் விபத்துக்களில் சிக்கிக்கொள்பவர்கள் நிறைய பேர் அந்த மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு வருகிறார்கள். விபத்துக்களில் சிக்கிக்கொள்பவர்கள் அதிகமாக அங்கு சிகிச்சைக்கு வருகிற காரணத்தினால் சென்னையில் இருக்கின்ற பொது மருத்துவமனையைப் போல அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, மருந்துகள் வழங்கி அந்த மருத்துவமனையில் இருக்கும் மார்ச்சுவரி அதாவது பிணக்கிடங்கிற்கு குளிர்சாதன வசதி செய்து தருவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

குறிப்பாக, பலமுறை இந்த மன்றத்திலே நான் எடுத்துச் சொன்னதைப்போல, இந்த மாவட்டத்திலே பெங்களூர் நெடுஞ்சாலை திருச்சி-மதுரை நெடுஞ்சாலை, கல்கத்தா நெடுஞ்சாலை ஆகிய மூன்று பெருநகர நெடுஞ்சாலைகளும் நேரு சிலை அருகில் கத்திப்பாரா சந்திப்பில் இணைவதன் காரணமாக வெளியூர்களிலிருந்து பல்வேறு பேருந்துகள் அங்கு வந்து செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே அங்கிருந்து பல ஊர்களுக்குப் பேருந்துகள் செல்வதற்கு வசதியாக அங்கு ஒரு பேருந்து நிலையத்தை அமைத்துத் தருமாறு தமிழக முதல்வர் அவர்களை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் அந்த இடத்தில் 40, 50 ஏக்கர் நிலம்கூட ஆர்ஜிதம் செய்வதற்கு வசதியாக இருக்கிறது. எனவே புதுவையில் இருக்கின்ற பேருந்து நிலையத்தினைப் போல அங்கு ஒரு பேருந்து நிலையத்தினை அரசு அமைத்துக்கொடுத்தால் சென்னை மாநகரத்தில் நெரிசலைக் குறைப்பதற்கும், சென்னை மாநகரத்தை நாம் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கும், பொலூஷனைக் கட்டுப்படுத்துவதற்கும் வசதியாக இருக்கும். (மணியடிக்கப்பெற்றது)

மேலும் குரோம்பேட்டையில் எம்.ஐ.டி. கேட் அருகில் சுரங்கப் பாதை அமைப்பது குறித்து அரசின் குறிப்பில் உள்ளது. அதை இந்த

ஆண்டே எடுத்துக் கொண்டு முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் தொழிற்பேட்டை என்பது மிகவும் இன்றியமையாத தேவை என்பதால் தாம்பரத்திலிருந்து செங்கற்பட்டு செல்லும் பகுதியில் ஒரு சிறு தொழிற்பேட்டையை அமைத்துத் தருமாறு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல மாவட்ட ஆட்சித் தலைவர் குறை தீர்க்கும் நாளில் சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கெடுக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும். அப்போதுதான் அந்தத் தொகுதி மக்களின் குறைகளை நிவர்த்தி செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் உறுதுணையாக இருப்பதற்கு அது வாய்ப்பாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு என்று தனி வட்டாட்சியர் நியமிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிறையப் பேசமுடியவில்லை என்பதால் கடைசியாக ஒரே ஒரு விண்ணப்பத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். என்னுடைய மாவட்டத்தில் என் வீட்டிற்கு அருகில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அங்கு பி.சி.ஆர். யூனிட் என்று ஒரு பிரிவு இருக்கிறது. அங்கே, சட்டத்தைத் தவறுதலாகப் பயன்படுத்துவதாகவும், சொந்த விருப்பு, வெறுப்பு காரணமாக நிலத்தகராறு, கொடுக்கல் வாங்கல் தகராறுகளுக்கெல்லாம் சாதிப் பெயரைச் சொன்னார்கள் என்று பொய்யான வழக்கைத் தொடுத்து உயர்ந்த நிலையில் இருப்பவர்களை எல்லாம் 15 நாட்கள் ரிமாண்டில் வைக்கின்ற நிலை இருப்பதாகவும் என்னிடம் சிலர் முறையிடுகின்றனர். அதைப் போக்குகின்ற வகையில் தலைவர் அவர்கள் அதிலே தலையிட்டு குறைந்தபட்சம் அந்த விசாரணை முடிந்து உண்மை நிலை தெரிந்த பிறகு அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்பது என்னுடைய நோக்கம். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிகவரித் துறை, மாவட்ட நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது பேச அனுமதி வழங்கிய தங்களுக்கு நன்றியைத்

தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வணிகவரித் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல பொருட்களுக்கு வரி விகிதங்களை மாற்றியமைத்திருக்கிறார்கள். அதிலே மேலும் ஒருசில பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று முதற்கண் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதாவது தேங்காய் மற்றும் கொப்பரைக்கு 1 சதவீதமாக இருக்கிற வரியை முழுவதுமாகக் குறைக்க வேண்டும்.

பிற்பகல் 12-20

அடுத்து விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படும் யூரியாவிற்கு இரண்டு சதவிகித வரி இருக்கிறது. அதையும் முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலக்கரித் தூள் கலந்த சாண வரட்டிக்கு 11 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டிருக்கிறது. தாய்மார்களின் நலனைக் கருதி அந்த வரியை முழுமையாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் தெளிப்பு முறை சொட்டு நீர்ப்பாசன சாதனங்களுக்கான வரி 11 சதவீதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதையும் முழுமையாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீங்கள் கால்நடைத் தீவனம், சாம்பிராணி போன்றவற்றுக்கெல்லாம் முழுமையாக வரிவிலக்கு அளிக்கப்படும் என்று சென்ற பட்ஜெட் கூட்டத்திலே கூறியிருக்கிறீர்கள். எங்களுடைய சேலம் மாவட்டத்தில் கால்நடைத் தீவனம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. திப்பி மற்றும் கப்பி போன்றவற்றைப் பயன்படுத்தி கால்நடைத் தீவனங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு விதிக்கப்பட்டிருந்த 4 சதவிகித வரி முழுமையாக நீக்கப்படவில்லை. அந்த வரியை நீக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் பலவிதமான காரணங்களைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். கால்நடைத் தீவனம் செய்யக்கூடிய, அதற்குத் தேவையான பொட்டு, அரிசி, தவிடு போன்றவற்றுக்குத்தான் . . .

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Cattle Feed -க்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரி விலக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆனால் வியாபாரம் பார்க்கக்கூடிய இடங்களில் எப்படி என்றால் Compound Cattle Feed என்றுதான் சொல்லுவார்கள்,

அதிகாரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், மாட்டுத் தீவனத்திற்குதான் வரி விலக்கு என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் இது Compound Cattle Feed. இதற்கு வரி உண்டு என்று சொல்லுகிறார்கள். இது வழக்கத்திலே உள்ள முறை. இதை இன்றே நீங்கள் அறிவிக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. இதிலே ஒரு குழப்பம் இருக்கிறது. துறை அதிகாரிகளிடமும், வணிகர்களிடமும் இது குறித்துக் கேட்டு இந்தக் குழப்பத்தை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தான் உறுப்பினர் Cattle Feed-க்கு வரி விலக்கு என்று இருக்கிறது. ஆனால் வரி போடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இதிலே அதிகாரிகள் மட்டத்திலே, வணிகர்கள் மட்டத்திலே ஒரு பெரிய குழப்பம் இருக்கிறது. என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால், Cattle Feed-க்கு வரி விலக்கு என்றால் Compound Cattle Feed-க்கு சேர்த்துதான் கொடுக்கப்படுவதாக அர்த்தம். அறிவிக்கப்பட்டதற்கு அதுதான் அர்த்தம். ஆனால் அதற்கு விளக்கம் கொடுக்கும்போது இஷ்டத்திற்கு விளக்கம் கொடுக்கிறார்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்களுக்கு நன்றி, அடுத்ததாக, பெயிண்ட் கம்பெனிகளைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக என்னிடத்தில் ஒரு மகஜர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய அளவில் உற்பத்தி செய்யக்கூடிய பெயிண்ட் கம்பெனிகளுக்கும், சிறிய அளவில் உற்பத்தி செய்யக்கூடிய பெயிண்ட் கம்பெனிகளுக்கும் 16 சதவிகித வரி என்று இருக்கிறது. அதை மாற்றி அமைக்க வேண்டும். அப்போதுதான் சிறிய அளவில் உற்பத்தி செய்கின்ற பெயிண்ட் கம்பெனிகள் பெரிய அளவில் தொழில் செய்கின்றவர்களோடு போட்டி போட முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த வரியை நீங்கள் மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற சேகோசர்வ் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அது குறித்து முதலமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே சம்பந்தப்பட்டவர்கள் பேசி இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு மகஜரையும் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். சேகோசர்வைப் பொறுத்தவரையில், ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி, கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் அளவுக்கு வியாபாரம் செய்யப்படுகிறது. அதில் 25

கோடி ரூபாய்க்கு மேல் 50 கோடி ரூபாய் வரையில் அடிஷனல் Tax 1.5 விழுக்காடு என்றும் 50 கோடிக்கு மேல் 100 கோடி வரை 2.00 விழுக்காடு என்றும், 100 கோடிக்கு மேல் 300 கோடி வரை 2.5 விழுக்காடு என்றும் போடப்படுகின்ற காரணத்தால்—சேகோசர்வ் ஒரு வியாபார ஸ்தாபனம் அல்ல. அது ஒரு சேவை ஸ்தாபனம்தான், சேகோசர்வ் ஆரம்பிப்பதற்கு முன்பாக தமிழ்நாடு அரசுக்கு இதன் மூலம் கிடைத்த வருமானம் சில லட்சங்கள்தான்—கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் அளவுக்கு அரசுக்கு வருமானம் வருகிறது. அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி போன்றவை அனைத்தும் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டு அந்த சேவை கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பப்படுகிறது. இந்த சேகோசர்வுக்காக அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் மானியம் கொடுத்துக்கொண்டிருக்கிறதே ஒழிய இந்த அடிஷனல் Additional tax எடுக்கவில்லை. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், விவசாயிகள் கிழங்கை உற்பத்தி செய்து, ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசியை இங்கே அனுப்புகிறார்கள், அதனால் Additional tax அகற்ற வேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்காக சில விளக்கங்களை அரசாங்கம் கேட்டிருக்கிறது. 5 கோடி ரூபாய் அளவுக்குக் குறைத்து நாம் அதை எப்படி அரசுக்கு ஈடுகட்ட முடியும் என்று சம்பந்தப்பட்ட துறை கேட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, அதிகாரிகளை அழைத்துப் பேசி, Additional Tax மூலமாக எவ்வளவு வருவாய் வருகிறது, அந்த வருவாய் எவ்வளவு தவிர்க்கப்பட வேண்டும் என்பது குறித்து நேரடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசாரிப்பார்களானால் உண்மை நிலை புலப்படும் என்பதைத் தெரிவித்து, இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

அடுத்தபடியாக, மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட நிர்வாகம் இன்றைக்கு எப்படிச் செயல்படுகிறது என்று கூறினால், ஆளுங்கட்சியினர், ஆளுங்கட்சியினருடைய மாவட்ட அமைச்சர்கள், இவர்கள் என்ன சொல்கிறார்களோ அதைக் கேட்டுத்தான் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடந்துகொள்கிறார்கள் என்று தெள்ளத்தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு கடந்த 1-ந் தேதி சேலத்திற்கு மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. தம்பிதுரை அவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் மே தின பொதுக்

கூட்டத்திலே பேசுவதற்காக அங்கே வந்திருந்தார்கள். அவர்கள் டெல்லியிலிருந்து வருகிறார்கள் என்று முன்கூட்டியே தெரிந்ததற்குப் பிறகும் அவர்கள் அங்கே வந்து தங்குவதற்கு அறை ஒதுக்கப்படவில்லை. அங்கே இரண்டு அறைகள் இருக்கின்றன. ஒன்று இன்ஸ்பெக்ஷன் பங்களாவில் இருக்கின்றது. இரண்டாவது சர்கியூட் ஹவுஸில் இருக்கின்றது. இவை இரண்டும் ஒரே வளாகத்தில் இருக்கின்றன. அப்படி ஒரே வளாகத்தில் இருந்தும் அவர் அங்கே தங்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஏனென்று கேட்டால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அங்கே இருக்கிறார் என்று பதில் கூறியிருக்கிறார்கள். Protocol-ன்படி எங்களுக்கு ஒதுக்குங்கள் என்று கேட்டும்கூட முடியாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு கிட்டத்தட்ட 20 கி.மீ. தூரத்தில் இருக்கின்ற ஸ்டீல் பிளாண்ட்க்குச் சொந்தமான அந்த இடத்திலே தங்குங்கள் என்று கூறியிருக்கிறார்கள். பாதுகாப்பு நிலையைக் கருதி அங்கு செல்ல முடியாது என்றும் இங்கு இரண்டு இடங்களில் ஒரு இடத்தை மாற்றிக் கொடுங்கள் என்று கேட்டதற்குப் பிறகும் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை. இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால் நமக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம். உங்களுடைய கட்சிக்கும், எங்களுடைய கட்சிக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், ஒரு மாநில அரசானது. மத்திய அமைச்சர் வருகிறார் என்றால் அவருக்கு இடம் கொடுக்காமல் செய்வது எந்தவிதத்திலே நியாயம்? மத்திய அமைச்சர்கள் இங்கே வரும்போது சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது, 356-ஐப் பயன்படுத்தி இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று கூறிக்கொண்டிருக்கிறார்கள், ஆகவே, அவரை அவமானப்படுத்த வேண்டும் என்றும். அதேபோலத்தான் 1989-ஆம் ஆண்டு அவர் துணை சபாநாயகராக இருந்தபோதும் இதே போன்ற நிகழ்ச்சிகள்தான் நடந்திருக்கின்றன என்றும் கூறிக்கொள்கிறேன். வேண்டுமென்று, திட்டமிட்டு அவர் வரும்போது ஒரு மத்திய அமைச்சரை அவமானப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்த அரசு செயல்படுகிறதேயொழிய வேறில்லை. அந்த மத்திய அமைச்சர் இங்கும் வரும்போது, அவர் பொது மக்களிடம் மனுக்களைப் பெறுவார்கள், சில பிரச்சினைகளையெல்லாம் கேட்டறிவார், ஆகவே, இதில் அரசியல் உள்நோக்கம் இருக்கிறது என்பதை வன்மையாக நான்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவோ மக்களுடைய பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன, வரி பற்றி எல்லாம் இருக்கின்றன. அதை எல்லாம் சொல்லாமல் அறை கிடைக்கவில்லை என்பதற்காக இப்படி வாதிட்டுக்கொண்டு இருக்கின்றார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது அவருடைய உரிமை, அவர் பேசட்டும்.

திரு. பி. ஆர். சுந்தரம்: இது என்னுடைய சேலம் மாவட்டப் பிரச்சினை, இங்கு மத்திய அமைச்சரைப் பற்றி சொல்வதிலே என்ன தவறு இருக்கின்றது? ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் இது போன்ற நிகழ்ச்சிகள் நடக்கக்கூடாது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் உங்களுடைய கையிலே இருக்கின்ற காரணத்தினாலே—ஏனென்றால் இப்படி ஒவ்வொன்றாக, தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு குறைந்துவிட்டது, தினமும் ஒரு குண்டு வெடித்துக் கொண்டிருக்கின்றது, சென்னையிலே ஒரு குண்டு வெடிக்கிறது, அதற்கு முன்பு திருநெல்வேலியிலே குண்டு வெடித்துக் கொண்டு இருக்கின்றது, இதையெல்லாம் பார்ப்பதைவிட்டுவிட்டு, ஒரு அமைச்சர் அவர்களுக்கு அங்கே அறை ஒதுக்கக்கூடாது, வேறு இடத்திற்கு போங்கள் என்று சொல்வது எந்த விதத்திலே நியாயம் என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். அதேபோல சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் (மணியடிக்கப்பெற்றது) இரண்டாகப் பிரித்திருக்கின்ற காரணத்தினால்...(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'திமிர்' என்று உட்கார்ந்து கொண்டே அமைச்சர் சொல்கிறார். அதற்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும்...

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'திமிர்' என்று அவர் எப்படிச் சொல்லலாம்? அதை அவர் வாபஸ் வாங்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் அப்படிச் சொல்லவில்லை. நான் அவரை அனுமதிக்கவேயில்லை. அமைச்சர் அவர்கள் ஒலிவாங்கி முன்நின்று பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திமிர் என்று . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் முதலில். அவர் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் பேசட்டும், நீங்கள் உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் பேசவில்லை, சுந்தரம்-திமிர், என்று சொல்லவில்லை. தாமரைக்கனி-திமிர் என்று நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை. நான் ஏதோ பேசிக்கொண்டிருந்தேன்.

திரு. பி. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: நான் சொல்வதைக் கேட்டுவிட்டு நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற போது ஒரு மாவட்ட அமைச்சர் மாவட்ட அமைச்சர் என்று சொன்னார். பேரைச் சொல்லவில்லை.

எப்படி அந்த விஷயத்தில் தலையிட்டோம். கலெக்டரை தொடர்புகொண்டு அறை கொடுக்கக்கூடாது என்று சொல்லப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்திட வேண்டும். சும்மா, பொத்தாம் பொதுவாகக் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டே போனால் அதை நாங்கள் கேட்டுக் கொண்டே இருக்கவேண்டுமா?

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம், இன்னும் ஒரு நிமிடத்திற்குள் உங்களது உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் பதவியில் இருக்கும் அவருக்கு அறை

ஒதுக்கப்படாததற்குப் பிறகு, அந்த மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்களுக்கு அங்கே 1-ஆம் தேதி அந்த அறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் தங்கக்கூடாது என்று சொன்னதற்குப் பிறகு, அவர் தனியாகச் சென்று . . .

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 29-ஆம் தேதி புறப்பட்டு 30-ஆம் தேதியன்று சேலம் போனேன். நான் என்னுடைய வீட்டில்தான் தங்கியிருந்தேன். ஐபியிலோ, சுற்றுலா மாளிகையிலோ நான் தங்கவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அறை ஒதுக்குவது விஷயமாக முதலமைச்சர் சொல்ல இருக்கிற தகவலுக்குள்ளே நான் போகவில்லை. நான் ஒன்றும் அங்கே தங்கவில்லை. அவருக்கு நான் அறை ஒதுக்கக்கூடாது என்றும் சொல்லவில்லை. தேவையில்லாத பிரச்சினை. வீண் பழி சுமத்தக்கூடாது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிடபிள்யூடி இன்ஸ்பெக்ஷன் பங்களாவிலே சாவி இருப்பதே கிடையாது. கலெக்டர் கன்ட்ரோலிலே இருப்பதே கிடையாது. மினிஸ்டரே சாவியை வாங்கி வைத்துக் கொள்கிறார். யாருக்குமே ரூம் கொடுப்பது கிடையாது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரத்தை என்னுடைய உரையிலே தெரிவிக்கலாம் என்று இருந்தேன். இப்போது விவாதமாக ஆகிவிட்ட காரணத்தால் அதைப்பற்றி இடையிலேயே சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினை குறித்து பத்திரிகைகளிலே செய்தி வெளிவந்து, ஜெயலலிதா அவர்கள், ஏதோ மத்திய அ.தி.மு.க. அமைச்சர் ஒருவரை, தி.மு.க. அரசு அவமானப்படுத்திவிட்டது என்று பத்திரிகைகளில் அறிக்கைகள் விடுத்த உடனேயே, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உடனடியாக அதைப்பற்றிய குறிப்பு அனுப்ப வேண்டும் என்று ஆணையிடப்பட்டு, நேற்று அந்தக் குறிப்புகள் வந்து சேர்ந்திருக்கின்றன.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 4

அந்தக் குறிப்பின்படி 1-5-1998 அன்று மாலை 6.40 மணி அளவில் 'வெஸ்ட்கோஸ்ட்' இரயில் மூலம் சேலம் வந்தடைந்த மத்திய சட்டத் துறை அமைச்சரை, வருவாய்த் துறை அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் வரவேற்று, அவருக்கு சேலம் உருக்காலை விருந்தினர் விடுதியிலே தங்குமிட வசதி செய்து தரப்பட்டுள்ளதையும், அரசு சுற்றுலா மாளிகையில் தேவைப்படின் இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்கள். அதன்பின், சேலம் உருக்காலை விருந்தினர் விடுதியை நோக்கிச் சென்ற மத்திய அமைச்சர், நடுவழியில் திரும்பி 'ஓட்டல் துவாரகா' என்ற தனியார் தங்கும் விடுதியிலே தங்கிவிட்டார். உடனடியாக அவரைச் சந்தித்த சேலம் வட்டாட்சியர், அவருக்கு சேல்ம் சுற்றுலா மாளிகையில் இடவசதி உள்ளதை எடுத்துக்கூறி, அங்கு வந்து தங்குமாறு அழைத்தும், அந்தக் கோரிக்கையை, அமைச்சர் செவிமடுக்கவில்லை. பின்னர், 1-5-1998 அன்று இரவு 7½ மணி அளவில் 'ஓட்டல் துவாரகா' வில் மத்திய அமைச்சரை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சந்தித்து 10 நிமிடங்கள் உரையாடியிருக்கிறார். அப்போது மாவட்ட ஆட்சியரிடம் மத்திய அமைச்சர் தனது தங்குமிட வசதி குறித்தோ அல்லது போக்குவரத்து வசதி குறித்தோ எந்தவிதமான குறைகளையும் கூறவில்லை.

அன்று, அதாவது 1-5-1998 இரவு, சேலம் பட்டக்கோவில் என்ற இடத்தில், மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய மைய சட்டத் துறை அமைச்சர், தனக்கு மாவட்ட நிர்வாகம் தங்குமிட வசதி செய்து தரவில்லை என்றும், தனது மார்ச் மாத வருகையின்போது போக்குவரத்துக்கு தனியார் சிருந்து வசதி செய்து தரப்பட்டது என்றும் குறை கூறியுள்ளார். சேலம் சுற்றுலா மாளிகை, சேலம் உருக்காலை விருந்தினர் விடுதி, இவற்றிற்கும், சேலம் இரயில் வண்டி நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோமீட்டர் மட்டுமே. சேலம் உருக்காலை விடுதியிலே மிக முக்கிய விருந்தினர்கள் தங்கும் அளவில் நன்கு வசதிகள் உள்ள அறைகள் உண்டு. அங்கு முன்னாள் மத்திய அமைச்சர்கள், மற்றும் ஆளுநர் ஆகியோர் தங்கிச் சென்றுள்ளார்கள். இவ்வளவு சிறப்பான வசதிகள் செய்து தரப்பட்டிருந்தும், தனக்கு சரியான தங்குமிட வசதியோ அல்லது சிருந்து, அதாவது கார் வசதியோ செய்து தரப்படவில்லை என்று மத்திய அமைச்சர் கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியாகும்.

1998 மே 4] [கலைஞர் மு. கருணாநிதி]

அதுமாத்திரமல்ல, சேலத்திலே அவர் குறிப்பிடுகிற விருந்தினர் விடுதியில் ஏற்கெனவே உள்ள இந்தப் பழைய கட்டடத்தைவிட சிறப்பான கட்டடங்கள் இரண்டு அறைகள் கொண்ட கட்டடங்கள் இருக்கின்றன.

அதிலே மத்திய அமைச்சர்கள் எல்லாம் வந்து தங்கியிருக்கிறார்கள். அங்கே இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று அவருக்குக் கூறப்பட்டிருக்கிறது. இருந்தும்கூட நான் அங்கே செல்லவில்லை என்று கூறிவிட்டு, அவர் அங்கேயிருந்து புறப்பட்டுச் சென்றிருக்கின்றார். செல்லும் வழியிலே திரும்ப வந்து, துவாரகா ஓட்டலில் அவர் அறை எடுத்து அங்கே தங்கிவிட்டார். அவருக்காக அந்த இடம் ஏற்பாடு செய்யப்படாவிட்டாலும் அதற்கு மாற்று இடமாக ஏற்பாடு செய்யப்பட்ட இரும்பு ஆலைக்கு அருகிலுள்ள அந்த விருந்தினர் மாளிகை மிகவும் சிறப்புடையது. அதிலே ஆளுநர் அவர்கள் - கவர்னர் அவர்கள் - தங்கியிருக்கின்றார்கள்; ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் அங்கே தங்கி இருக்கின்றார்கள்; மத்திய அமைச்சர்கள் திரு டி.ஆர். பாலு போன்றவர்கள், திரு.டி.ஜி. வெங்கட்ராமன் போன்றவர்கள், என்.வி.என்.சோமு போன்றவர்கள் எல்லாம் அங்கே தங்கியிருக்கிறார்கள். எனவே ஏதோ புறக்கணிக்கப்பட்டவர், தங்க இடமில்லை என்ற அளவில் இந்த காரியம் அங்கே நடைபெறவில்லை.

பிற்பகல் 12-35

அங்கே போய் மே தினத்திலே அவர்கள் பேசும்போது ஏதோ அரசியல் எல்லாம் பேசியிருக்கிறார்கள். என்னென்ன அரசியல் பேசினார்கள் என்பதெல்லாம் தெரியும். இங்கே மாவட்ட நிருவாகத்திலுள்ள குறையை மாத்திரம் சொல்லுகிற நண்பர் - அவர் ஒரு மத்திய அமைச்சர்,-ஒரு மாநிலத்திற்கு வரும்போது என்னென்ன பேசுவது என்கின்ற அந்த அளவுகோலையும் தெரிந்திருக்க வேண்டும். அவர் சொல்லியிருக்கிறார். திரு. ப. சிதம்பரம் ஏற்கெனவே 2000 கோடி ரூபாய், ரிலையன்சுக்கு தவறான முறையிலே அள்ளிக்கொடுத்து விட்டார் என்றும், அதிலே முதலமைச்சர் அவர்களுக்கும் கொடுத்துவிட்டார் என்றெல்லாம் சொல்லி இருக்கின்றார். இவைகள் எல்லாம் தேவைதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எவ்வளவு அவதூறானவை; எவ்வளவு உண்மைக்கு மாறானவை என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தெரியும், நமக்கும் பேசத் தெரியும்.

எத்தனை பொறியியல் கல்லூரிகள் அந்த அமைச்சருடைய பெயரில், தமிழ்நாட்டில் இருக்கின்றன என்பதும், அங்கெல்லாம் என்னென்ன மோசடிகள் நடைபெற்றன என்பதும் எங்களுக்கும் தெரியும். நான் லாவணி பாட விரும்பவில்லை என்பதை மாத்திரம் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம், இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் கூறியதை அப்படியே நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. ஒரு Circuit House, ஒரு Inspection Bangalow என்று இரண்டு இருக்கும்போது, அவர்களுக்கு எதற்காக அங்கே அறை ஒதுக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு இடத்திலும் போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. Circuit House-ல் அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவர்தான் அங்கே செல்லவில்லை. அவர் இங்கும் தங்கவில்லை; அங்கும் தங்கவில்லை; அவர் வசதிக்காக துவாரகா ஓட்டலில் தங்கிவிட்டார்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கு தயவுசெய்து சொல்கிறேன். அங்கே அவர்களுக்கு இரண்டு அறைகள் கண்டிப்பாக ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கப்படாத காரணத்தால்தான், அவர்கள் கூறிய காரணம், அங்கு வேறு அமைச்சர் இருக்கின்றார், அறை இல்லை என்று கூறிய பிறகுதான் அவர்கள் துவாரகா ஓட்டலுக்குச் சென்று இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தால், அவர்கள் எதற்காகச் செல்ல வேண்டும்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல

இரும்பு ஆலைக்கு அருகில் உள்ள அந்த விடுதி சேலத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரம் (குறுக்கீடு) 20 கிலோ மீட்டர் தூரம் என்று சொன்னீர்களே, அது உண்மையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 8 கிலோ மீட்டர்.

திரு. பி. ஆர். சுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 16 கிலோ மீட்டர். உண்மை நிலை இதுதான். வேறு அமைச்சர் அங்கே இருக்கிறார், ஆகவே உங்களுக்கு இடமில்லை என்று...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு இடங்களிலும் அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் அங்கே தங்கியிருக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். இதற்குமேல் இந்த விவாதத்தை நீடித்துக்கொண்டு போவது சரியாக இருக்காது. திரு. பி. ஆர். சுந்தரம், இத்துடன் உங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள். அடுத்து திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது உரையாற்ற...

திரு. பி. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறைகள் பூட்டியே கிடந்தன. . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ. பி. பூட்டியே கிடந்தது என்கிறார். இவையெல்லாம் கடந்த கால ஆட்சியிலே, மந்திரிகள் கடந்த கால ஆட்சியில், அறைகளைப் பூட்டிக்கொண்டு வீட்டுக்கே போய்விடுவார்கள். நாங்கள் போய் தவியாய் தவித்திருக்கிறோம். இவையெல்லாம் அந்தக்காலம். இப்போது பூட்டிக்கொண்டு யாரும் போகமுடியாது, அப்படி எந்த அமைச்சர்களையும் நான் வளர்த்துவிட மாட்டேன், அதைக் கண்டிக்காமல் இருக்கவும் மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி. ஆர். சுந்தரம், நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு போதிய விளக்கங்கள் கொடுத்தாகிவிட்டன. உட்காருங்கள். திரு. நிஜாமுதீன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

பிற்பகல் 12-40

திரு. ஜி. நிஜாமுதீன்: இந்த அரசு இந்தத் துறையை சீர்திருத்தி மேன்மைப்படுத்தினால் இந்த நாட்டிற்கு வருவாய் கிடைக்கும் என்ற முடிவு எடுத்து, அதுவும் வரியைக் குறைத்து வருவாயைப் பெருக்கக்கூடிய ஒரு நல்ல நிலையிலே இருக்கக்கூடிய துறையிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி, அதை வரவேற்று, இதை மேலும் ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒருசில கருத்துக்களை எடுத்துவைக்க முன் வருகின்றேன்.

மத்திய அரசாங்கம் 53 மாவட்டங்களிலே தொழில் தொடங்குவதற்கு முழு வருமான வரி விலக்கு அளித்து அறிக்கை ஒன்றை அனுப்பி இருக்கின்றது. அந்த 53 மாவட்டங்கள் 9 மாநிலங்களில் மட்டுமே அடங்கி இருக்கின்றன. குஜராத், பீகார், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், கேரளா, மேற்குவங்கம், ஒரிசா, ராஜஸ்தான் ஆகிய 9 மாநிலங்களிலே உள்ள 53 மாவட்டங்களில் மட்டும் தொழில் தொடங்குவதற்கு முழு வருமான வரி விலக்கு அளித்து இருக்கின்றது. இதில் கேரளாவில் ஒரு மாவட்டம் மட்டுமே சேர்க்கப்பட்டு இருக்கின்றது. தென்னிந்தியாவிலே மற்ற எந்த மாவட்டத்திலும் அது இல்லை. குறிப்பாக தமிழ்நாட்டிலே தொழில் துறையிலே எத்தனையோ பின்தங்கிய மாவட்டங்கள் இருந்தும்கூட, அந்த மாவட்டங்கள் புதிதாகத் தொழில் தொடங்குவதற்கு முழுமையான வருமான வரி விலக்கு அளிக்கப்படுகின்ற அந்தப் பட்டியலிலே இடம் பெறவில்லை. இதில் ஏன் தமிழகம் புறக்கணிக்கப்பட்டது என்பதற்கான காரணம் புரியவில்லை. இதிலே நமது அரசு முழுக் கவனத்தைச் செலுத்தி தமிழகத்திலே உள்ள பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் தொடங்குவதற்கும் முழு வருமான வரி விலக்கு பெற்றுத் தரவும் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டு ஓடுகள், செங்கற்கள், சுட்ட களிமண்—எந்தப் பொருளும் இயந்திரத்தாலோ அல்லது கையாலோ செய்தாலும் அதற்கு 4 சதவீத வரி வசூல் செய்ய வேண்டும் என்று வணிக வரி ஆணையர் அவர்கள்

உத்திரவிட்டு இருக்கின்றார்கள். அதற்கு மாறாக துணை வணிக வரி அலுவலர் அவர்கள், அதற்கு 8 சதவீதம் வரி கட்ட வேண்டுமென்று ஓர் அறிக்கை அனுப்பி இருக்கின்றார். ஆணையர் கொடுத்த உத்தரவுக்கும், துணை ஆணையர் (வணிக வரி) அறிவித்த அறிவிப்புக்கும் மிகவும் நேர்மாறான முரண்பாடு காணப்படுகின்றது; கிட்டத்தட்ட 100 சதவீத உயர்வு காணப்படுகின்றது. 4 சதவீதம், 8 சதவீதம் என்ற வித்தியாசம் ஏன் என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே அது குறித்தும் தாங்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, பெரும்பாலும் குடிசைத் தொழிலாக வாழ்க்கையில் அடிமட்டத்து மக்கள் செய்யும் தொழிலாக இருப்பதனால், அதற்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகை பக்கத்தில் உள்ள காரைக்கால் பாண்டிச்சேரியைச் சேர்ந்தது. அங்கு தொழில் தொடங்குபவர்களுக்கு 5 வருடங்களுக்கு வணிக வரி விலக்கு அளிக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் புதிய தொழில் தொடங்குவதற்கு காரைக்கால் சென்று கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே அதை நமது அரசு கவனத்தில் கொண்டு, நாகையில் புதிதாக தொழில் தொடங்குபவர்களுக்கு 5 வருட வணிக வரி விலக்கை அளிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலே 2 சதவீத விற்பனை வரி வசூலிக்கப்படுகின்றது. ஆனால், அருகில் உள்ள கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் தங்கத்தின் மீதான வரியை வெறும் 1/2 சதவீதமே வசூலிக்கின்றார்கள். இதன் காரணமாக வணிகர்கள் அருகில் உள்ள பாண்டிச்சேரி சென்றோ, கர்நாடகா சென்றோ தங்களுக்குத் தேவையான தங்கத்தை வாங்கி வருகின்றார்கள். இதனால் தமிழ்நாட்டுக்கு முறையாக வரவேண்டிய வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. ஆகவே, அண்டை மாநிலங்களில் இருப்பதுபோல தமிழ்நாட்டிலும் அந்த வரியை 1/2 சதவீதமாகக் குறைத்து ஒழுங்குபடுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். இதனால் நம்முடைய தமிழ்நாட்டு வருமானம் கூடுமேயொழிய, அந்த வரிக் குறைப்பினால் நிச்சயமாகக் குறையாது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல கற்கண்டை தமிழ்நாட்டிலே சுமார் 19 பேர்தான் உற்பத்தி செய்கின்றார்கள். இதன் மூலம் வெறும் ஒரு லட்சம் ரூபாய்தான்

[திரு. ஜி. நிஜாமுதீன்] [1998 மே 4

வரி வருகின்றது. துறையினர் மேற்பார்வையிடுவதற்காக அதிகம் செலவாகிறது. அவற்றையும் கவனத்தில் கொண்டு இந்தக் கற்கண்டுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல பட்டாணி, வருகடலை, பொட்டுக்கடலை போன்றவற்றிற்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எண்ணெய்க்கு வரி விலக்கு அளித்துவிட்டோம். ஆனால், அதில் இருந்து வருகின்ற புண்ணாக்குக்கு வரி விலக்கு அளிக்கவில்லை. அதற்கு வரி வசூல் செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த வரியையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல பயறு வகைகளுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

அதுபோல காகித தொழிலைப் பொறுத்தவரையில் அழைப்பிதழுக்கு ஒரு வரியும், அழைப்பிதழ் கொடுக்கக்கூடிய கவருக்கு ஒரு வரியும் என்று வித்தியாசமாக இருந்து கொண்டு இருக்கின்றது. இது ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமாக இருக்கின்றது. ஒரே துறையைச் சேர்ந்த தொழில்களுக்கு ஒரேமாதிரியான வரியை விதிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது).

சாம்பிராணி கட்டிக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு, அதே நேரத்தில் சாம்பிராணி வில்லைக்கு வரி விதிக்கப்படுகின்றது. ஆகவே இவற்றையும் கவனத்தில் கொண்டு இதற்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

Factory products-ஸ்ஸை பொறுத்தவரையில் சின்ன சின்ன பேக்கரி வைத்து இருப்பவர்கள் ரஸ்க் என்ற ஒரு உணவுப் பொருளை தயாரித்து வழங்குகின்றார்கள். அது பெரும்பாலும் நோயாளிகளுக்குப் பயன்படுகின்றது. அவர்கள் கடைபெயரை பொறித்துத்தான் விற்கின்றார்கள். அவர்கள் நிறுவனத்தின் முத்திரை உள்ள பொருளுக்கு வரி செலுத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அதையும் கவனத்தில் கொண்டு சிறிய பேக்கரிகளுக்கு, உணவுப்பொருளில் பெயர் பொறித்து இருந்தாலும் அதற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல் Mosaic தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். வாழ்க்கையில் அடிமட்டத்தில் இருக்கும் தொழிலாளர்கள்தான் அந்த மொசைக் தொழிலை நடத்துகின்றார்கள். ஆகவே அந்தத் தொழிலுக்குப் போட்டிருக்கின்ற வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்

1998 மே 4] [திரு. ஜி. நிஜாமுதீன்]

கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு துறைகளிலிருந்து முறையான பதில்கள் கிடைப்பதில்லை. இங்கே கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களில் பாதிக்கு மேற்பட்ட வெட்டுத் திர்மானங்கள் இதைக்குறித்தே இருக்கின்றன. ஆகவே இவற்றைக் கவனத்தில் கொண்டு, துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகப் பதிலைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதும். அடுத்து திரு. வி.பி. இராசன்.

***திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் வணிகவரிகள் பற்றிய மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பினைப் பெற்றமைக்காக மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் படைத்த நிதிநிலை அறிக்கை, தமிழக மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. கார்த்திகைக்குப் பிறகு மழை இல்லை, கர்ணனுக்குப் பிறகு கொடை இல்லை என்று சொல்வார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையானது, கார்த்திகைக்குப் பிறகு வந்த மழையாய், கர்ணனுக்குப் பிறகு வந்த கொடையாய் அமைந்திருக்கிறது. என்று நாட்டில் உள்ள நல்லோர் உள்ளம் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையின் விளைவாக நாட்டில் பட்டமரம் துளிர்க்கிறது, கெட்ட குடி நிமிர்கிறது. நட்டநிசி விடிகிறது. ஆனால் சில பெட்டைகள் மட்டும் புலம்புவது வாடிக்கையாகிக் கொண்டிருக்கிறது.

ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். நேரமில்லை. பசுமாட்டுக்குக் கொம்பு முளைத்துவிட்ட காரணத்தால் மட்டும் அது ஜல்லிக்கட்டு காளையாகிவிடாது, என்பதை மாத்திரம் நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த ஆட்சியில் பல்வேறு சலுகைகளைத் தந்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோள். நான் மடிப்பிச்சை கேட்டதைப்போலக் கருதிக் கேட்கிறேன். ராஜபாளையம் தொகுதியில் 30,000 பேர் ஆணும் பெண்ணுமாக குடும்பம் குடும்பமாக விசைத்தறித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஐம்பதாண்டுக் காலமாக கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு வந்த அவர்கள், Gas Bandage வகை துணிகளைத் தயாரித்துக்

கொண்டிருக்கிறார்கள். 1996ல் மத்திய அரசு விசைத்தறியிலும் இந்த ரகத் துணிகளை உற்பத்தி செய்து கொள்ளலாம் என்று கூறியதன் அடிப்படையில் இப்போது விசைத்தறியிலும் அந்த Gas Bandage ரகத்துணிகளை அங்கே தயாரிக்கிறார்கள். குறிப்பாக, மருந்து கலப்பில்லாத ஒரு துணி, சுத்திகரிப்பு இல்லாத ஒரு துணி, இது கைத்தறியில் தயாரிக்கிறபோது வரிவிலக்கு உண்டு என்றும், அதே துணி விசைத்தறிக்கு வந்துவிட்டபிறகு வரி உண்டு என்றும் இன்றைக்கு அதிகாரிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களை தாள்பணிந்து கேட்டுக்கொள்வேன், 50,000 பேர் இன்றைக்கு அந்தத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்தப் பகுதியில் ஒருவேளை வரிவிதிப்பு என்று வந்து விட்டால் அந்தத் தொழிலை மூடக்கூடிய அபாய நிலை ஏற்படும். அங்கே நிச்சயமாக அமைதி கெடுகிற சூழ்நிலை உருவாகும். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்வேன், எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய அந்தக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்கவும் இந்தத் தொழில் புரிகின்றவர்களுக்கு வரியில்லை என்று நீங்கள் அறிவிப்பதன் மூலமும் அவர்கள் தொடர்ந்து அந்தத் தொழிலில் முன்னேற்றம் காணவும் நீங்கள் வழிவகை காணவேண்டுமென்று உங்களை வேண்டி விரும்பி பணிந்து வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, எங்கள் பகுதியில் தாலுகாவுக்கு ஒரு நீதிமன்றம் என்று அறிவிக்கப்பட்டு, எங்கள் மாவட்டத்தில் 5 தாலுகாக்களுக்கு குற்றவியல் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் எல்லாம் வந்தபிறகு, எங்கள் ராஜபாளையம் தாலுகாவுக்கு மட்டும் இன்னும் வரவில்லை. அந்த நீதி மன்றமும் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கிறது. 1978-லேயே இதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னரும் இன்னும் மாற்றம் இல்லை. நீதிமன்றம் தொடங்குவதற்கான நிதி இன்னும் ஒதுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எங்கள் பகுதியில் கலவரம் வந்துவிட்ட காலத்தில் மங்காபுரம் மற்றும் ஆசிலாபுரம் என்ற ஊர்களில் புறக்காவல் நிலையங்கள் இருந்தன. அப்படி இருந்தது இப்போதும் நன்மை பயக்கத்தக்கதாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த இரண்டு புறக் காவல் நிலையங்களையும் முழுநேரக் காவல் நிலையங்களாக மாற்றித்தர

வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், ராஜபாளையம் தாலுகா அலுவலகத்திற்கு மேற்குப் பகுதியில் புதியதாக புறக்காவல் நிலையம் ஒன்றையும் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் பகுதியில் வாழ்கிற ராஜுக்கள் என்ற சமுதாயத்தினரைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சாலியர் சமூகம் என்று சொல்லக்கூடிய அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, வீட்டு வசதி வாரியத்தின் மூலம், திருவள்ளுவர் நகரில் 6 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிக் கொடுக்கப்பட்ட எம் டைப், எல் டைப், வீடுகளுக்கு முழுப் பணமும் செலுத்தியாகிவிட்டது. மதுரையில் இருக்கக்கூடிய எல்லீஸ் நகரில் இருக்கின்ற ஆபிஸில், அதற்குப் பத்திரங்கள் கேட்டால் இன்னும் தர மறுக்கிறார்கள், என்ன காரணமோ தெரியவில்லை. ஆகவே அந்தப் பத்திரங்கள் கிடைப்பதற்கும் இந்த நேரத்தில் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

ஆக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்திக் கேட்பதெல்லாம் - நேரமின்மையின் காரணமாக- எங்கள் பகுதியில் வாழ்கின்ற கைத்தறித் நெசவாளர்களின் துயர் துடைக்கின்ற வகையில், கைத்தறி நெசவாளர்களே மெல்ல மெல்ல காலமாற்றத்தின் காரணமாக விசைத்தறித் தொழிலாளர்களாக மாறி வருகிறார்கள். அப்படி விசைத்தறித் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு வரிவிலக்கு அளிப்பதற்கு எந்தக் கட்சியும் எதிர்ப்பாகக் குரல் கொடுக்காது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள்கூட நேரமின்மையின் காரணமாக இதைச் சொல்லாமல் விட்டு விட்டார்கள். எல்லா கட்சிகளும் இதற்கு ஆதரவு தெரிவிக்கின்றன. ஆகவே கைத்தறி தொழிலாளர்களுக்காக யாரும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள். ஆகவே, தயவுசெய்து, இந்த நேரத்திலே மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வது உங்களுடைய அறிவிப்பில் என் பகுதிக்கு அந்த வரிவிலக்கு வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். அன்பு வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் - நிருவாகம் பற்றிய மானியக்கோரிக்கையின்கீழ் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிக்கையைப் பொறுத்தமட்டில், நமது தமிழக முதலமைச்சர் அவர்கள், 1998-99 ஆம் ஆண்டு, 6 ஆயிரம் கோடி ரூபாயை ஈட்டித் தருகின்ற ஒரு அறிக்கையாக நமக்குக் கொடுத்திருக்கின்றார்கள்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இது உண்மையிலேயே மகிழ்ச்சி தரக்கூடியது. மூன்று பட்ஜெட்டுகளிலே நல்வாய்ப்பை வியாபாரப் பெருங்குடி மக்களுக்கு அளித்து, வரிச் சலுகைகளை எல்லாம் கொடுத்து, அதற்குப் பிறகும்கூட இவ்வளவு வரி வரவு இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்த வரியை அறிவிப்பு செய்து வியாபாரிகளுக்கு ரூபாய்க்கு ஒரு பைசா என்று நிர்ணயம் செய்து அதன் வாயிலாக ஆட்சி செய்து கொண்டிருந்த ஒரு காலம் இருந்தது. இப்போது நமது முதலமைச்சர் அவர்கள் பல இனங்களிலே வரிச் சலுகைகளைக் கொடுத்தும்கூட, வரியைச் செலுத்தக்கூடிய வியாபாரப் பெருங்குடி மக்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வியாபாரிகள் இந்த அரசுக்கு ஒத்துழைப்பாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு நாம் எவ்வளவு சலுகை செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிற அரசுதான் இந்த அரசு என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். இருந்தாலும்கூட இன்றைக்குப் பல இனங்களிலே வரிச் சலுகைகள் கேட்டு பல பேர் பேசியிருந்தாலும்கூட, ஒவ்வொருவரையும் இரண்டு பிரிவுகளாக நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். இன்னின்ன பொருட்களுக்கு வரிச் சலுகை வேண்டும், இன்ன பொருட்களுக்கு வரி இருந்தாலும்கூட, குறைக்க வேண்டும் என்ற இரண்டு எண்ணங்கள்தான் இருந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், நவதானியங்கள், பயறு வகைகளுக்கு வரி முற்றிலுமாக நீங்கி விட்டது என்று சொன்னாலும்கூட, கிட்டத்தட்ட 2,3,4 பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கவில்லை என்பது சுட்டிக்

காண்பிக்கப்பட்டிருக்கிறது, இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்றுதான் அதை நாம் எண்ண வேண்டும்.

ஒன்றை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்டாணி, மொச்சை, பொரி கடலை இவைகளுக்கு எல்லாம் வரி இருக்கிறது என்று சொல்லி அந்த இனங்களிலே வரி வசூலிக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மற்ற பயறு வகைகளுக்கு வரி விலக்கு அளித்து இதற்கு வரி விலக்கு இல்லையென்று சொன்னால், நிச்சயமாக வியாபாரப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுவார்கள். அதுவும் இது உணவுப் பொருள். உணவுப் பொருளாக இருக்கின்ற காரணத்தால், அதை எண்ணி வரி இருக்கிறதே என்றுதான் மக்கள் சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு வறுகடலை, பொட்டுக்கடலை போன்றவை ஏழையெளிய மக்கள், குறிப்பாக, பெண்கள் நிறைய கையாளுகின்ற பொருளாக இருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். அதற்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எண்ணெயைப் பொறுத்தவரையில் அத்தனை எண்ணெய்க்கும் வரி விலக்கு அளித்து, அதனுடைய உபபொருளான பிண்ணாக்கிற்கு வரி விலக்கு அளிக்கப்படவில்லை. கால்நடைத் தீவனமாக உபயோகப்படுத்தப்படுகின்ற பிண்ணாக்கிற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும்.

அதுவும் எங்கள் மதுரை மாநகரத்திலே சிறுதொழில்கள் இருக்கின்றன. சிறுதொழில்களை நம்பியிருக்கின்ற குடும்பங்களும் நிறைய இருக்கின்றன. அந்தச் சிறிய குடும்பங்கள் செய்யும் இத்தகைய தொழில்களைப் பற்றிச் சொல்லும்போது - ஒவ்வொரு தொழிலாக எண்ணிப்பார்க்கும்போது - இப்போது கற்கண்டைப் பற்றிச் சொன்னார்கள். கற்கண்டிற்கு வரி விலக்கு என்று சொன்னால், கிட்டத்தட்ட மொத்தத்திலே 14 பேர்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலேயிருந்து வரக்கூடிய ரெவின்யூ குறைவுதான். சீனி வாங்கும்போது, சீனிக்கு எக்சைஸ் கட்டிவிடுகிறார்கள். இதைக்கட்டிய பிறகு, கற்கண்டு விற்பனைக்கு வரி விதிக்கும்போது, அவர்களுக்குள்ளே அந்தத் தொழில் பார்ப்பவர்களுக்குள்ளே கொஞ்சம் கஷ்டமாக இருக்கின்றது. எனவே, 4% வரியையும் தள்ளுபடி செய்யவேண்டும். ஏன் என்றால், அது குடிசைத் தொழிலாக இருக்கிறது. அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அடுத்து சாம்பிராணி பற்றிச் சொன்னார்கள். சாம்பிராணியிலே தூள் சாம்பிராணியாக இருந்தால் வரியில்லை. ஆனால், அதையே ஒரு வில்லையாகச் செய்துவிட்டால் அதற்கு வரி இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, அந்தச் சாம்பிராணியோடு சேர்த்து, இதற்கும் வரியில்லை என்று சொல்லி நீக்கினால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து பிளாஸ்டிக் பைகளைச் செய்யும் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 900 சிறு கம்பெனிகள் இருக்கின்றன. இந்தப் பையைத் தயார் செய்கிறவர்கள் சிறிய சிறிய முதலீடுகளைப் போட்டு, தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதிலே இருக்கிற சிறிய வியாபாரிகள் எல்லாம் வேறு ஒன்றும் சொல்லவில்லை, வரியைக் குறைக்கச் சொல்கிறார்கள். வரியை நீக்கச் சொல்லவில்லை, குறையுங்கள் என்கிறார்கள். தற்போது 8% இருக்கிறது. **Clasification** இல்லாததாலே, பிளாஸ்டிக் பையிலே, **Other Clasification** என்று சேர்த்து, 8% வரி வசூல் செய்கிறார்கள். அதற்கு வரிச் சலுகையாகக் கொடுத்து 4% வரி விதித்தால் நல்லது. ஏன் என்றால் அதனுடைய மூலப் பொருட்களுக்கு எல்லாம் அவர்கள் வரி கட்டித்தான் கொண்டு வருகிறார்கள். இதிலே நிறைய பேர்கள், தொழில் செய்வதற்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது: 4% கூட நாங்கள் வரி கட்டுகிறோம். அதை நேர்மையாகக் கட்டுகிறோம். எங்களுக்கு இந்தத் தொல்லையே வேண்டாம் என்கிற மாதிரி சொல்கிறார்கள். இதையும் கவனத்திலே கொண்டு, 4% வரியாகக் குறைத்துக் கொடுக்கும்படி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தேங்காய்க்கு வரி. உருளைக் கிழங்கு, தக்காளி போன்றவைகள் அனைத்தும் மதுரை ஜில்லாவிலே விளைவது இல்லை. விற்பனைக்கு வருகிற இடம்தான். அதற்கு செஸ் வரி என்று வாங்குகிறார்கள். இவை அழுகும் பொருட்கள். இந்த அழுகும் பொருட்களுக்கு செஸ் வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, **Consignment tax**-ஐ கைவிட வேண்டும் என்று எல்லோரும் பேசிவிட்டார்கள். அதோடு நானும் பேசி விடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வெண்ணெய் மற்றும் நெய் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று அன்றைக்கே

சொல்லி விட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், அதைப் பற்றி, கவனத்திலே கொண்டிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அதற்குச் சொந்தக்காரர்களில் நானும் ஒருவன்தான். ஆகவே, இதைப் பார்த்து, கொஞ்சம் வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரிகள், மற்றும் நிருவாகம் — குறிப்பாக, மாவட்ட நிருவாகம் — இவற்றினைக் குறித்து இன்றையதினம் வைக்கப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகளில், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை எல்லாம் எடுத்துக்கூறி இருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே வைக்கப்பட்டுள்ள அவர்களுடைய முறையீடுகளை எல்லாம் என்னுடைய பதில் உரையிலேயே விளக்கிக்கூறி, அவைகளை ஏற்றுக் கொண்டேன் என்று கூறுகின்ற நிலை எனக்கு இல்லை என்பதை, கோரிக்கைகளை வைத்தவர்கள் மிக நன்றாக அறிவார்கள். ஏன் என்றால், நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டு, அதிலே பல்வேறு சலுகைகள், இந்த மூன்றாவது நிதிநிலை அறிக்கை உள்பட, வணிகர்களுக்கு, பொதுமக்களுக்கு ஏற்ற வகையில், அறிவிக்கப்பட்டும், வியாபாரத்திலே கொசுறு என்பார்களே, அதைப்போல, சில கொசுறு கோரிக்கைகள் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றி எல்லாம் பேசுவதற்கு முன்பு, நம்முடைய நண்பர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய சுப்பராயன் அவர்கள் கூறிய ஒன்றை நானும் உன்னிப்பாகக் கவனித்தேன், இந்த அவையும் கவனித்தது; நாடும் கவனிக்கும். அவர்கள், நீங்கள் வசூலிக்கின்ற வரி எவ்வளவோ அதற்கு ஈடான தொகை அதிகாரிகளால் இன்றைக்குக் கொள்ளை அடிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள்.

அதிலும் சுட்டிக்காட்டி அவர்கள் பேசுகிறபோது, உணவகங்களிலே வசூலிக்கப்படுகின்ற அந்த வரி பெரும்பாலும் அரசுக்குக் கிட்டாமல் அதிகாரிகளுக்கே செல்கிறது என்றும் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அதிகாரிகளுக்காக வக்காலத்து வாங்கவில்லை; வக்காலத்து வாங்குபவனும் அல்ல. ஆனால் அதே நேரத்தில் அதிகாரிகள் எல்லோருமே தவறு செய்யக்கூடியவர்கள் அல்ல. நம்முடைய

எதிர்க்கட்சித் தலைவர் கூட உதகையில் அளித்த ஒரு பேட்டியை இன்று காலைப் பத்திரிகையிலே பார்த்தேன். அதிலே அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்; 36 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்மீது கலைஞர் நடவடிக்கை எடுத்துவிட்ட காரணத்தால் அதிகாரிகள் எல்லாம் செயல்படவே பயப்படுகிறார்கள் என்று அதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1.00

யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை. ஏன் இதுவரையிலே எடுக்கவில்லை என்பது எதிர்க்கட்சியினுடைய கேள்வி. இந்தக் கொள்கைக்கும், இந்தக் கேள்விக்கும் முரண்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அதிகாரிகள்மீதும் — அமைச்சர்கள், பழைய காலத்து அமைச்சர்கள் மாத்திரமல்ல, தவறு செய்த அதிகாரிகள்மீதும் — நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல 36 பேர் மீது அல்ல. ஏறத்தாழ 10 அதிகாரிகள்மீது — ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். அதையும் சேர்த்தால் ஒரு 12 பேர் இருக்கலாம். அதிலேகூட 2,3 பேரையும் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய அரசிடத்திலே அனுமதி பெற்றுத்தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கமுடியும். அதைக்கூட மத்திய அரசிலே 2,3, அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இந்த 10,12 அதிகாரிகளில், 8,9 அதிகாரிகள்மீதுதான் — அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுடுகாட்டு ஊழல் சம்பந்தமான விசாரணை மதுரையோடு நின்றுவிடக்கூடாது, எல்லா மாவட்டங்களுக்கும் சென்று அதை விசாரிக்க வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பாக வழக்கறிஞர்கள் உயர்நீதிமன்றத்தில் வாதாடியபொழுது, அதன் காரணமாக உயர்நீதிமன்றத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு அவர்கள் ஆணையிட்டு, கிட்டத்தட்ட 30 அதிகாரிகளுக்கு இன்று சி.பி.ஐ. நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் மனதிலே ஒரு குழப்பம் இருக்கிறது என்பதைத்தான் நான் பத்திரிகைச் செய்தியாகச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது போல அது அரசு தொடர்ந்த வழக்கல்ல. அவர்களே, குறிப்பிட்டு விட்டார்கள். இது சி.பி.ஐ. வழக்கு என்று. எனவே C.B.I. வழக்கில் நீதிமன்றத்தினுடைய உத்தரவை அவர்கள் நிறைவேற்றும்பொழுது அதிலே அரசு குறுக்கிட இயலாது என்பதை அவர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகின்றேன். பொதுவாக 36 அதிகாரிகள் என்று சொல்லும்பொழுது ஒரு Thrill அடேயப்பா, அவ்வளவு அதிகாரிகளா என்று எண்ணத்தோன்றும். ஆனாலும் அதிகாரிகளாக இருந்தாலும், கடந்த காலத்திலே ஆட்சி புரிந்த அமைச்சர்களாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த மாமன்றத்திலே உள்ள ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மற்றும் தோழமைக் கட்சிகளுடைய ஏகோபித்த எண்ணம். அதிலே மாறுபாடான கருத்து எனக்கும் இல்லை; நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்கும் இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன்: நாடும் நன்றாக உணர்ந்திருக்கிறது.

திரு. சுப்பராயன் அவ்ர்கள் குறிப்பிட்டதைப்போல எல்லா அதிகாரிகளுமே தவறானவர்கள் அல்ல. அவரும் அப்படிக் குறிப்பிடவில்லை. ஆனால் இந்த வணிகவரித் துறையிலே அது போன்ற தவறுகள் நடப்பதற்கு ஏராளமான இடம் இருக்கிறது என்பதை அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார்கள். அதிகாரிகள், ஊழல் புரிகின்ற அதிகாரிகள், தவறு செய்கின்ற அதிகாரிகள், லஞ்சம் வாங்குகின்ற அதிகாரிகள், அப்படித்தான் செய்வோம் என்று ஓர் உறுதி எடுத்துக்கொண்டு நடப்பார்களேயானால், அவர்களைத் திருத்துவது என்பது இயலாத காரியம். வானத்தைக்கூட வில்லாக வளைத்துவிடலாம். ஆனால் அப்படிப்பட்ட குணம் படைத்தவர்களை, ஊழலில் திளைப்பவர்களை, லஞ்ச லாவண்யத்திலே பிழைக்க வேண்டும், குறுக்கு வழியிலே வாழ வேண்டும் என்று எண்ணுகின்றவர்களை நாம் திருத்த முடியாது. உதாரணமாக ஒரு கதை கூட உண்டு, அதிகாரிகளைப் பற்றி. ஏற்கெனவே Registrar-ஆக இருந்த நடராஜன் என்பவர் அந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். நான் ஒரு முறை பத்திரிகையிலேகூட அந்தக் கதையைக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறேன். கடல் அலை Officer என்று வைத்துக்கொள்ளலாம். ஒரு Officer தொடர்ந்து கையூட்டுப் பெற்றுக்கொண்டே வந்தார். இவரைத் திருத்துவது எப்படி, இவர் கையூட்டுப் பெறாமல் இதை நிறுத்துவது எப்படி என்று யோசித்து, சில நாணயமான அதிகாரிகள் எல்லாம் கூடிப் பேசி, இவருக்கு ஒரு

வேலை கொடுக்கலாம் என்று கடற்கரையிலே போய் உட்காரச் சொன்னார்கள். என்ன வேலை என்று கேட்டால், கடலிலே வருகின்ற அலைகளை எண்ணிக்கொண்டிரு என்று சொன்னார்கள். சொல்லிவிட்டு, இவர்களுக்குள்ளே ஒரு பூரிப்பு, இவனை அடக்கி விட்டோம்; கடற்கரையிலே இவனை உட்கார வைத்துவிட்டோம். இவன் கடல் அலையை எண்ணிக் கொண்டிருப்பானே தவிர, இனிமேல் லஞ்சமாக வருகின்ற பணத்தை எண்ணுவதற்கு இவனுக்கு வாய்ப்பு இருக்காது என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அந்த அதிகாரி ஒரு நாள் அப்படியே உட்கார்ந்திருந்தார். அலைகளை எண்ணினார். மறுநாள் சில பேர் மீன் பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றார்கள். கட்டுமரம் கட்டிக்கொண்டு அல்லது தோணி எடுத்துக்கொண்டு கடலுக்குச் சென்றார்கள். இவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர்களை அழைத்து எங்கே போகிறீர்கள் என்றார்? கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கிறோம் என்றார்கள். நான் அலைகளை எண்ணிக் கொண்டு இருக்கிறேன். மீன் பிடிக்க கட்டுமரத்தை உள்ளேவிட்டால் அது Disturb ஆகும். அலைகள் வீணாகும் என்றார். என்ன செய்யலாம் என்றார்கள். அதற்கு இவ்வளவு ரூபாய் கொடு, கொடுத்தால் விடுகிறேன் என்று சொன்னார் (சிரிப்பு).

பிற்பகல் 1-05

இப்படி அலைகளை எண்ணச் சொன்னால்கூட அங்கேயும் விடாமல் இந்தக் கடல் அலை Officer தன்னுடைய திறமையைக் காட்டினார் என்று ஒரு அதிகாரியைப் பற்றி, அதிகார வர்க்கத்திலே சில பேர் திருத்த முடியாதவர்களாகவே இருப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தக் கதை சொல்லப்பட்டது.

உங்களுக்குத் தெரியும் நடராஜன் என்பவர், அவர் சொன்ன கதை இது. கன்னியாகுமரி கடலிலே குளிக்கும் போது விபத்தின் காரணமாக இறந்துவிட்ட ஒரு மூத்த அதிகாரி, நேர்மையான ஒரு அதிகாரி, அவர் சொன்ன கதை தான் இது. வி.கே.சி. நடராஜன் அவர்கள் சொன்ன கதை. எனவே, அதிகாரிகள், தவறு செய்கின்ற அதிகாரிகள். அதைப்போல அந்த அதிகாரிகளோடு சேர்ந்து கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுகின்ற சிலர் இவர்களுக்கிடையிலேதான் நாம் ஆட்சியை நடத்த வேண்டியிருக்கின்றது. முடிந்தவரையில் நடவடிக்கைகள் எடுக்கிறோம். நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அதே நேரத்தில் நல்லாட்சி நடத்த வேண்டும் என்பதற்காகவும், நாம் நம்முடைய அரிய பணியை

ஆற்றிக்கொண்டிருக்கிறோம். விற்பனை வரியைப் பொறுத்தவரையில், இந்த அரசு இந்த மூன்று நிதிநிலை அறிக்கைகளில், என்னென்ன உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, விட்டுக்கொடுத்து வரிக்குறைப்பு, வரி விலக்கு இவைகளையெல்லாம் செய்திருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். இருந்தாலும்கூட, நினைவூட்டுவது என்னுடைய கடமையாகும். இதிலே குறிப்பாக, இங்கே நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள், 17-7-1996 ஆம் நாள் வெளியிடப்பட்ட அரசு அறிவிக்கையில், பருப்பு, பயறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு 17-7-1996 முதல் விற்பனைத் தொகை 100 கோடி வரை உள்ள வணிகர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. வெளிமாநிலங்களுடைய விற்பனையைப் பொறுத்தவரை 5-8-1996 முதல் 16-10-1996 வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு வரிவிலக்கு இல்லை என்றாலும் அந்த இடைப்பட்ட காலத்திற்கு உள்மாநில மற்றும் வெளிமாநில விற்பனைகளுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சொக்கர் அவர்களும் கேட்டுக் கொண்டுள்ளார். அவரது கோரிக்கை பரிசீலக்கப்பட்டது. 17-7-1996 முதல் பருப்பு, பயறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. பின்னர் அந்த வரிவிலக்கு உள் மாநில விற்பனைக்கு மாத்திரம் அல்லாமல் வெளிமாநில விற்பனைக்கும் பொருந்துமா என்ற ஐயப்பாட்டைப் போக்கும் வகையில் மேற்கூறப்பட்ட வரிவிலக்கு உள்மாநில விற்பனைக்கு மட்டுமே என்று 5-8-1996 ஆம் நாளன்று அரசு அறிவிக்கை வாயிலாக அறிவித்தது. அதன் பின்னர் வெளிமாநில விற்பனைக்கு 'சி' படிவம் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் 4 விழுக்காடு வரியே விதிக்கப்படும் என்கின்ற அறிவிக்கை 13-9-1996 ஆம் நாளிட்ட அரசு ஆணையிலே வெளியிடப்பட்டு 16-10-1996 ஆம் நாளிட்ட அரசிதழில் பிரசுரம் ஆகியுள்ளது. வெளிமாநில விற்பனைக்கு வரிவிலக்கு இல்லை என்பது 5-8-1996 ஆம் நாள் அறிவிக்கையில் தெளிவாக அறிவிக்கப்பட்டுவிட்டதால் 5-8-1996 முதல் வெளிமாநில விற்பனைக்கு வரி செலுத்த வேண்டும். எனினும் 17-7-1996 முதல் 4.-8-1996 முடிய உள்ள இடைப்பட்ட காலத்திற்கு வரி விதிக்கப்பட மாட்டாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதைப்போல நம்முடைய சுப்பராயன்' அவர்கள் Tamil Nadu Hotels Association, சென்னை, இதன் சார்பாக அல்லது, சார்பாக

அல்ல, அவரிடத்திலே சொல்லப்பட்ட சில கருத்துக்களின் அடிப்படையில் அவர் சில செய்திகளை அரசுக்குச் சொல்லி அதை யோசிக்குமாறு கேட்டிருக்கிறார். அது பரிசீலிக்கப்பட்டது. அவர் சொன்னது, உணவகங்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிக்குமாறும், முழு வரி விலக்கு அளித்தால் அரசு நிதிநிலை பாதிக்கப்படும் எனக்கருதினால் - எப்படிப் பாதிக்கப்படாமல் இருக்க முடியும்? இப்போது 15 கோடி வருகிறது; பாதிக்கப்படும் என்று கருதினால் என்பதற்கே இடம் இல்லை; பாதிக்கப்படும். விற்பனைத் தொகை ரூ.25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு வரி விதித்து - இது ரொம்ப ஆபத்து; 25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கும் வரி விதிக்கச் சொல்லி அவர்கள் சொல்கிறார்கள். அதை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? நாம் 25 இலட்சத்திற்கு மேல்தான் என்று குறிப்பிட்டிருக்கிறோம் - தற்போதுள்ள படி முறை, ஸ்லாப் ஸிஸ்டம் - வீதத்தை வெகுவாக குறைக்குமாறும் கோரிக்கை விடுத்தார்கள். இதுபற்றிப் பரிசீலித்ததில் நான் இந்த அவைக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

திரு. சி. தங்கராஜ், ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்களுடைய தலைமையிலான வரி சீரமைப்புக் குழு உணவகங்களில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களுக்கு பின்வரும் படி முறை-ஸ்லாப் சிஸ்டம் - வரிவிகிதத்தைப் பரிந்துரைத்தது. அவர்கள் பரிந்துரைத்த வரி விகிதத்திலிருந்து நாம் எவ்வளவு குறைவாக ஆக்கியிருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டத்தான் நான் சொல்கின்றேன். தங்கராஜ் தலைமையிலே இருந்த சீரமைப்புக் குழு பரிந்துரை, ஆண்டு ஒன்றிற்கு 3 இலட்சம் முதல் 5 இலட்சம் வரை Turn Over இருந்தால், விற்பனைத் தொகை இருந்தால், வரித் தொகை வரி விகிதம் 6,000 ரூபாய். 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை என்றால் 12,000 ரூபாய். 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரை என்றால் 24,000 ரூபாய். 20 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை என்றால் 48,000 ரூபாய். 30 இலட்சம் முதல் 40 இலட்சம் வரை என்றால் 60,000 ரூபாய். 40 இலட்சம் முதல் 50 இலட்சம் வரை என்றால் 84,000 ரூபாய். 50 இலட்சத்திற்கு மேல் 2 விழுக்காடு. ஆனால் இதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொண்டிருந்தால் இந்த ஹோட்டல் அதிபர்கள் எல்லாம் என்ன ஆகியிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாது. இருந்தாலும் நாங்களாகவே இவ்வளவு வரி அவர்களுக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்து, பரிசீலித்து விற்பனைத் தொகை ரூ.25 இலட்சத்திற்கு உட்பட்டிருந்தால்

வரியே இல்லை என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறோம். 25 இலட்சத்திலிருந்து 30 இலட்சம் வரை ஆண்டுக்கு 24,000. அவர்கள் சொன்னது 48,000. அதற்குப் பதிலாக நாம் விதித்திருப்பது 24,000. பரிந்துரை 48,000. 30-லிருந்து 40 இலட்சம் வரை 36,000 என்று ஆக்கியிருக்கிறோம். 40 இலட்சத்திலிருந்து 50 இலட்சம் வரை 48,000. 50 இலட்சத்திற்கு மிகும் விற்பனைத் தொகைக்கு 2 விழுக்காடு என்று விற்பனை வரியை நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம்.

அது மாத்திரம் அல்ல. சென்ற ஆண்டுதான் உணவகங்களுக்கான வரி விகிதங்களில் விற்பனை வரி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையைவிட மிகவும் குறைவான ஸ்லாப் - படிமுறை வீதத்தை அரசு நடைமுறைப்படுத்தியிருக்கிற காரணத்தால் 25 லட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், உணவகங்களுக்கு மறுபடியும் வரி சீரமைப்பு செய்வதற்கு இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மூலமாக அந்த அசோசியேஷனுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் சொன்னதால் அந்த அசோசியேஷனுக்கும் அவருக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக யாரும் கருதத் தேவையில்லை. அவர்கள் கொடுத்த கோரிக்கையை அவர் பிரதிபலித்திருக்கிறார் அவ்வளவுதான்.

அவர் இன்னொன்று சொன்னார். உணவகங்களிலே தற்போது உள்ள இந்தப் படிமுறை Slab வீதத்தை நாம் தொடர வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் கூறிய குறைகளை நீக்க வேண்டுமேயானால் உணவகங்களில் Chartered Accountant மூலம் கணக்கைத் தணிக்கை செய்து அதன் அடிப்படையில் வரிக் கணக்குகளை ஏற்றுக்கொள்ளலாம். இதில் 20 சதவீதம் கணக்குகள் மாத்திரமே கணினி முறையிலே தேர்வு செய்து ஆய்வு செய்யலாம். இந்தக் கருத்தை நான் பரிசீலித்து, சுப்பராயன் அவர்கள் சொன்ன அந்தக் குறைபாடு நீங்குவதற்கு இயலுமா என்பதை அதிகாரிகளோடு கலந்து பேசி, பிறகு அறிவிப்பேன் என்ற உறுதியை இங்கே அளிக்கின்றேன்.

பிற்பகல் 1-15

1996-97 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரிச் சலுகையினால் நம்முடைய முதல் நிதிநிலை அறிக்கை நான்காவது முறையாக இந்த

அரசு பொறுப்பு ஏற்ற பிறகு - முதல் நிதிநிலை அறிக்கையில் வழங்கிய வணிக வரி சலுகையினால் இந்த அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு 370 கோடி ரூபாய் என்பதை மறந்து விடக்கூடாது. ஆனால் 370 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும்கூட Growth rate அது ஓரளவு இருந்த காரணத்தால் ஒரு பெரிய வீழ்ச்சி இந்த விற்பனை வரி வருவாயிலே நமக்கு ஏற்பட்டுவிடவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1997-98 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரிச் சலுகையினால் அரசாங்கத்துக்கு 44 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அதே ஆண்டில் உணவு விடுதிகளுக்கு அரசு விதித்த வணிக வரி மற்றும் பான் மசாலா, பரிசுச்சீட்டுகளுக்கு விதித்த வரி உயர்வினால் 17 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிட்டியது.

1998-99 அதாவது நடப்பு ஆண்டில் வழங்கிய வணிக வரிச் சலுகையினால் இந்த அரசுக்கு 40 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும். அதேசமயம் இந்தியாவில் தயாரிக்கப்படும் I.M.F.L. என்கிற வெளிநாட்டு மதுவகைகளுக்கு அரசு விதித்துள்ள வணிக வரி உயர்வினாலும், கூடுதல் விற்பனை வரியிலே செய்த மாற்றங்களினாலும் 310 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது இந்தக் கூடுதல் விற்பனை வரியிலே செய்த மாற்றம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள் என்று கருதுகிறேன். கூடுதல் விற்பன்ன வரி ரூபாய் 100 கோடிக்கு மேல் என்று இருந்ததை ரூபாய் 25 கோடிக்கு மேலே என்று மாற்றிய காரணத்தால் நமக்கு அதிலே, அந்த வரியிலே அதிக வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் வருவாய்க் கணக்கிலே செலவு 18 ஆயிரத்து 48 கோடி ரூபாய். வரவு 15 ஆயிரத்து 39 கோடி ரூபாய். இதிலே வணிக வரியின் மூலமாக 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கடந்த காலத்தை நினைத்துக்கொண்டு 6 ஆயிரம் கோடி ரூபாய், 6 ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய் என்று எல்லாம் இங்கே உரையாற்றியிருக்கின்றார்கள். வணிக வரியின் மூலம் எதிர்பார்க்கப்படுவது 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற 2 ஆண்டுகளிலே வரி விதிப்பு முறைகளிலே பல சீரமைப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. நாணயமாக வரி செலுத்துவோருக்கு நடைமுறைகளை எளிதாக்கி வரி விதிப்பு அமைப்பின் கடுமையைக் குறைத்து உள்ளது. இதன் ஒரு தொடர் நடவடிக்கையாக ரூபாய் 10 லட்சத்திற்கு மேற்பட்டும் ரூபாய் 20 லட்சத்திற்கு உட்பட்டும் மொத்த விற்பனைத் தொகை உடைய வியாபாரிகள் பதிவு பெற்ற பட்டயக் கணக்கர்கள் Chartered Accountant தணிக்கை செய்ததன் அடிப்படையில் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும். இதில் 10 விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினால் ஆய்வு செய்யப்படும். இதற்கான சட்டமுன்வடிவு இக்கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படும். வணிகராகப் பதிவு செய்ய தற்போதுள்ள மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு 75 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதற்கான சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத்தொடரிலேயே அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

ஒரு வணிகருடைய மொத்த வியாபாரத் தொகை 10 லட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் இருந்தால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நிபந்தனைகள் என்றால் ஆவணங்களைப் பாதுகாத்தல், ரெக்கார்டுகளை வைத்துக்கொள்ளுதல் என்கின்ற அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவருடைய கணக்குகளைத் தணிக்கைக்கு உட்படுத்தாமலேயே இறுதி வரி விதிப்பு செய்திட ஆணையிடப்பட்டுள்ளது. அந்த வணிகர் விரிவான கணக்கு வழக்குகளைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அடிப்படை கணக்கு ஆவணங்களைப் பராமரித்தாலே போதும் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

விற்பனை வரிச் சட்டத்தைத் தமிழில் வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்திலிருந்து அட்டவணைகளை முதலில் வெளியிடவும், பின்னர் விற்பனை வரிச் சட்டத்தை முழுவதுமாகத் தமிழில் வெளியிடவும் முடிவு செய்யப்பட்டது. அதன் முதல் கட்டமாக 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் உள்ள அட்டவணைகள் தமிழில் வெளியிடப்பட்டன. தற்போது விற்பனை வரிச் சட்டம் சட்டத் துறை மூலமாக தமிழாக்கம் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ஆனாலும் கூட அந்த தமிழாக்கத்திலே பயன்படுத்தப்பட உள்ள சில தமிழ்ச் சொற்கள் வணிகர்களிடமும், வணிக வரித்

துறையில் உள்ள அலுவலர்களிடமும் புழக்கத்தில் இல்லாத சொற்களாக உள்ளன. உதாரணமாக மொழி பெயர்ப்பில் burden of proof என்பதற்கு சட்டத் துறை "நிரூபிக்கும் சுமை" என்று மொழியாக்கம் செய்துள்ளது. burden of proof என்றால், "நிரூபிக்கும் சுமை" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது சட்டத் துறை - தமிழ்த் துறை அல்ல - சட்டத் துறை. ஆனால், அதனை "நிரூபிக்கும் பொறுப்பு" என்று எல்லோருக்கும் தெரிந்த தமிழிலே மொழி பெயர்ப்பு இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது. Self-assesment என்பதை, சட்டத் துறை, "தன் வரிக் கணிப்பு" என்று மொழி பெயர்த்து இருக்கிறது. அதை, எல்லோருக்கும் புரியக்கூடிய அளவிற்கு "சுய வரி விதிப்பு" என்று தமிழில் எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. "சுய" என்பது சரியான தமிழ் மொழி அல்ல என்றாலும், வடமொழி என்றாலும்கூட, சுய மரியாதையைத் தன்மானம் என்று நாம் மாற்றிக் கொண்டாலும்கூட, இங்கே சுய மரியாதை என்றாலே தமிழிலே புழக்கப்பட்டு விட்ட வார்த்தை என்ற காரணத்தால் "சுய வரி விதிப்பு" என்று தமிழில் எளிமைப்படுத்தப் பட்டுள்ளது. Subject to condition என்பதைச் சட்டத் துறை, "வரையறைக்கு உட்பட்டு" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது. அது சரியான மொழி பெயர்ப்பாக ஆக முடியாது. எனவேதான் Subject to condition என்பதை, "நிபந்தனைக்கு உட்பட்டு" என்று மொழி பெயர்த்து இருக்கின்றோம். எனவே, இந்தத் திருத்தங்கள் எல்லாம் ஆனபிறகு அது வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-20

விற்பனை வரிச் சட்ட வழக்குகளை விரைவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில், மேல் முறையீட்டு தீர்ப்பாயங்களில் நீதித் துறை உறுப்பினர்கள், கூடுதல் நீதித் துறை உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தமையால் பல வழக்குகள் விசாரிக்கப்படாமலேயே தேங்கிக் கிடந்தன. இதன்காரணமாக வணிகர்களுக்குப் பல இடையூறுகளும், அரசுக்கு வருவாய்த் தேக்கமும் ஏற்பட்டு வந்தன. இவற்றைக் களையும்பொருட்டு, காலியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது தீர்ப்பாயத்தின் துணைத் தலைவர்

மற்றும் நிர்வாக உறுப்பினர் பதவிகள் நிரப்பப்பட்டு, இந்த வழக்குகளை விரைவிலே முடித்திட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கே வெட்டுத் தீர்மானங்கள் தந்துள்ள உறுப்பினர்கள், அவர்கள் இங்கே பேசுகின்ற வாய்ப்பைப் பெறாவிட்டாலும் அல்லது அவர்கள் பேசாவிட்டாலும்கூட, அவைகளைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

பா.ம.க.-1 கட்சி உறுப்பினர்கள் ஐ. கணேசன், ஜி.கே. மணி ஆகியோர், வேளாண் இடுபொருள்கள் மீது விற்பனை வரி விதிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். வேளாண் இடுபொருள்களான யூரியா மற்றும் அமோனியம் பாஸ்பேட் உரத்திற்கு 5-3-1997 முதல் 4 சதவீதத்திலேயிருந்து 2 சதவீதமாக வரி குறைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது கை தட்ட வேண்டாம், ஏற்கனவே, தட்டியாகிவிட்டது. - 1997லேயே குறைந்தாகிவிட்டது. அதற்குத்தான் வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருக்கிறீர்கள் குறைத்தது தப்பு என்று!

மேலும், வேளாண்மைக்கான - அதிலே வரி குறைக்கப்பட்டது - மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்து ஏற்கப்பட்டு மேலும் வேளாண்மைக்கான -- பாக்டீரியா வளர்ப்பு, தழைச் சத்து, எரு மற்றும் பச்சை எரு விதைகள் போன்றவைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண் விளைபொருட்களின்மீது விதிக்கப்படும் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று பா.ம.க. உறுப்பினர் திரு. கோவிந்தன் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். பொது மக்களால் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பின்வரும் வேளாண் விளைபொருட்கள் விற்பனைக்கு 17-7-1996 முதல் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவை கடலை, துவரை, பாசிப்பயிறு அல்லது பச்சைப்பயிறு, மசூர் உளுந்து, மோத்து, கேசரி, மிளகாய், புளி, தனியா, மஞ்சள், பெருங்காயம், மிளகு, மற்றும் சிகைக்காய், வெல்லம், கருஞ்சீரகம் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. மணி அவர்கள் கயிறு உற்பத்தி செய்யும் குடிசைத் தொழிலுக்கு கயிற்றின் விற்பனை

வரியை முழுமையாக நீக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். ஆனால் கயிற்றின் மீதான விற்பனை வரி 17-7-1996 முதலே விலக்கப்பட்டுள்ளது என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தேங்காய், கொப்பரைக்கு முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று எஸ்.என். பாலசுப்பிரமணியன், டி. மணி, பி.ஆர். சுந்தரம் ஆகியோர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின்போது மாநிலத்திற்குள் விற்பனை செய்யப்படும் தேங்காய், கொப்பரை போன்றவற்றிற்கு வரி 4 சதவீதத்திலேயிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதுவும் போதாது என்று இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தேங்காய் மற்றும் கொப்பரை மீதான வரி 2 சதவீதத்திலேயிருந்து ஒரு சதவீதமாகக் குறைக்கப்பட்டது. நிதிநிலை அறிக்கை மீது நடந்த விவாதத்திற்கு இந்தச் சட்டமன்றத்திலே பதில் கொடுத்தபோது, வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படும் தேங்காய் மற்றும் கொப்பரைக்கும் 1 சதவீதம் வரி என்று அறிவிக்கப்பட்டது. எனவே, முழு வரி விலக்கு அளிக்க இப்போது இயலாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இதை ஏற்று வியாபாரிகள் மற்றும் வியாபாரிகளின் சங்கத்தினர் என்னைச் சந்தித்து மகிழ்ச்சி தெரிவித்து, நன்றி கூறியிருக்கின்றார்கள். எனவே அவர்களே முழு வரிவிலக்கு கோரவில்லை என்பதையும், திரு. சுந்தரம் போன்றவர்கள்தான் முழு வரிவிலக்கு கோருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவெல்லாம் ஒரு Parlimenterian-க்கு அழகு. ஒன்றைச் சொன்னால் அதைவிட இன்னொன்று கேட்க வேண்டும்; அதுதான் நல்ல, சரியான Parlimenterian என்று பொருள்.

பிற்பகல் 1-25

சர்.ஏ.டி. பன்னீர் செல்வத்தைப் பற்றி டாக்டர் கிருஷ்ணசாமி - இந்த கிருஷ்ணசாமி அல்ல ஏ.ஆர். முதலியாருடைய குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் கிருஷ்ணசாமி - Parlimenterian என்ற .ஒரு புத்தகம் எழுதினார், அதிலே அவர் குறிப்பிடுகிறார். ஏ.டி.பி யைப் பார்த்து, ஏ.டி. பன்னீர்செல்வத்தைப் பார்த்துக் கேட்டார்களாம், 'நீங்கள் நல்ல Parlimenterian என்று எல்லோரும் சொல்கிறார்களே, திடீரென்று ஒரு நாள் ஆளும் கட்சியிலேயிருந்து ஏழைகளுக்கெல்லாம் இலவசமாக வீடு கட்டித்தரப்படும் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்' என்று

கேட்டார்களாம். உடனே 'அது மாத்திரம் போதாது, வீட்டுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் சொல்வேன்' என்று பன்னீர்செல்வம் சொன்னாராம். இதுதான் நல்ல Parlimenterian-க்கு அழகு என்பார்கள். அதைப் போலவே நம்முடைய திரு. சுந்தரம் அவர்கள் இங்கே இவ்வளவு வரிவிலக்கு கொடுத்த பிறகும்கூட, நான்கை இரண்டாக்கி இரண்டை ஒன்றாக ஆக்கிய பிறகும் கூட அதையும் விலக்கிவிடு என்று குறிப்பிடுகிறார்கள். வியாபாரிகளே மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். திரு. சுந்தரம் கவலைப்படத் தேவையில்லை என்று நான் அவருக்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மசாலாப்பொடிக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியம் குறித்து திரு. ஞானசேகரன், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு. நா. பெரியசாமி, திரு. சுந்தரம், திரு. நிஜாமுதீன் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். வணிகச் சின்னம் அல்லாத மசாலாப்பொடிகள் மீதான விற்பனை வரி 16 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும், 16-லிருந்து 2-ஆக..

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: வணிகச் சின்னம் அல்லாத மசாலாப் பொடிகளுக்கு, சொல்லுங்கள்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு ஏற்கெனவே 8 சதவீதம்தான். வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிக்கு 16 சதவீதம். ஆனால், இப்போது கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் அதைப் பார்த்தேன். 16-லேயிருந்து 2 என்று போடப்பட்டிருக்கிறது. இதேமாதிரி, இந்த மசாலாப் பொடியிலே இன்னொரு confusion. சென்ற பட்ஜெட் உரையிலேகூட 11 சதவீதம் என்று இருந்தது. மசாலா என்றாலே பெரிய மசாலா வகைகளும் இருக்கின்றன. இதை இப்போது சொன்னதாலே சொல்கிறேன், வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடமுள்ள குறிப்பின்படி வணிகச் சின்னம் அல்லாத மசாலாப் பொடிகள் மீதான விற்பனை வரி - அது பதினாறா, பத்தா, அதுவல்ல, அது - 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிவகையைப் பொறுத்தவரையில் அதன் மீதுள்ள விற்பனை வரி

4 சதவீதமாகவும் 27-3-1998 முதல் வரிக் குறைப்பு அதற்குச் செய்யப்பட்டிருக்கிறது. 4 சதவீதமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. சின்னம் அல்லாதவைகளுக்கு 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

வனஸ்பதி மற்றும் சமையல் எண்ணெய்க்கு முழு வரிவிலக்கு அளிக்க திரு. ஞானசேகரன் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர் ரொம்ப நாளாகவே வனஸ்பதியைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார். நான் அன்றைக்கே சொல்கிறபோது அதில் கொழுப்பு சக்தி ரொம்ப அதிகம், அது வேண்டாம் என்று ஏற்கெனவே திரு. ஞானசேகரனுக்குச் சொன்னேன். (குறிக்கீடு) கொழுப்பு சக்தி இல்லையென்று சொன்னாலும், உருவாக்கிக்கொள்ள வேண்டாம் என்பதற்காக அது வேண்டாம் என்கிறேன்.

சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், பாமாயில எண்ணெய், பருத்தி விதை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட அரிசித் தவிட்டு எண்ணெய மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எல்லா சமையல் எண்ணெய்களுக்கும் 27-3-1998 முதல் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, வனஸ்பதிக்கு வரிவிலக்கு அளிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவிந்தன் அவர்கள் தமிழகத்து மாணவர்களுக்குத் தேவையான நோட்டு புத்தகங்களுக்கு விற்பனை வரியிலேயிருந்து விலக்கு அளிக்க வேண்டி வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். தமிழகத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்படும். மாணவர்களுக்குத் தேவையான நோட்டு புத்தகங்களுக்கு 5-3-1997 முதல் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்தச் சலுகை உள்மாநிலத்திலே வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்பட்டு வெளிமாநிலத்திலே விற்கப்படும் மாணவர்களுக்கான நோட்டு புத்தகங்களுக்கும் 27-3-1998 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் லாட்டரிச் சீட்டு விற்பனையிலே வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து திரு. ஐ. கணேசன், திரு. ஜி. கே. மணி, திரு. அப்துல் நாசர் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தமிழகத்தில் லாட்டரிச் சீட்டு வணிகர்கள் செய்யும் வரி ஏய்ப்பைத் தடுக்கும்பொருட்டு, வணிகவரித் துறையில் உள்ள செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் அவ்வப்போது திடீர் சோதனைகள் நடத்தி வரி ஏய்ப்பு தடுக்கப்பட்டு வருகிறது. அதேநேரத்தில், வரி ஏய்ப்பு நடவடிக்கைகளைக் குறைக்கும்பொருட்டு, லாட்டரிச் சீட்டு வணிகர்களை இணைக்க, இணைக்க முறையில், படித்தள வீதத்தில் வரி செலுத்த சட்டத்திலும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் 11 கோடியே 26 இலட்சம் ரூபாய் இந்தப் பரிசுச் சீட்டு மூலமாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த வருவாயை மேலும் பெருக்குவதற்கு, இந்தப் பரிசுச் சீட்டிலே ஒரு நவீனமான முறைகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்றும் இன்னும் இதற்காக பரிசுகளை அதிகப்படுத்த வேண்டுமென்றும், இன்னும் கவர்ச்சிகரமான அளவுக்கு இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய இந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கையிலும் ஏராளமான வரிச் சலுகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளையெல்லாம் நான் மீண்டும் உங்களுக்குச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நீங்களே நினைவுபடுத்திக்கொள்ள முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

தற்பொழுது வைக்கப்பட்டுள்ள சில கோரிக்கைகளைப் பற்றி மாத்திரம் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். வணிகச் சின்னம் (Brand Name) பெறாத வெண்ணெய் மற்றும் நெய் வகைகளுக்கு 4 விழுக்காடு வரியும், வணிகச் சின்னம் பெற்ற அந்தப் பொருட்களுக்கு 10 விழுக்காடு வரியும் உள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர். சொக்கர், திரு. வி. கே. லட்சுமணன், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் ஆகியோர் பதப்படுத்தப்படாத (Unpasteurised) வெண்ணெய்க்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றும், தற்போது பிஸ்கட்டுகளுக்கு உள்ளது போல, வணிகம் மற்றும் வணிகக் குறிகள் (Trade and Merchandise Marks Act) சட்டத்தின்கீழ், பதிவு பெறாத வணிகச் சின்னம் உள்ள நெய்க்கு

வரியை 4% ஆகக் குறைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் நா. பெரியசாமி பி. ஆர். சுந்தரம், வி.கே. லட்சுமணன் ஆகியோர் இதற்காக வெட்டுத் தீர்மானமே கொடுத்திருக்கிறார்கள். இவர்களது கோரிக்கையினை ஏற்று வணிகம் மற்றும் வணிகக் குறிகள் சட்டத்தின் (Trade and Merchandise Marks Act) கீழ் பதிவு பெறாத வணிகச் சின்னம் உள்ள வெண்ணெய் மற்றும் நெய்க்கு தற்போதுள்ள 10% வரியிலிருந்து 4% ஆக வரி குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இராஜபாளையம் சட்டமன்ற உறுபபினர் திரு. வி.பி. இராசன் அவர்கள், விருதுநகர் மாவட்டம், சத்திரப்பட்டியில் மருத்துவத் துணிகளான Gauze மற்றும் Bandage துணி வகைகள் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகின்றன; விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் Gauze மற்றும் Bandage துணி வகைகளுக்கு தற்பொழுது 8 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது; The Surgical Dressing Manufacturers Association இத்தொழிலை நம்பி சத்திரப்பட்டியில் 20 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன என்றும், Gauze மற்றும் Bandage துணி வகைகளுக்கு முழு விற்பனை வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளது. எனவே இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். இதை ஆதரித்து திரு. நா. பெரியசாமி வெட்டுத் தீர்மானமே கொடுத்துள்ளார். இக்கோரிக்கையைப் பரிசீலித்து, Gauze மற்றும் Bandage துணிகளுக்கு ஒட்டுமொத்தமாக வரி விலக்கு அளித்தால், அரசுக்கு அதிக அளவில் வருவாய் இழப்பு ஏற்படும். ஏனென்றால் பெரிய வியாபாரிகள் எல்லாம் இதிலே இருக்கிறார்கள். என்றாலும், சிறு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் விற்பனைத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 25 இலட்சத்துக்கு மிகாமல் உள்ள விசைத்தறி மூலம் Gauze மற்றும் Bandage துணிகளை உற்பத்தி செய்யும் சிறு உற்பத்தியாளர்களுக்கு முழு வரி விலக்கு அளித்து ஆணை பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிறகு வார்னிஷ். நம்முடைய திரு. கே. சுப்பராயன் அவர்கள் சொன்னது. Sivakasi Pictures Varnish Coaters Association தங்களது விண்ணப்பத்தில், தாங்கள் செய்யும் Pictures Varnish Coating தொழில் குடிசைத் தொழில் என்றும், Picture Varnish தயாரிப்பதற்கு

மூலப்பொருள் யாவும் உள் மாநிலத்தில் வரி செலுத்தி வாங்கப்படுகின்றன என்றும், எனவே ஒப்பந்தப் பணிகள் என்ற வகையில் வரி விதிப்பு செய்வது சரியில்லை என்றும் கூறி வரி விலக்குக் கோரியிருக்கின்றார்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்று, வரி விலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

இயந்திரத்தினால் செய்யப்பட்ட தீப்பெட்டிகளுக்கு 8 விழுக்காடு விற்பனை வரி உள்ளது. ஆனால் கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு வரி விலக்கு உள்ளது. உற்பத்தியில் ஒருசில பகுதிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மெழுகுத் தீப்பெட்டிகள், கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு சமமாகாது என்றும், அவை வரிவிலக்கு பெறத் தகுதி வாய்ந்தவைகள் அல்ல என்றும், 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் ஆணையிட்டுள்ளார். தற்போது தென்னிந்திய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம், இத்தகைய மெழுகுத் தீப்பெட்டிகளுக்கு முன்பு இருந்ததுபோல தொடர்ந்து வரிவிலக்கு அளிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் திரு. சொக்கர் அவர்களும் இதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று கடிதம் கொடுத்துள்ளார். இவர்களது கோரிக்கையை இந்த அரசு பரிசீலித்து, பகுதி இயந்திரத்தினாலும், பகுதி கையினாலும் செய்யப்படும் மெழுகுத் தீக்குச்சிகளுக்கும் முழு வரி விலக்கு அளிக்க முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. மணி அவர்கள் குடிசைத் தொழிலாகச் செய்யும் ரொட்டி மற்றும் பண்டங்களின் விற்பனை வரியை முழுமையாக நீக்கிட வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். 17-7-1996 முதல் ரொட்டிக்கு, குறைந்த வரியான 4 சதவீதம் விதிக்கப்பட்டிருந்தது. தற்போது 19-8-1997-ல் பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருள்களின் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறு தொழில்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் ரூபாய் 5 இலட்சம் மொத்தம் விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 4

இவ்வாறெல்லாம் நாம் எவ்வளவோ சிரமத்திற்கு இடையே சிலாது கோரிக்கைகளை ஏற்றும், சிலாது கோரிக்கைகளை ஏற்கமுடியாமலும் அதே நேரத்தில் சுலபமாக இந்த வரிகளை வசூலிக்கக்கூடிய வகையில், ஏழைகளுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமலும், ஏழைகளுக்குக் கூடுமான வரையில், நடுத்தர மக்களுக்குக் கூடுமான வரையில் வரி விலக்கு அளித்தும், வரியைக் குறைத்தும், அதே நேரத்தில் தாங்கக்கூடியவர்களுக்கு வரியை விதித்தும் இந்த அரசு தன்னுடைய வருமானத்தை, வருவாயைப் பெருக்கிக் கொண்டு இருக்கிற அதே சூழ்நிலையில்—அன்றைக்குக்கூட சில உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்த வரியை வசூலிப்பதில் நாம் கண்டிப்பாக இருக்க வேண்டும்; இதிலே தீவிரமான முயற்சிகள் வேண்டும்; திறமையாகச் செயல்பட வேண்டுமென்று எல்லாம் சொன்னார்கள். நான் அன்றைக்குச் சொன்னதை மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன். இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற வெளிநாட்டு மது 1986-ஆம் ஆண்டிலிருந்து, அந்த அதிபர்கள் 1989-ஆம் ஆண்டு முடிய செலுத்த வேண்டிய ஆயத் தீர்வை மீதான வரி 57.46 கோடி ரூபாய். அவர்கள் செலுத்த வேண்டிய ஆயத் தீர்வை மீதான விற்பனை வரிதான் இந்த 57 கோடி ரூபாய். இந்த வரியை வசூலிக்க 1989-இலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, அவர்கள் அந்த நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக அமைந்தது. எனவே அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு, தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்து அங்கும் சென்றார்கள். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றதே தவிர இடைக்காலத் தடையாணை விதிக்கப்படவில்லை. இடைக்காலத் தடையாணை இல்லையென்றால் அந்த வரியை வசூலித்து இருக்கலாம். வரி வசூலிக்கப்படவில்லை. இதற்கிடையிலே அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. இப்போதும் அவர்களுக்கு ஏதுவாகத்தானே, இதையெல்லாம் செய்வதற்காகத்தானே ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்கிறார்கள். அதைப்போல அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அப்போது கலைக்கப்பட்டது. அப்படி கலைக்கப்பட்ட பிறகு கவர்னருடைய ஆட்சி வந்தது. அந்தக் கவர்னர் பீஷ்ம நாராயண் சிங் கவர்னராக வந்தவுடன் இந்தக் கோப்பு அவர்களுக்கு வந்தவுடன் அவர்கள் சொன்னார்கள். தடையாணைதான் இல்லையே, வசூலிக்கலாமே என்று அவர் கருதிப்பார்க்காமல், இதுகுறித்து உச்ச

1998 மே 4] [கலைஞர் மு. கருணாநிதி]

நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. ஆகவே வசூலிக்க வேண்டாமென்று அவருடைய கருத்தை அதிலே, அந்தக் கோப்பிலே அவர் பதிய வைத்தார். கவர்னர் ஆட்சிக்குப் பிறகு 1991-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலே ஆட்சி அமைந்தது. அந்த ஆட்சி அமைந்த பிறகு கவர்னர் இடத்திலே இருந்த அந்த ஃபைல்—அந்தக் கோப்பு சுற்றி வந்து நிதியமைச்சருக்கு வந்தது. நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அந்தக் கோப்பிலே 31-7-1991-ல் கையெழுத்திடுகிறார். இப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று நிதியமைச்சர் அவர் ஒன்றும் கருத்துச் சொல்லவில்லை. அவர் ஒன்றும் கருத்துச் சொல்ல முடியாது. அவரெல்லாம் எப்படிக் கருத்துச் சொல்ல முடியும்? நிதியமைச்சர் கருத்துச் சொல்ல முடியுமா? எனவே, நிதியமைச்சர் ஒன்றும் கருத்து சொல்லாமல் கையெழுத்துப் போடுகிறார். கையெழுத்துப் போட்டு அதை முதலமைச்சருக்கு அனுப்புகிறார். 31-7-1991-ல் நாவலர் நெடுஞ்செழியன், நிதியமைச்சர் கையெழுத்திட்டு முதலமைச்சருக்குக் கோப்பினை அனுப்பி வைக்கிறார். முதலமைச்சர் அந்தக் கோப்பைப் பார்த்துவிட்டு, ஒரு வருஷம், நான்கு மாதங்கள், பத்தொன்பது நாட்கள் கழித்து அதிலே கையெழுத்து இடுகிறார். என்ன கையெழுத்து, 'இவ்வளவு நாட்கள் ஏன் தாமதம், உடனே வசூல் செய்' என்றா? இல்லை. வெறும் கையெழுத்து. நிதியமைச்சர் என்ன கையெழுத்து இட்டாரோ, அதே கையெழுத்தை அவரும் இட்டார். எதற்கு நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருக்கிறார்? 'இப்போது வசூலிக்க வேண்டாம், வழக்கு முடியட்டும்' என்று எழுதியிருக்கிறாரே கவர்னர், அதை ஏற்றுக் கொண்டுதான் நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருப்பதாகப் பொருள். அதையே திரும்பவும் முதலமைச்சரும் ஏற்றுக் கொண்டு, அவரும் கையெழுத்திடுகிறார். எனவே, அது வசூலிக்கப்படவேயில்லை.

பிற்பகல் 1-40

நம்முடைய ஆட்சி 1996-ஆம் ஆண்டு வந்தவுடன், அந்தக் கோப்பை எங்கெங்கோ சுற்றி, தேடிப் பார்த்து, கடைசியாக அதைப் பார்த்தபோது, இந்த வரியை வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டது. வரி வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டதும், இந்த 57 கோடி ரூபாயைச் செலுத்த வேண்டியவர்கள் நம்மைச் சந்தித்து, தவணை முறையிலே கட்டுகிறோம் என்றோ அல்லது இரண்டு ஆண்டு காலம் நேரம், தவணை கொடுங்கள் என்றோ யாரும் கேட்கவில்லை. இதற்கிடையிலே

உச்சநீதிமன்றத்தினுடைய ஆணையும் வந்துவிட்டது. இந்த வரியைக் கட்டத்தான் வேண்டுமென்று. உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. இதில் நாம் கவனமாகப் பார்க்க வேண்டும். உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. உடனடியாகக் கட்டவேண்டுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் போனதும், City civil court-க்குப்போய் ஸ்டே வாங்கிவிட்டார்கள். உச்சநீதிமன்றத்தினுடைய ஆணைக்கு City civil court-ல் ஸ்டே கொடுக்கப்பட்டுவிட்டது. வழக்கை நடத்துங்கள்; தீவிரமாக நடத்துங்கள் என்று சொன்னேன். நடத்தப்பட்டது. கடந்த 30-ஆம் தேதியன்று தீர்ப்பு. தீர்ப்பு வரும் என்று எதிர்பார்த்து. உட்கார்ந்திருந்தால், நீதிபதி சொல்லிவிட்டார்; மறு ஆய்வு மறுபடியும் செய்யப்போகிறேன்; மறுவிசாரணை நடத்தப் போகிறேன் என்று சொல்லி விட்டார். City civil court நீதிபதி மறுவிசாரணை நடத்தப்போகிறேன் என்று, 'கம்ப்ளீட்டாக எல்லாவற்றையும் Re-open பண்ணப் போகிறேன் என்று சொல்லி, மீண்டும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். தடையாணையை நீக்கி அந்தத் தொகையை விரைவிலே வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் துறைக்கு ஆணையிட்டதோடு, City civil court-இனுடைய தடையாணையை நீக்க உயர்நீதிமன்றத்திற்குச் செல்லுமாறு ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை.யைத் தட்டும் ஒலி) இப்படி ஒரு நிலைமை. யாரும் எதையும் சாதிக்க முடிகிறது இன்றைக்கு நாட்டில். நான் எந்தத் துறையையும் குறை கூறவில்லை. ஆனால், 57 கோடி ரூபாய் அரசுக்கு வந்து சேர்ந்தால், எத்தனை நல்ல காரியங்களை, எத்தனை ஏழை எளியவர்களுக்கு அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன்.

இதற்கு அடுத்து, மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி யாரும் அதிகம் பேசவில்லை. காரணம், மாவட்ட நிர்வாகம் நன்றாக இருக்கும்போது எதற்காகப் பேசவேண்டும் என்று, பேசாமல் விட்டுவிட்டவர்கள் என்றே கருதுகின்றேன், மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், இப்போது மிக முக்கியமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கான கட்டடங்கள் கட்டுகின்ற அந்தப் பணிதான் இப்போது மிக முக்கியமாக இருக்கின்றது. ஏற்கெனவே இருந்த அரசால், நான்கைந்து புதிய மாவட்டங்கள் அன்றைக்கு உருவாக்கப்பட்டன என்றாலும்கூட, அதிலே எந்த

மாவட்டத்திலும் கட்டடமே கட்டப்படவில்லை. தூத்துக்குடிக்கு கட்டடம் கட்டப்படவில்லை. திருவண்ணாமலையில் கட்டுவதற்கு முயன்று, அதிலே ஒரு தகராறு ஏற்பட்டு நின்றுவிட்டது. விழுப்புரத்தில் கட்ட ஆரம்பித்து இப்போது நாம் தான் அதை முடித்திருக்கிறோம். இந்த மாதம் அதனுடைய திறப்பு விழா நடைபெற இருக்கிறது. நாமே அறிவித்து, நாமேதான் கட்டி முடித்திருக்கிறோம். மற்றும் ஒரு நான்கு மாவட்டங்களில் இடங்கள் பார்க்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் கட்டடங்கள் கட்டப்பட இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் புதிதாக இப்பொழுது பலபேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சிலர் மாற்றப்பட்டிருக்கிறார்கள்; புதிதாக வந்தவர்கள், ஏற்கெனவே இருப்பவர்கள் எல்லோரும், நம்முடைய அரசின் திட்டங்களை, இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் சொல்லியிருக்கின்ற திட்டங்களை எல்லாம் நடைமுறைப்படுத்துவதற்குத் தக்க அறிவுரைகளைப் பெறுவதற்கும், அவர்களுடைய கருத்துக்களை அரசு பெறுவதற்கும் ஏற்றவகையில் ஜூன் மாதத்திலே முதல் வாரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாடு, போலீஸ் அதிகாரிகளுடைய மாநாடு நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டில், நிதிநிலை அறிக்கையிலே, 1996-97, 1997-98, 1998-99 இவைகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எவையெவை எஞ்சியிருக்கின்றனவோ, அவற்றை நிறைவேற்றவும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற திட்டங்களை நிறைவேற்றவும், மக்களுடைய அடிப்படை வசதிகளையெல்லாம் செய்து கொடுப்பது இந்த அரசினுடைய முக்கியமான குறிக்கோள் என்ற அந்தக் குறிக்கோளை நோக்கிப் பயணம் நடத்தவும் அந்த மாநாடு மெத்தவும் பயன்படும் என்று நான் கருதுகின்றேன். எனவே, இந்த மாவட்ட நிர்வாகம் மற்றும் வணிகவரித் துறை நிர்வாகம் இவை பற்றியெல்லாம் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், அவற்றைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லா

விஷயங்களுக்கும் நல்ல முறையிலே பதில் அளித்து விட்டார்கள். நாங்கள் எல்லோரும் பெருமைப்பட்டுக் கொண்டோம். தேங்காய்க்கு ஒரு சதவிகிதம் வரிவிலக்கு என்று கூறியதையும் நாங்கள் பெருமகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், அந்தத் தேங்காயிலிருந்து பெறும் தேங்காய்த் துருவல் இருக்கிறதே, அந்தத் தேங்காய்த் துருவலிலிருந்து பால் உற்பத்தி செய்கிறார்களே—யாரோ ஒன்றிரண்டு பேர்தான் அவ்வாறு இருக்கிறார்கள்—அந்தத் தேங்காய்ப் பாலுக்கு 11 சதவிகிதம் வரி விதித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். எனவே தயவுசெய்து அதையும் இரத்து செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என் கவனத்திற்கு வரவில்லை. அது கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் குறித்து ஒரு Clarification ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், தலைமைச் செயலாளருக்கு இணையாகக் கருதப்பட வேண்டும் என்று Protocol இருக்கிறது. ஆனால், மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் சுழல் விளக்கு இலச்சினை போட்டு காரிலே பவனி செல்வதற்கு இந்த அரசாங்கம் அனுமதித்து இருக்கிறது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதுபோன்ற இலச்சினை. அதுபோன்ற கோபுர சீல் அல்லது சுழல் விளக்கோ இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் காரைத் தந்து, சுழல் விளக்கையும் தந்து, கோபுர இலச்சினையையும் தர ஆணையிடுவார்களா, மாவட்ட. பஞ்சாயத்துத் தலைவர்களைப் போல என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுழல் சிவப்பு விளக்குகளை, மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு அரசு அனுமதிக்கவில்லை. அவர்களாகவே, அந்த விளக்குகளைப் பொருத்தியிருப்பதாகத் தெரிகிறது. இருக்கிற சிவப்பு விளக்குகளையே குறைக்க வேண்டும் என்று நினைக்கின்ற நேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் நிறைய சிவப்பு விளக்கு வேண்டுமென்று கோருவது முறையல்ல. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அதிகமாக உற்பத்தியாகிற ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசிக்கு விதிக்கப்பட்ட கூடுதல் விற்பனை வரியைப் பற்றி நான் பேசியிருந்தேன். அதாவது 200 கோடி ரூபாய்க்கு அதிகமாக அந்த ஸ்தாபனங்களில் வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது. அதிலே Additional tax என்று போடுகிற காரணத்தினால், வியாபாரம் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் பிரச்சினையே கேள்விக்குறியாகி இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அந்த நிர்வாகிகளை வேண்டுமென்றால், மீண்டும் கூப்பிட்டுப் பேசி, அதற்கு முடிவு ஏற்படுத்த வேண்டுமென்று கூறி, அவர்களின் சார்பாகக் கொடுத்த இந்த மகஜரையும் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

தி சிலை லரு. சோ. பாலகிருஷ்ணன்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதப்படுத்தாத வெண்ணெய்க்கு வரிவிலக்கு உண்டு என்பதைப்போல முதலமைச்சர் அவர்கள் தொடங்கி, பிறகு அது தெளிவாக இல்லை. ஆகவே, பதப்படுத்தாத வெண்ணெய்க்கு வரிவிலக்கு அளித்து விட்டீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Un-pasteurised Butter-ஐப் பற்றி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு விளக்கம் சொல்கிறீர்களா? எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் கேட்டிருக்கிறார்களே?

திரு. ஆர். சொக்கர்: குழப்பமாக இருக்கிறது அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாருக்குக் குழப்பம்? யாருக்கும் யாருக்கும் குழப்பம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே? எதிர்க்கட்சித் தலைவர் பேசி, அதற்கு முதலமைச்சர் பதில் சொல்வதற்கு முன்னால் நீங்கள் எழுந்திருந்து யாருக்கு பதில் சொல்கிறீர்கள் என்று தெரியவில்லை.

திரு. ஆர். சொக்கர்: பதில் சொல்வதற்கு நான் எழுந்திருக்கவில்லை, பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கொண்டு அதையொட்டிய கருத்துதான்.

வெண்ணெய், அமுல், 'நெஸ்லே', நீல்கிரிஸ் போன்ற பெரிய பெரிய நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு **Pasteurised butter** என்று 'பேக்' செய்து விற்கிறார்கள். அதிலே இருந்து வருமானம் அரசாங்கத்திற்குக் கூடுதலாக வருகிறது. அதற்கு ஏற்கெனவே 10 சதவீதம் வரி அதைக் குறைக்க வேண்டாம். ஏனென்றால், வருமானம் குறைந்துபோகும். ஒவ்வொரு வீட்டிலும் மாடுகள் வளர்க்கிறார்கள்; 20 இலட்சம் பேர் மாடுகள் வளர்க்கிறார்கள் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அவர்கள் தயிரைக் கடைந்து, வெண்ணெய் எடுத்து, ஒவ்வொரு இடத்திலேயும் போய் விற்கிறார்கள். அதிலே குழப்பம் இருக்கிறது. அதிலே வருமானம் மிகவும் குறைவு. இது **Un-Pasteurised butter.** ஆகவே, கோரிக்கை என்ன இருந்தது என்றால், **Un-Pasteurised butter** -க்கு நீங்கள் வரிவிலக்கு கொடுக்க பரிசீலிக்க முடியுமா என்றுதான் எல்லோரும் கேட்டிருந்தோம். ஆனால் முதல்வர் அவர்கள் பதிலுரையிலே என்ன சொல்லிவிட்டார் என்றால் முன்னால் 4 சதவிகிதம் இருந்தது. அது மறுபடியும் 4 சதவிகிதம் என்று சொல்லிவிட்டார். நெய்க்கு குறைக்க வேண்டாம் அது **T.M.M. Act**-ல் சொன்னபடி அது அப்படியே இருக்கட்டும். ஆனால் **Unpasteurised butter**-க்கு வரிவிலக்கு அளிப்பது மிக மிகப் பொருத்தமாகவும், நியாயமாகவும் இருக்கும். அதனால் பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய விவசாயப் பெருங்குடிமக்கள், வீட்டில் மாடு வைத்து வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் பயன்பெறுவார்கள். அவர்கள் உங்களை வாழ்த்துவார்கள். ஆகவே அதற்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதுபற்றி துறை அதிகாரிகளோடு நேற்றையதினம் நீண்டநேரம் நான் விவாதித்திருக்கிறேன். அந்த விவாதத்திற்குப் பிறகுதான் இந்த முடிவு, இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு வணிகம் மற்றும் வணிகக்குறிகள் சட்டத்தில்—**Trade and Merchandise Marks Act**— பதிவுபெறாத வணிகச் சின்னமுள்ள வெண்ணெய், மற்றும் நெய்க்கு தற்போதுள்ள 10 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரி குறைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறேன். மேலும் இதைப் பற்றிக் கோரிக்கை எழுப்புகின்ற காரணத்தினால் இதைபற்றி மேலும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இதோடு அவை முடியவில்லை. அவையும் முடியவில்லை. ஆட்சியும்

முடியவில்லை. இரண்டும் தொடரும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, **Appropriation Bill** வரும்போது, நிதியொதுக்க மசோதா வரும்போது சொச்சத்தைப் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

219093

திரு. டி. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம். திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 100,86,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஆ) மானியக் கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 9, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

திரு. பி. வெங்கடசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வெங்கடசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 152,76,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(இ) மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11, மாவட்ட நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு.* சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு.கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

திரு. டி. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

திரு. பி. வெங்கடசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வெங்கடசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 458,80,04,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1998). மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1998)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

@30-4-1998 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1998) நிறைவேற்றப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-55

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, 1998-ஆம் ஆண்டு, மே திங்கள், 5-ஆம் தேதி காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

—ஏதுமில்லை—

இணைப்பு-I

[78-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

மானியக் கோரிக்கை எண் 4

பொதுவிற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு-1998-99

தோற்றுவாய்

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை

திருக்குறள்.

தமிழக மக்களின் வளம் மிக்க எதிர்காலத்தை உருவாக்கும் நல்ல திட்டங்களைச் செயல்படுத்த தேவையான வருவாயை ஈட்டித் தருவதில் பெரும் பங்கு வகிப்பது வணிக வரித்துறையாகும். அனைத்து மக்களும் வாங்கும் பொருள் மீது வரிவிதிப்பது 1939-இல் தொடங்கப்பட்டது. படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு அரசின் வருவாயில் 70 விழுக்காடு அளவிற்கு இந்த வருவாய் ஆதாரம் பயன்படுத்தப்படுகிறது. பரவலாக ஏழை எளிய மக்களுக்கு பாதிப்பின்றியும், உற்பத்திக்கும் தொழில் வளர்ச்சிக்கும் தடையாக அமையாது, ஊக்கமளிக்கும் வகையிலும் நியாயமாக வரி செலுத்துவோருக்கு சுமுகமான முறையிலும் இப்பணியைச் செம்மையாகச் செய்வதில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

இத்துறை பின் வரும் வரிச் சட்டங்களைச் செயல்படுத்துகின்றது:-

(அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(ஆ) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(இ) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(ஈ) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(உ) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம்.

[1998 மே 4

(ஊ) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(எ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

(ஏ) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.

(ஐ) தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம்.

II. நீண்டகால வரி விதிப்புக் கொள்கை

(1) தமிழகத்தில் அனைத்து மட்டத்திலிருக்கும் மக்கள் நிலையைக் கருதி, வரிச்சுமையை தாங்க இயலும் சக்தியைக் கணக்கில் கொண்டு வரி விதிப்பது அரசின் முக்கிய கொள்கையாகும். ஏழை, எளியவர்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருள்களின் விலை, வரி விதிப்பினால் உயராமல் இருக்கும் வகையில் அரசு வரி விதிப்புக் கொள்கையை வகுக்கின்றது. உற்பத்தியையும் வேலை வாய்ப்பையும் பெருக்கும் தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அமைத்தால்தான் நீண்ட காலத்தில் மக்கள் வாழ்க்கை முன்னேற்றமடைவதுடன் வரி வருவாயும் பெருகும். இதனைக் கருத்தில் கொண்டு இந்த அரசு தனது நீண்டகால வரி விதிப்புக் கொள்கையை 1996-97 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வெளியிட்டது.

(2) பொது மக்கள், தொழில்துறை, வணிக சமுதாயம் ஆகிய அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் பெருத்த வரவேற்பைப் பெற்ற இக்கொள்கையின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

(அ) வரி வீதங்களைப் பெருமளவு வெளிப்படையானதாகச் செய்வதற்கும், வரிவிதிப்பு மற்றும் வரி வசூலை எளிமையானதாகச் செய்வதற்கும், வரி வீத அமைப்பையும், படி முறைகளையும் சீரமைத்தல்.

(ஆ) வரி விதிப்பில் மிகவும் நவீனமுறைகளையும், நவீன நடைமுறைகளையும் கொண்டு வருதல்.

(இ) இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்க மளிக்க வகை செய்தல் மற்றும் உள்ளூர் கொள்முதல் மற்றும் உள்ளூர் தயாரிப்பை ஊக்கப்படுத்துதல்.

1998 மே 4]

(ஈ) வரி விலக்கு, இணக்க வரி மற்றும் சுயவரி மதிப்பு போன்ற வரிவிதிப்பு நடைமுறைகள் என்ற வகையில் பெரும் எண்ணிக்கையிலான சிறு வணிகர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

(உ) அன்றாடம் பயன்படுத்தும் வீட்டுத் தேவைப் பொருட்கள் மீதான வரியைக் குறைத்தல்.

(3) நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையை சிறப்பாகச் செயல்படுத்துவதில் நாட்டம் கொண்ட அரசு, விற்பனை வரி அமைப்பு, விதிகள், செயல்முறைகள், ஆகியவற்றை ஆராய்ந்து அரசுக்கு உரிய பரிந்துரைகளை அளிக்க, திரு. சி. தங்கராசு, இ.ஆ.ப. (ஓய்வு பெற்றவர்) தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. குழுவின் ஆலோசனைகளை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுத்துள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த பல பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

(4) வருவாய் பெருக்கத்திற்கு வகை செய்யும் நேரத்திலும் அரசின் நீண்டகாலக் கொள்கையை கவனத்தில் கொள்வதற்காக நிதிச் செயலர் தலைமையில் இவ்வாண்டு வரி சீரமைப்புக் குழு அமைக்கப்பட்டது.

அதன் அறிக்கையின் அடிப்படையில், இவ்வாண்டிலும் சீரமைப்பு நடவடிக்கைகள் தொடரப்பட்டன.

III. 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு மாற்றங்கள்.

(i) வகுக்கப்பட்ட நீண்டகால வரிவிதிப்பு கொள்கையின் அடிப்படையில் அரசு தொடர்ந்து பல வரி சீரமைப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சென்ற ஆண்டு (1997-98) வரவு-செலவு திட்டத்தின் போது பின்வரும் சிறப்பு மாற்றங்கள் செய்யப்பட்டன.

(அ) மக்கள் நலன் தொடர்பானவை:

(1) தேங்காய் மற்றும் கொப்பரை 4-லிருந்து 2 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(2) யூரியாவிற்கு 4-லிருந்து 2 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

[1998 மே 4

(3) பித்தளை, செம்பு மற்றும் எவர்சில்வர் ஆகியவற்றிலான வீட்டுப் பாத்திரங்களுக்கு 8-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(4) வணிகப் பெயர் குறிப்பிடப்படாத காலணிகளுக்கு 8-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(5) வணிகப் பெயருடன் கூடிய வெண்ணெய், நெய்க்கு 11-லிருந்து 10 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(6) கொசுவத்திச் சுருள், கொசுவத்தி மருந்து, கொசுவிரட்டி ஆகியவைகளுக்கு 16-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(7) மாணவர்கள் வண்ணம் தீட்டுவதற்குப் பயன்படுத்தும் எழுதுபொருள் இனங்களுக்கு 11-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(8) காகிதத்தினாலான பைகளுக்கு 11-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(9) குடைகளுக்கு 11-லிருந்து 8 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(10) சூட்கேஸ்களுக்கு 11-லிருந்து 10 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(11) மேசை மற்றும் நாற்காலி போன்ற அறைக் கலன்களுக்கு 11-லிருந்து 10 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(12) சுவையூட்டப்பட்ட பாலுக்கு 8-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(13) கல்வி நிறுவனங்களுக்கு விற்கப்படும் அறிவியல் சாதனங்களுக்கு 8-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(14) தலைக் கவசங்களுக்கு 11-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(15) நிலக்கரி தூள் கலந்த சாண வரட்டிக்கு 11-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(16) மூக்குக் கண்ணாடி வில்லைகளுக்கு 20-லிருந்து 8 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

1998 மே 4]

(17) கண்ணாடியிலான சிறு மணி மற்றும் கோலி குண்டுக்கு 16-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(18) சரளைக் கற்களுக்கு 11-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(19) பொம்மைகளுக்கு 11-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(20) வறுத்த நிலக்கடலைப் பருப்புக்கு 11-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(21) தெளிப்புமுறை சொட்டு நீர் பாசனச் சாதனங்களுக்கு 11-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(22) 11 விழுக்காடு வரி விதிக்கப்பட்டு வந்த மீன் உணவு, தேங்காய் ஓடுகளும் துண்டுகளும், நிலக்கடலை ஓடுகள், சீகைக்காய்த்தூள், தயிர், பஞ்சாமிர்தம், கல்விக்கான விளக்கப்படங்கள், சுற்றுலா வழிகாட்டி மற்றும் வரைபடங்கள், பளுவான பெரிய சம்மட்டி மற்றும் பழைய வெள்ளி மெட்டி, கொலுசு மற்றும் அரைஞாண் ஆகிய பொருட்களுக்கு முழுமையாக வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

(23) உள்மாநிலத்தில் பதிவு பெற்ற வணிகர்களிடமிருந்து வாங்கப்பட்ட தாள்களிலிருந்து தயாரிக்கப்பட்ட மாணவர்களின் நோட்டுப் புத்தகங்கள் மற்றும் காப்பி புத்தகங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

(24) கால்நடைத் தீவனம், தொன்னை, சாம்பிராணி, இயலாதவர்களுக்கான மிதி வண்டி, செங்கற்கள், ஓடுகள் செய்வதற்கான களிமண், சென்னா இலைகள், விதை ஓடுகள், நிலவாகைச் செடியின் இலைகள் மரவள்ளிக் கிழங்கு, கப்பி, திப்பி ஆகியவைகளுக்கு இருந்த 4 விழுக்காடு வரி முழுமையாக நீக்கப்பட்டது.

ஆ. தொழிற்துறைத் தொடர்பானவை:

(1) மின் அணு பாகங்கள் மற்றும் துணை பாகங்களுக்கு 11-லிருந்து 2 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(2) தமிழ் தட்டச்சுப் பொறிகளுக்கு 20-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

[1998 மே 4

(3) துட்டச்சுப் பொறிகளுக்கு 20-லிருந்து 8 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(4) கைவினைப் பொருட்களுக்கு 11-லிருந்து 8 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(5) 27 அடிசரக்கினங்களுக்கு 11-லிருந்து 8 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(6) தார்ப்பாய்களுக்கு 11-லிருந்து 8 விழுக்காடாக வரிகுறைக்கப்பட்டது.

(7) ஆயில் இன்ஜின் பாகங்களுக்கு 11-லிருந்து 10 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(8) சரிகைக்கு 8-லிருந்து 2 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(9) செயற்கை நூல் மற்றும் இழைக்கு 8-லிருந்து 2 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(10) கழிவுத் தாள்களுக்கு 8-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(11) தையல் மற்றும் பூத்தையல் இயந்திரங்கள், பாகங்கள், அதன் ஊசிகளுக்கு 8-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(12) பருத்திக்கு 4-லிருந்து 2 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது.

(13) மூங்கினால் செய்யப்பட்ட தட்டி, முறம், கூடைகள் ஆகியவைகள், புற்றுநோய், தொழுநோய், காசநோய் ஆகிய நோய்களின் சிகிச்சைக்கான உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் நாட்டு மருந்துகள் ஆகியவற்றின் 39 இனங்கள்; சூரிய ஒளி மின் கலன்கள், ரூ. 50-க்கு குறைவான விலையுள்ள காலணிகள் ஆகிய பொருட்களுக்கு இருந்த 8 விழுக்காடு முழுமையாக நீக்கப்பட்டது.

(14) பின்னல் ஆடைகளுக்கு 4 விழுக்காட்டிலிருந்து முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

(இ) வணிக சமுதாயம் தொடர்பானவை:

கனிமங்கள் உலோகங்கள் வர்த்தகக் கழகம் மற்றும் தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்பனை செய்கின்ற தங்கத்திற்கு விதிக்கப்பட்ட

1998 மே 4]

2 விழுக்காடு விற்பனை வரி முழுமையாக நீக்கப்பட்டது. மேலும், மாதாந்திர விகிதங்களின் அடிப்படையில் படித்தரமுறையில் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளுக்கு விற்பனை வரி நிர்ணயிக்கப்பட்டது.

(ii) இவ்வரசால் இவ்வாண்டு (1998-99) வெளியிடப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் வேறு சில சிறப்பு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:-

(அ) மக்கள் நலன் தொடர்பானவை :

(1) பேக்கரியில் தயாரிக்கப்படும் வணிக சின்னம் இல்லாத உணவுப் பொருட்களின் மீதான வரி 8-லிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

(2) வீடுகள் கட்டுவதற்கு பயன்படுத்தப்படும் சிமெண்டினால் தயாரிக்கப்பட்ட உள்ளீடற்ற கற்கள் (Hallow Block) மீதான வரி 16-லிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்கள் சிக்கனத்திற்கும் செலவைக் குறைப்பதற்கும் இது வழி வகுக்கும்.

(3) துணிகளின் சலவைக்குப் பயன்படுத்த, கையினால் தயாரிக்கப்படும் அல்ட்ராமெரின் புளு, ராபின் புளு சலவை வெளுப்பான் நீலத்திற்கு 16-லிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்படுகிறது.

(4) தேங்காய் மற்றும் கொப்பரைக்கு விதிக்கப்படும் வரி 2-லிருந்து 1 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. இச்சலுகை உள்மாநில விற்பனை மற்றும் வெளிமாநில விற்பனைக்கும் பொருந்தும்.

(5) குடும்பங்களில் சமையலுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் வணிக சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கான வரி 16-லிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(6) வணிகச் சின்னம் இடப்பட்ட பிற மசாலாப்பொடிகளுக்கு 16-லிருந்து 4 விழுக்காடாகவும் வரி குறைக்கப்படுகிறது.

(7) வணிக சின்னம் இடப்பட்ட ஐஸ்கிரீமிற்கான வரி 16-லிருந்து 11 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(8) பட்டாணி மாவு, தோல், குருணை போன்றவற்றிற்குத் தற்போதுள்ள 11 விழுக்காடு வரியைக் குறைத்து ஏனைய இனங்களைப் போன்று 4 விழுக்காடாக வரி நிர்ணயிக்கப்படுகிறது.

(9) சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், பாமாலின் எண்ணெய், பருத்திக் கொட்டை எண்ணெய் மற்றும் அரிசி தவிடு எண்ணெய் அனைத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

(10) இந்த அரசு மீண்டும் கண்ணொளி திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்துள்ள இந்த நேரத்தில் விழியினிடையே பொருத்தப்படும் ஆடிக்கு (Intra-Ocular Lense) வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

(11) மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படும் காசினிக் கீரைப் பொடிக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

(12) மாணவர்களால் பயன்படுத்தப்படும் நோட்டுப் புத்தகங்களுக்குச் சென்ற ஆண்டு உள் மாநில விற்பனைக்கு அளித்த சலுகையினால் ஏற்கனவே இருந்த வெளி மாநில விற்பனைச் சலுகை தடைப்பட்டுள்ளது என முறையீடுகள் வரப்பெற்றுள்ளன. தமிழகத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்திலிருந்து தயாரிக்கப்படும் நோட்டுப் புத்தகங்களுக்கு மாநிலங்கள் இடையேயான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

(13) எண்ணெய் எடுக்கப்பட்ட அரிசி தவிட்டிற்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

(ஆ) தொழில் துறைத் தொடர்பானவை :

(1) தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் விரைவாக முன்னேறி வருகிறது. கணினி மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் பல தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வந்துள்ள இந்த நேரத்தில் கணினி மென்பொறிகளுக்கு முழு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

(2) இயற்கை ரப்பரை பயன்படுத்தும் தொழிற்சாலைகள் அப்பொருளின் மீதான கொள்முதல் வரிக்கு விற்பனை வரிச் சட்டப்பிரிவு 3 (3)-ன் கீழ் சலுகை அளிக்கக் கோரியுள்ளன. வணிகர்களாக அல்லாத தோட்டப்பயிர் சாகுபடியாளர்கள் விற்பதால்

இச்சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சலுகை வரி விகிதமான 3 விழுக்காட்டிற்கு மேல் கூடுதலாக செலுத்தும் வரியை தொழிற்சாலைகள் கட்ட வேண்டிய இறுதி விற்பனைப் பொருள் மீதான வரியிலிருந்து குறைத்துக் கொள்ளும் முறை வகுக்கப்படும். விற்பனை வரிச் சட்டத்தின் 3 (3) ஆம் பிரிவின் நிபந்தனைகள் இதற்குப் பொருந்தும்.

(இ) வணிக சமுதாயம் தொடர்பானவை :

(1) சென்ற இரு ஆண்டுகளில் வரிவிதிப்பு முறைகளில் பல சீரமைப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. நாணயமாக வரி செலுத்துவோருக்கு நடைமுறைகளை எளிதாக்கி வரிவிதிப்பு அமைப்பின் கடுமையைக் குறைத்துள்ளது. இதன் ஒரு தொடர் நடவடிக்கையாக ரூ. 10 இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூ. 20 இலட்சத்திற்கு உட்பட்டும் மொத்த விற்பனை தொகை உடைய வியாபாரிகள் பதிவு பெற்ற பட்டயக் கணக்கர் (Chartered Accountant) தணிக்கை செய்ததின் அடிப்படையில் கணக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும். இதில் 10 விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினால் ஆய்வு செய்யப்படும்.

(2) வணிகராகப் பதிவு செய்ய தற்போதுள்ள மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு ரூ. 75,000-த்திலிருந்து ரூ. 1,50,000 ஆக உயர்த்தப்படுகிறது.

(3) இவற்றின் தொடர்ச்சியாக 1998-99 ஆம் ஆண்டு வரவு- செலவு திட்டத்தில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

(அ) தொழில் துறை தொடர்பானவை:

(1) சென்ற ஆண்டு செயற்கை இழை நூலுக்கும் மற்றும் செயற்கை இழைகளுக்கும் (Manmade staple fibre, fibre yarn, etc) விற்பனை வரி 8-லிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது. இவ்வாண்டு அச்சலுகையினை நீக்க அரசு கருதியது. ஆனால், தொழிற்துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க இச்சலுகை மேலும் ஒரு ஆண்டிற்கு நீட்டிக்கப்படுகிறது.

(2) தமிழ்நாட்டில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் பதிவு பெற்ற 100% ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கும் சென்னை ஏற்றுமதி உற்பத்தி மண்டலத்திலிருக்கும் நிறுவனங்களுக்கும் உள் மாநிலத்தில்

கொள்முதல் செய்யப்படும் சிப்பங்கட்டும் பொருட்கள் மற்றும் நுகர் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

(3) மதிப்பு கூட்டுவரி (VAT) விதிப்பைப் பொறுத்தவரை வணிகர்களின் கோரிக்கையை ஆழ்ந்து பரிசிலித்த பின்னர் இவ்வரிவிதிப்பு முறையை செயல்படுத்துவதற்குமுன் இம்முறை பற்றியும், இதன் சட்டங்கள் மற்றும் விதிகள் பற்றியும் வணிகர்களுக்கு விளக்கவும்; இதனைச் செயல்படுத்தும் முறை பற்றி வணிகவரித் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கவும்; இவ்வரிவிதிப்பு நடைமுறையைச் செம்மைப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே 1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் அட்டவணை 1 மற்றும் 6-ல் குறிக்கப்பட்டுள்ள மறு விற்பனைப் பொருட்களுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரிக்கு 1-11-1996 முதல் 31-3-1998 வரை விலக்களித்து அரசு ஆணை வெளியிடப்பட்டது. இச்சட்டத்தின் தன்மையையும் நன்மையையும் வணிகர்கள் உணரும் வரை மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு அதாவது 1-4-1998 முதல் 31-3-1999 வரை வரிவிலக்கு நீட்டிக்கப்படுகிறது.

(ஆ) ‹ இவ்வாண்டிற்கு பின்வரும் புதிய வருவாய் ஈட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :-

(1) இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் மீதான விற்பனை வரி 30-லிருந்து 40 விழுக்காடாகவும்; வெளிநாட்டில் தயாரிக்கப்படும் மதுவகை மீதான விற்பனை வரி 60-லிருந்து 70 விழுக்காடாகவும் உயர்த்தப்படுகிறது.

(2) பான் மசாலா மீதான வரி 20-லிருந்து 30 விழுக்காடாக உயர்த்தப்படுகிறது.

(3) வாகனங்கள் மீதான தனி நபர்களுக்கான நுழைவு வரி வணிகர்களுக்கான நுழைவு வரியைவிடக் குறைவாக இருப்பதால் தற்போதும் வெளி மாநிலங்களில் வாகனங்களை வாங்குவது தொடர்கிறது. எனவே தனி நபர்களுக்கான நுழைவு வரியை வணிகர்களுக்கான நுழைவு வரிக்கு ஈடாக உயர்த்தப்படுகிறது.

(4) புதிதாக உருவாக்கப்பட்டு வரும் "மகிழ்வூட்டும் பூங்காக்கள்" கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு பூங்கா நடத்துவோரிடம் வரி வசூலிக்கப்படும். இப்பூங்காக்கள் அமைந்துள்ள

உள்ளாட்சி அமைப்புகளுக்கு இவ்வருவாயில் 90 விழுக்காடு அளிக்கப்படும்.

(5) ரூ. 25 கோடிக்கு மேலும் ரூ. 50 கோடிக்கு மிகாமலும் வரிக்குட்பட்ட விற்பனைத் தொகை உள்ள நிறுவனங்களுக்கு 1.5 விழுக்காடும்; ரூ. 50 கோடிக்கு மேலும் ரூ. 100 கோடிக்கு மிகாமலும் வரிக்குட்பட்ட விற்பனைத் தொகை உள்ள நிறுவனங்களுக்கு 2 விழுக்காடும் கூடுதல் விற்பனை வரி விதிக்கப்படும். ரூ. 25 கோடி வரை வரிக்குட்பட்ட விற்பனைத் தொகையுள்ள நிறுவனங்களுக்கு கூடுதல் விற்பனை வரி கிடையாது.

(6) வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதியாகும் சர்க்கரைக்கு விற்பனை வரி 4 விழுக்காடாகவும், துணி வகைகளுக்கும் சிகரெட்டுக்கும் 16 விழுக்காடாகவும் வரி விதித்திட அரசு கருதியுள்ளது.

(7) மாதாந்திர வீதங்களின் அடிப்படையில் படித்தள முறையில் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளுக்கு நிர்ணயித்துள்ள விற்பனை வரியில், பிரிவு 7 (அ)-வின் கீழ் வரிக்குட்படும் பழைய தங்க மற்றும் வெள்ளி நகைகளுக்கான கொள்முதல் தொகையினை படித்தள முறை வரிவிதிப்புக்குரிய மொத்த விற்பனைத் தொகையில் சேர்க்கக்கூடாது என ஆணையிடப்பட்டுள்ளது.

IV. வணிகவரித் துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்.

வணிகவரித் துறை பின்வரும் நான்கு பிரிவுகளாக செயல்பட்டு வருகிறது.

(அ) வரிவிதிப்புப் பிரிவு

(ஆ) தணிக்கைப் பிரிவு

(இ) செயலாக்கப் பிரிவு

(ஈ) மேல்முறையீட்டுப் பிரிவு

(அ) வரிவிதிப்புப் பிரிவு :

வணிகவரித்துறை அமைப்பு 10 வணிகவரி கோட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வணிகவரி கோட்டமும் ஒரு வணிகவரித் துணை ஆணையரின் கீழ் இயங்கி வருகிறது. இக்கோட்டங்கள் வணிகவரி மாவட்டங்களாகவும், மாநகரங்கள் வணிகவரித்துறை சரகங்களாகவும்

[1998 மே 4

பிரிக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு வணிக வரி மாவட்டமும்/சரகமும் ஒரு வணிக வரி உதவி ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இம்மாநிலத்தில் தற்போது 40 வணிக வரி மாவட்டங்கள்/ சரகங்கள் உள்ளன.

ஒவ்வொரு வணிகவரி மாவட்டமும்/சரகமும் பல வரிவிதிப்பு வட்டங்களைக் கொண்டது. இம்மாநிலத்தில் 320 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றில் விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்கள் என அழைக்கப்படும் 6 வரிவிதிப்பு வட்டங்கள் (சென்னையில் 4 மற்றும் கோயம்புத்தூரில் 2) வணிகவரி உதவி ஆணையர் தலைமையில் இயங்கி வருகிறது. 233 வட்டங்கள் வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும் மீதமுள்ள 81 வட்டங்கள் துணை வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும் இயங்கி வருகின்றன.

(ஆ) தணிக்கைப் பிரிவு :

துறைத் தணிக்கைப் பிரிவு அரசுக்கு வருவாய் இழப்பைத் தடுக்கும் பொருட்டும், வரிவிதிப்பு பணிகளில் உள்ள குற்றம் குறைகளை சீர்செய்தல் பொருட்டும், காலாண்டிற்கு ஒரு முறை வரிவிதிப்பு ஆய்வினை உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்கிறது. இத்தணிக்கை மாநில கணக்காயரின் ஆண்டு தணிக்கைக்கு முன்னமேயே எடுத்துக் கொள்ளப்படுகிறது. மாநிலத்தில் தற்போது 42 துறை தணிக்கைக் குழுக்கள் உள்ளன. இவை சம்பந்தப்பட்ட துணை ஆணையர் வகுக்கும் செயல் திட்டங்களின் அடிப்படையில் செயல்படுகின்றன. ஒவ்வொரு காலண்டிலும் அதற்கு முந்தைய காலாண்டில் செய்யப்பட்ட வரிவிதிப்பு மற்றும் வசூல் பணிகள் துறைத் தணிக்கை குழுவால் தணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. துறை தணிக்கை குழுவின் அறிக்கை தொடர்பாக குறை நீக்க நடவடிக்கை, குறைகள் முற்றிலுமாக நீக்கப்படும் வரையில், மாவட்ட உதவி ஆணையர்களால் கண்காணிக்கப்படுகின்றன. துறை தணிக்கை அலுவலர்களின் தணிக்கைப் பணி மற்றும் மாநில கணக்காயரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளைக் களையும் பணி ஆகியவை சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையரின் கீழ் ஓர் இணை ஆணையர் கொண்ட தனி குழுவினால் கண்காணிக்கப்படுகின்றன. துறை தணிக்கைப் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்த அவர்களின் பணி குறித்து தகுந்த கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் நீதி மன்றங்களில் அண்மைக்கால தீர்ப்புகள், அவை குறித்த விளக்கங்கள் ஆகியவை

1998 மே 4]

சுற்றறிக்கையாகவும் செய்தித் தொகுப்புகளாகவும் வணிகவரி ஆணையரால் தணிக்கை குழுக்களுக்கு அவ்வப்போது அனுப்பப்படுகின்றன.

(இ) செயலாக்கப்பிரிவு :

மாநிலத்தில் 7 செயலாக்கக் கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் துணை ஆணையர் (செயலாக்கம்) தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. சோதனைச் சாவடிகளும், துணை ஆணையர் (செயலாக்கம்) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. கடைகள் மற்றும் வணிக இடங்கள், கிடங்கு தொழிற்சாலை முதலியவற்றில் ஆய்வுச் சோதனை அல்லது திடீர் சோதனை ஆகிய பணிகளைச் செய்வதற்கு துணை வணிகவரி அலுவலர் மற்றும் உதவி வணிக வரி அலுவலரைக் கொண்ட படைகள் துணை ஆணையர் (செயலாக்கம்) கட்டுப்பாட்டில் உள்ளன. இப்படைகளின் அலுவலர்களின் பணிகளை கண்காணிக்க மாநில அளவில் 10 உதவி ஆணையர் (செயலாக்கம்) 15 வணிகவரி அலுவலர் (செயலாக்கம்) ஆகியோர், துணை ஆணையர் (செயலாக்கம்) கட்டுப்பாட்டில் உள்ளனர். மேலும், சோதனைச் சாவடிகள் வழியாக செல்லாத மாற்றுவழியில் செல்லும் வாகனங்களை இடைமறித்து சோதனை செய்ய செயலாக்கப் பிரிவில் சுழற்படைகள் உள்ளன.

தற்போது மாநிலத்தில் 46 வணிகவரி சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 31 சோதனைச் சாவடிகள் மாநில எல்லையோரத்தில் உள்ளன.

சோதனைச் சாவடிகளில் போக்குவரத்து நெருக்கடியை தவிர்த்து வாகனங்களை விரைவாக சோதனை செய்ய வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு ஒரு நாளைக்கு 1000 வாகனங்களுக்கு மேல் கடந்து செல்லும் சோதனைச் சாவடிகள் படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகளாக அமைக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் உள்ள 46 சோதனைச் சாவடிகளில் 19 பெரிய சோதனைச் சாவடிகள் ஆகும். அவற்றில் பூவிருந்தவல்லி, ஹொசூர், கந்தகவுண்டன் சாவடி, ராணிப்பேட்டை, புழல், தொப்பூர், கணியூர் முதலியன இருவழிச் சோதனைச் சாவடிகள் ஆகும். சோதனைச் சாவடிகளை மேலும் சீரமைப்பதற்கு நவீன ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகளை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1998 மே 4

அதன்படி, பூவிருந்தவல்லி தணிக்கைச் சாவடியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால் சோதனைச் சாவடியை காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டத்திலுள்ள பெண்ணலூர் கிராமத்திற்கு மாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டு அங்கு சோதனைச் சாவடி அமைப்பதற்காக மூன்று ஹெக்டேர் நிலத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசலையும், வாகன தேக்கத்தையும் தவிர்க்கும் பொருட்டு, வணிகவரித் துறை, வருவாய்த் துறை, போக்குவரத்துத் துறை, வனத்துறை, உணவுப் பொருள் வழங்கு துறை, வேளாண்மைத் துறை போன்ற பல்வேறு துறைகளின் சோதனைச் சாவடிகள் பல்வேறு இடங்களில் செயல்பட்டு வந்ததை ஒரே இடத்தில் செயல்படும் வகையில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகளை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்கொப்ப, புழல் எனும் இடத்தில் செயல்பட்டு வந்த இருவழிச் சோதனைச் சாவடிகளை திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்திலுள்ள ஆரம்பாக்கம் மற்றும் சின்ன ஓபலாபுரம் ஆகிய இடங்களுக்கு மாற்றம் செய்ய முடிவு செய்து அதற்காக 27.33 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய ஆவன செய்யுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(ஈ) மேல்முறையீட்டுப் பிரிவு:

இத்துறையின் மேல்முறையீட்டுப் பிரிவு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்பாயத் தலைவரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இம்மாநிலத்தில் 20 மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் உள்ளனர். மேலும் சென்னையிலும் கோயம்புத்தூரிலும் 2 துணை ஆணையர்கள் (மேல்முறையீடு) உள்ளனர். இவர்கள் அனைவரும் முதல்நிலை மேல்முறையீட்டு அலுவலர்கள் ஆவர். வணிகவரி அலுவலர்கள், துணை வணிகவரி அலுவலர்கள் மற்றும் உதவி வணிகவரி அலுவலர்கள் ஆகியோரின் வரிவிதிப்பு ஆணைகள் மீது எழும் மேல்முறையீடுகளை மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும், உதவி ஆணையர்கள் (விரைவு வழி வரிவிதிப்பு வட்டம்) வரிவிதிப்பு ஆணைகள் மீது எழும் மேல்முறையீடுகளைத் துணை ஆணையர்களும் (மேல் முறையீடு) விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றனர்.

1998 மே 4]

இவர்களின் மேல்முறையீட்டு பணி முன்னேற்றம் குறித்து விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்பாயத் தலைவர் அவ்வப்போது ஆய்வு செய்கிறார். மேலும் நிர்வாக நோக்கில் இவர்களது பணி, வணிக வரித் துறை அரசுச் செயலர் அவர்களாலும், ஆய்வு செய்யப்படுகிறது. கடந்த 27-8-1997 ஆம் நாள் வணிக வரித் துறை அரசுச் செயலர் அவர்களால் முதல்முறையாக மேல்முறையீட்டு உதவி ஆணையர் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர் ஆகியோரின் பணி ஆய்வு செய்யப்பட்டு நீண்ட காலமாக தேங்கிக் கிடக்கும் மேல்முறையீடுகள் மீது துரித நடவடிக்கை எடுத்து முடிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது.

மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் :

இம்மாநிலத்தில் விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்பாயம் அமைக்கப்பட்டு அது மேல்முறையீட்டு உதவி ஆணையரின் (வணிகவரி) பேரில் எழும் மேல் முறையீடுகளை விசாரித்து தீர்ப்பு வழங்குகிறது. விற்பனை வரி மேல்முறையீடுகள் தீர்ப்பாயம் பின்வரும் இடங்களில் செயல்படுகின்றன:-

(அ) சென்னை (முதன்மை ஆயம்)

(ஆ) சென்னை (கூடுதல் ஆயம்)

(இ) கோயம்புத்தூர் (கூடுதல் ஆயம்)

(ஈ) மதுரை (கூடுதல் ஆயம்)

சென்னையில் உள்ள முதன்மை ஆயத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, தீர்ப்பாயத் தலைவராக உள்ளார். கூடுதல் ஆயத்திற்கு சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினர் தலைமை தாங்குகிறார்.

மேலும் துறை உறுப்பினர்களாக முதன்மை ஆயத்தில் இணை ஆணையரும் கூடுதல் ஆயங்களில் துணை ஆணையர்களும் உள்ளனர்.

V. தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம் :

நிலுவையிலுள்ள வரிவிதிப்பு வழக்குகளில் விரைவாக தீர்ப்பு வழங்கவும்; அதனால் அரசுக்கு சேரவேண்டிய ஏராளமான வரித்தொகையை வசூல் செய்யவும் வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம் ஒன்றை அரசு

ஏற்படுத்தி, 1-1-1996ஆம் நாளிலிருந்து இயங்கி வருகின்றது. இதற்கு முன்னர் உயர்நீதி மன்றம் விசாரித்து வந்த வழக்குகளை தற்போது சிறப்புத் தீர்ப்பாயம் விசாரித்து தீர்ப்பு வழங்கி வருகிறது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959 தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டம், 1970 மற்றும் மேல்வரிச்சட்டம், 1971 ஆகிய சட்டங்களின் கீழ் வரும் வணிகவரி வழக்குகளை இந்த சிறப்புத் தீர்ப்பாயம் விசாரித்து தீர்ப்பு வழங்கி வருகிறது.

இத்தீர்ப்பாயம், இதுவரை, தலைவர் ஒருவரால் மட்டுமே வழக்குகள் நடத்தப்பட்டு, இயங்கி வந்தது. தற்போது, மேதகு ஆளுநர் அவர்கள், நீதியரசர் திரு. ஜெ. கனகராஜ் அவர்களைத் தலைவராகவும், நீதியரசர் திரு. வி. ரெங்கசாமி அவர்களைத் துணைத் தலைவராகவும், திரு எல். பழமலை இ-ஆ.ப. (ஓய்வு) அவர்களை துறை உறுப்பினராகவும் (அரசு ஆணை எண் 37, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் : 3-2-1998-ல் நியமித்துள்ளார்கள்.

VI. வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம்

வணிகவரித்துறை அலுவலர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தி உயர்த்துவதற்காக வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் சென்னையில் தொடங்கப்பட்டு 1982-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்திற்கு வணிகவரி துணை ஆணையர் ஒருவர் இயக்குநராகவும், உதவி ஆணையர் இருவர் முதுநிலை விரிவுரையாளர்களாகவும், வணிகவரி அலுவலர் ஒருவர் விரிவுரையாளராகவும், உள்ளனர். இப்பயிற்சி நிலையம் உதவி வணிகவரி அலுவலர், துணை வணிகவரி அலுவலர் மற்றும் வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்புகள் நடத்துகிறது. பல்வேறு துறையில் இருந்து திறமைமிக்க அலுவலர்களைக் கொண்டு சிறப்பு விரிவுரை வழங்கப்படுகிறது. 1997-98ஆம் ஆண்டில் (ஜனவரி 1998 வரை) 21 வணிகவரி அலுவலர்களுக்கும் 140 துணை வணிகவரி அலுவலர்களுக்கும் 66 உதவி வணிகவரி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கணிப்பொறி மயமாக்குவதற்காக பயனுள்ள தகவல் விவரங்களை சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்புகின்றனரா என்பதை உறுதி செய்ய அவர்களுக்கு கணிப்பொறி பற்றிய அறிவும் அனுபவமும்

தேவை. எனவே, உதவி ஆணையர் பதவியிலும் அதற்குக் கீழ் பதவியில் உள்ள அலுவலர்களுக்கும் கணிப்பொறி அடிப்படை பயிற்சி இப்பணியாளர் பயிற்சி நிலையத்திலேயே அளிக்கப்பட்டு வருகிறது. 1992-93 ஆம் ஆண்டிலிருந்து இவ்வாண்டு வரை (1997-98) 60 உதவி ஆணையர்களுக்கும் 274 வணிகவரி அலுவலர்களுக்கும் 423 துணை வணிக வரி அலுவலர்களுக்கும் கணிப்பொறி பற்றியும் அதனைப் பயன்படுத்தும் முறை பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

VII. கணிப்பொறி மையம்

வணிகவரித்துறையில் கொள்கையை திறம்பட வடிவமைக்கவும், நிர்வாகத் திறமையை மேம்படுத்தவும், தேவையான விவரங்களை சேகரித்து தொகுத்து, வகுத்து முறைப்படுத்தி தகவல்களைப் பெற்றுக் கொள்ள கணிப்பொறி மையம் நிறுவப்பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

1996-97ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959-ன் கீழ் மண்டலவாரியாக விற்று முதல் தொகை மற்றும் வருவாய் ஆகிய தகவல்கள் வணிகர்களிடமிருந்து பெறப்படும் மாதாந்திர (அ-1) அறிக்கையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு வெளிப்பெறும் தகவல்கள் பெறப்பட்டன. அதன்பின்னர் செப்டம்பர் 1997 வரை வெளிப்பெறும் தகவல்கள் பெறப்பட்டன. இத்தகவல்கள் வரிவிதிப்பு நடவடிக்கையில் மிகவும் பயன்படுகின்றன. இது தவிர டிசம்பர், 1996, மார்ச் 1997, ஜூன் 1997, செப்டம்பர் 1997 மற்றும் டிசம்பர் 1997 உடன் முடிவடைந்த காலாண்டுகளுக்கு வணிக வரி சோதனை சாவடிகளிலிருந்து பெறப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட பொருள்கள் விவரங்கள் தொகுக்கப்பட்டன. இத்தகவல்கள் வரி ஏய்ப்பைத் தடுக்க செயலாக்கப் பிரிவினரால் பயன்படுத்தப்படுகின்றன. வணிகர் விவரப்பட்டியல் 1-4-1996 வரை தயாரிக்கப்பட்டுள்ளது.

கணிப்பொறி பயன்பாட்டினை பரவலாக்கும் பொருட்டு 1-4-1995 முதல் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஆகிய இடங்களிலும் கணிப்பொறி துணை மையங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இத்துறை பின்வரும் முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து கணிப்பொறி ஆக்கியுள்ளது:-

[1998 மே 4

(1) *வணிகர்கள் பற்றிய மூலாதார கோப்பினை* **(Master file)** *ஏற்படுத்துதல்.*

மாநிலத்தில் உள்ள வணிகர்கள் பற்றிய அடிப்படை விவரங்கள் அடங்கிய வணிகர் விவரப்பட்டியல் தயாரிக்கப்பட்டு வரிவிதிப்பு அலுவலகங்கள், நிர்வாக அலுவலகங்கள், செயலாக்கப் பிரிவு அலுவலகங்கள், ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளன. வரி ஏய்ப்பினை தடுப்பதற்கு இவ்வணிகர் விவரப்பட்டியல் உதவியாக இருக்கும். மேலும் இவ்விவரப்பட்டியல் அவ்வப்போது முழுமையாக்கப்பட்டு வருகிறது. இவ்விவரப்பட்டியல், வணிகர்கள் தொடர்ந்து வணிகம் செய்து வருகின்றனரா என்று அறியவும், அவர்கள் வரிவிலக்கு கேட்பதைச் சரிபார்க்கவும் பயன்படுகிறது.

(2) *பண்டவாரி விற்று முதல் தொகை மற்றும் வரி விவரங்களை தொகுத்தல்.*

பண்டவாரி விற்று முதல் தொகை மற்றும் வரி விவரங்கள் மாநிலம் முழுவதற்கும் மற்றும் ஒவ்வொரு கோட்டம், மாவட்டம் மற்றும் வரிவிதிப்பு வட்டம் வாரியாகவும் தொகுக்கப்பட்டு எல்லாப் பண்டங்களிலும் பெறப்படும் வருவாய் போக்குக் குறித்து ஒப்பீட்டுப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. மாநிலத்தில் உள்ள பெரும் வணிகர்களின் விற்று முதல் தொகை மற்றும் வரி விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்டவாறு தயாரிக்கப்பட்ட வருவாய் விவரங்கள் துணை ஆணையர்களுக்கும், உதவி ஆணையர்களுக்கும், மற்றும் வரிவிதிப்பு அலுவலர்கள் ஆகியோருக்கும், செயலாக்கப் பிரிவிற்கும் அவர்கள் அதனைப் பயன்படுத்துவதற்காக அனுப்பப்படுகின்றன.

(3) *கருவூலக் கணக்கையும், துறைக் கணக்கையும் சரிபார்த்தல்.*

துறைக் கணக்கினை கருவூலக் கணக்குடன் ஒப்பிட்டு சரிபார்க்கும் பணி இதுவரை கைவேலையாக செய்யப்பட்டு வந்தது. தற்போது இப்பணி ஜூலை, 1995 முதல் கணிப்பொறி மூலமாக வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

1998 மே 4]

(4) *எதிர்காலத் திட்டம்*

இத்துறையில் கணிப்பொறி பணி மேலாண்மை தகவல் முறையில் இதுவரை இருந்து வந்தது. துறையின் அனைத்து பணிகளிலும் திறமையை மேம்படுத்துவதற்காக கணிப்பொறி பயன்பாட்டினை துறையின் அடிமட்டத்திலும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி முதற்கட்டமாக தலைமைச் செயலகத்திலும், 140 வரி விதிப்பு வட்ட அலுவலகங்களிலும், 9 மாநில எல்லையோர சோதனைச் சாவடிகளிலும் கணிப்பொறி அமைக்கும் பணி நடந்து வருகிறது. கணினி மென்பொறிகளை வாங்குதற்கு அரசு "கொள்முதல் குழு" அமைத்துள்ளது. இதற்காக கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூபாய் மூன்று கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அமைக்கப்படவிருக்கும் கணிப் பொறிகளை இயக்குவதற்கு இத்துறையில் பணிபுரியும் 250 உதவியாளர்களுக்கு பத்து தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

VIII. கட்டிடங்கள்

வணிக வரி அலுவலர்களுக்குத் கட்டிடம் கட்டுதல்

வணிக வரித்துறை அலுவலகங்கள் அனைத்தும் படிப்படியாக அரசு கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்பதே அரசின் கொள்கை ஆகும். தற்போது அனைத்து துணை ஆணையர் அலுவலகங்களும், (சென்னை மேல்முறையீட்டு துணை ஆணையர் அலுவலகம் நீங்கலாக) அரசின் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன. இது போன்றே 7 உதவி ஆணையர் அலுவலகங்கள் தவிர ஏனைய உதவி ஆணையர்களின் அலுவலகங்கள் அரசு கட்டிடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 13 மேல் முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 7 மேல்முறையீட்டு உதவி ஆணையர் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர் அலுவலங்கள் சென்னையில் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள 471 அலுவலகங்களில் 244 அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களிலும், 227 தனியார் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி படிப்படியாக அரசு கட்டிடங்கள் கட்டப்படும்.

[1998 மே 4

46. சோதனைச் சாவடிகளில் 14 சோதனைச் சாவடிகள் நிரந்தரமாக அரசுக் கட்டிடங்களிலும், மற்ற சோதனைச் சாவடிகள் தனியார் கட்டிடங்களிலோ அல்லது கீற்றுக் கொட்டகையிலோ செயல்பட்டு வருகின்றன.

IX வருவாய் வசூல் நிலை

இத்துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களின் கீழ் கடந்த சில ஆண்டுகளில் வசூல் செய்யப்பட்ட வருவாய் நிலை கீழ்க்கண்டவாறு உள்ளது:-

வணிக வரித்துறையின் வருவாயும் செலவும்

ஆண்டு	வருவாய் (ரூபாய் கோடியில்)	செலவு (ரூபாய் கோடியில்)	வருவாயில் செலவின் சதவீதம்
1993-94	3399.29	40.85	1.20
1994-95	4164.84	45.64	1.10
1995-96	5023.37	52.52	1.05
1996-97	5751.19	59.93	1.04
1997-98	6062.68	70.24	1.15

(2) 1993-94 முதல் 1997-98 வரை வசூல் செய்யப்பட்ட வருவாய் விவரங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன :

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1993-94	2,819.23
1994-95	3,452.92
1995-96	4,118.57
1996-97	4,717.19
1997-98	4,963.06

1998 மே 4]

(ஆ) மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1993-94	394.91
1994-95	477.19
1995-96	590.63
1996-97	672.06
1997-98	706.82

(இ) தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டம், 1961

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1993-94	82.19
1994-95	87.89
1995-96	98.96
1996-97	107.82
1997-98	108.55

(ஈ) தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டம், 1935

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1993-94	5.68
1994-95	5.70
1995-96	6.67
1996-97	6.42
1997-98	6.52

[1998 மே 4

(உ) தமிழ்நாடு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம், 1981

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1993-94	27.75
1994-95	35.86
1995-96	50.77
1996-97	60.69
1997-98	64.71

(ஊ) தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் லட்சத்தில்)
1993-94	2.00
1994-95	1.00
1995-96	இல்லை
1996-97	0.05
1997-98	இல்லை

(எ) தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990

ஆண்டு	மொத்த வரவு (ரூபாய் கோடியில்)
1993-94	69.51
1994-95	105.27
1995-96	157.77
1996-97	185.96
1997-98	213.02

1998 மே 4]

ஏனைய சிறப்பு அம்சங்கள்

X. விற்பனை வரி ஆலோசனைக் குழு

வணிகர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்று கருத்துப் பரிமாற்றம் செய்து விற்பனை வரி நிர்வாகத்தை சீர்மைப்படுத்தும் பொருட்டு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(1) மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு

மாண்புமிகு தமிழக முதல்வர் மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுவின் தலைவர் ஆவார். வருவாய்த் துறை அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஆகியோர் அலுவல் வழி உறுப்பினர்கள் ஆவர். அலுவல் முறை உறுப்பினர்கள் தவிர அநேக வர்த்தக சங்கங்கள் மற்றும் வணிகர் கழகங்கள், நுகர்வோர் பாதுகாப்புக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின், பிரதிநிதிகள் இதில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் ஆவர்.

தற்போது, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் அரசு ஆணை எண். 543, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 28-11-97-ன் படி மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக்குழு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

(2) மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு

அந்தந்த மாவட்டத்திலுள்ள விற்பனை வரி ஆலோசனைக் குழுவிற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே தலைவர் ஆவார். மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழுவில் உள்ளது போல் இதிலும் அலுவல்முறை உறுப்பினர் தவிர வணிகர் கழகங்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் கூட்டுறவு மற்றும் வேளாண்மை நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் ஆவர்.

இக்குழுக்கள் வணிக வரி நிர்வாகம் மற்றும் சட்ட விதிகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளை விவாதிக்கிறது. இக்குழுவின் விவாதங்களும், பரிந்துரைகளும் ஏற்கப்பட்டு அக்குறைகளை நிறைசெய்யும் பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

XI. காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகை மற்றும் தள்ளுபடி போன்ற தொழிலகங்களுக்கான சலுகைகள் [1998 மே 4

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து தொழிற் பெருக்கத்திற்கு வித்திடும் வகையில், பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்களுக்கு, ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு, வரித் தொகையைத் தள்ளுபடி செய்தும், புதிய தொழிலகங்கள், தொழில் விரிவாக்கங்கள், நலிந்து போன தொழிலகங்கள் போன்றவற்றிற்கு, அவை செலுத்த வேண்டிய வரிகளை காலம் தள்ளி வட்டியின்றி செலுத்தவும் அரசு சலுகை அளித்துள்ளது.

இவ்வகையில் 1997-98 ஆம் ஆண்டில் 30-9-1997 வரை ரூபாய் 109.22 கோடி வரிச் சலுகையினை தொழிலகங்கள் பெற்று பயனடைந்துள்ளன.

XII. உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமளித்தல்

உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, கேளிக்கை வரி வருவாய் மூலம் கிடைக்கும் மொத்த தொகையில் குறிப்பிட்ட தொகையை உள்ளாட்சி மன்றங்களுக்குக் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வந்தது:-

(அ) மாநகராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள் மற்றும் கண்டோன்மெண்ட்

(ஆ) தேர்வு நிலை நகராட்சிகள், முதல் நிலை நகராட்சிகள், நகர பஞ்சாயத்துக்கள் மற்றும் நகரியம் 70%

(இ) இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகள் 65%

(ஈ) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகள் 60%

30%

உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகத்தை மேம்படுத்தும் பொருட்டு, அவற்றின் வருவாய் ஆதாரங்கள் அதிகரிக்கப்படும் என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்திருந்தேன். அவ்வாறே 1-6-1997 முதல் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் கேளிக்கை வரி வருவாயில் 90% வழங்கப்பட்டு வருகிறது. இதனை 1-4-1997 முதல் முன்தேதியிட்டு நடைமுறைப்படுத்த சட்டத் திருத்த முன்வடிவு தற்போது நடைபெறும் சட்டமன்ற பேரவைக் கூட்டத் தொடரில் அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

1998 மே 4]

XIII. குறை தீர்க்கும் பிரிவு

வணிகர்கள் தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்குரிய ஓர் அமைப்பாகத் திகழ சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் 1984-ஆம் ஆண்டில் "குறைதீர்க்கும் பிரிவு" ஒன்று ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு இணை ஆணையர் (நிருவாகம்) அவர்களைத் தலைவராகவும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் உதவி ஆணையர் (வணிக வரி 2) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

XIV. கருணை அடிப்படையில் பணி நியமனம்

வணிக வரித் துறை, நிதியை ஈட்டித் தருவதோடல்லாமல் இத்துறையில் பணியாற்றும் அலுவலர்களின் நலன்களைக் கருணையோடு கருத்தில் கொண்டு, பணிக்காலத்தில் இறந்த அலுவலர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு, அவர்கள் தகுதிக்கு ஏற்ப பணி நியமனம் செய்கிறது. இத்திட்டம், இந்த அரசின் காலத்தில், 1972 ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 225, தொழிலாளர் நலத்துறை, நாள் 15-2-1972-ன்படி தொடங்கப்பட்டது. குடும்பத் தலைவரை இழந்து வாடும் குடும்பங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு இத் துறை ஜூன் 1996 முதல் மார்ச் 1998 வரை 81 நபர்களை கீழ்க்கண்டவாறு அரசுப் பணியில் அமர்த்தியுள்ளது :—

இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள்	51
பதிவுறு எழுத்தர்	13
அலுவலக உதவியாளர்	13
துப்புரவாளர்	4
மொத்தம்	**81**

XV. வணிகர் நல வாரியம்

(i) இத்துறை, வணிகர்கள் நலத்திலும் நாட்டம் கொண்டு அவர்தம் நலத்தை பேணும் வகையில் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

[1998 மே 4

அதில் தலையாய பணியாக, வணிகர்களுக்கு உதவும் நோக்குடன் அரசு ஆணை எண் 332, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள்: 11-5-1989-ல் வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக உள்ளார். இவ்வாரியம் சமீபத்தில், அரசு ஆணை எண் 557, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 10-12-1997-ன்படி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தில் அரசு அலுவலர்களும், அரசு அலுவலர் அல்லாதவர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். 1997-98 ஆம் ஆண்டு வரை இவ்வாரியம் 24,595 ஆயுட்கால உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது. வருமான வரிச் சட்டத்தின் கீழ் வருமானவரி செலுத்தத்தக்க உறுப்பினர் அல்லாதவர்களுக்கு இவ்வாரியம் அளிக்கும் உதவிகள் பின்வருமாறு:—

(அ) இருதய மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சைக்கு மருத்துவச் சான்றின் பேரில் — ரூ. 25,000/-

(ஆ) வாரியத்தின் உறுப்பினராக உள்ள பொருள் ஈட்டும் நபர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு குடும்ப நல நிதி — ரூ. 50,000/-

(இ) நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியை தொடர்ந்து முடிக்க, பாலிடெக்னிக், கல்லூரி அல்லது அதற்குச் சமமான கல்விப் படிப்பு முடியும் வரை ஆண்டிற்கு — ரூ. 2,000/-

முதுநிலைப்படிப்பு அல்லது தொழிற்கல்வி அல்லது அதற்கு சமமான கல்வி, படிப்பு முடியும் வரை ஆண்டிற்கு — ரூ. 2,000/-

(ஈ) உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர் அல்லது அவர் குடும்பத்தில் உடல் ஊனமுற்ற ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படும்.

(ii) வருமான வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்தத்தக்க உறுப்பினராயினும், இல்லாவிடினும் அனைத்து உறுப்பினர்களுக்கும் பின்வரும் உதவிகள் அளிக்கப்படுகின்றன: —

(அ) 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவிகளுக்கு பின்வரும் தொகை பரிசாக வழங்கப்படுகிறது:

1998 மே 4]

முதல் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள்	ரூ. 5,000/-
இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள்	ரூ. 3,000/-
மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள்	ரூ. 2,000/-

(ஆ) விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெறும் உறுப்பினர்களின் மகன்/மகளுக்கு பின்வரும் தொகை பரிசாக வழங்கப்படுகிறது:

சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு	ரூ. 25,000/-
அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு	ரூ. 10,000/-
மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு	ரூ. 5,000/-

குடும்ப நல உதவி

இதுவரை 10 வணிகர்களுக்கு ரூ. 2,60,000 வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ நிதி உதவி

இதுவரை சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒரு வணிகருக்கு ரூ. 25,000/- வழங்கப்பட்டுள்ளது.

கல்வி நிதி உதவி

இதுவரை, இரண்டு உறுப்பினர் குடும்பத்தைச் சார்ந்த மாணவ/மாணவிகளுக்கு ரூ. 4,000/- கல்வி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆக, மேலே குறிப்பிடப்பட்ட மூன்று நிதி உதவி திட்டங்களின் கீழ் இதுவரை வழங்கப்பட்ட மொத்த உதவித்தொகை ரூ 2,89,000/- ஆகும்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு - திருக்குறள்

[1998 மே 4

இணைப்பு - 1

வணிகவரித் துறையின் ஆட்சிப் பகுதிக் கோட்டங்கள்

சரகம்/மாவட்டம்	நிர்வாகக் கோட்டம்
சரகம்-1 சரகம்-2 சரகம்-3	சென்னை (வடக்கு)
சரகம்-4 சரகம்-8 சரகம்-11	சென்னை (மையம்)
சரகம்-7 சரகம்-10 செங்கல்பட்டு	சென்னை (தெற்கு)
சரகம்-5 சரகம்-6 சரகம்-9	சென்னை (கிழக்கு)
திருச்சிராப்பள்ளி கரூர் தஞ்சாவூர் கும்பகோணம் புதுக்கோட்டை	திருச்சி
வேலூர் திருவண்ணாமலை கடலூர் விழுப்புரம்	வேலூர்

1998 மே 4]

சரகம்/மாவட்டம்	நிர்வாகக் கோட்டம்
கோயம்புத்தூர் சரகம்-1 கோயம்புத்தூர் சரகம்-2 கோயம்புத்தூர் சரகம்-3 பொள்ளாச்சி திருப்பூர் நீலகிரி	கோயம்புத்தூர்
சேலம் நாமக்கல் ஈரோடு தருமபுரி	சேலம்
மதுரை கிழக்கு மதுரை மேற்கு திண்டுக்கல் சிவகங்கை	மதுரை
திருநெல்வேலி நாகர்கோவில் தூத்துக்குடி விருதுநகர் சிவகாசி	திருநெல்வேலி

[1998 மே 4

இணைப்பு - 2

வணிக வரித்துறை அலுவலர்களின் படிநிலை



தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம்

தலைவர்
துணைத் தலைவர்
நீதித்துறை உறுப்பினர்
(இடம் நிரப்பப்பட உள்ளது)
துறை உறுப்பினர்
பதிவாளர்

1998 மே 4]

இணைப்பு - II

[78-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மானியக் கோரிக்கை எண் 11
மாவட்ட நிருவாகம் குறித்த
கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99

1. முன்னுரை

1980 ஆம் ஆண்டு வருவாய் வாரியம் (Board of Revenue) கலைக்கப்பட்டது. அதன் பின்னர், வருவாய் நிர்வாகம், நில நிர்வாகம் மற்றும் நிலச் சீர்திருத்தம் குறித்த மாநில அளவிலான பணிகள், வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று ஆணையர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

2. மாவட்ட வருவாய் நிர்வாகம்

(1) வருவாய் நிர்வாகத் துறை, வருவாய் நிர்வாக ஆணையரின் தலைமையில் இயங்கி வருகிறது. அவரது கண்காணிப்பில் மாவட்ட நிர்வாகம் செயல்படுகிறது. மாவட்ட அளவில் வருவாய்த் துறைப் பணிகளுடன், பொது நிர்வாகத்தையும் மாவட்ட ஆட்சியர்கள் கவனித்துக் கொள்கிறார்கள். அவருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர்கள், வருவாய்க் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் பணிபுரிகிறார்கள். மேலும் மாவட்ட அளவில், பல்வேறு துறைகளின் செயல்பாட்டிற்கும் மாவட்ட ஆட்சியர்கள் ஒருங்கிணைந்து உதவுகின்றனர்.

(2) மாவட்ட நிர்வாகத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராக இருப்பதால், எத்துறை தொடர்பான குறைகளாக இருப்பினும், அவற்றைத் தீர்ப்பதற்கு பொது மக்கள் மாவட்ட ஆட்சியரையே அணுகுகின்றனர். எனவே, மாவட்ட ஆட்சியரும், பல நிலையிலான வருவாய் அலுவலர்களும் மக்கள் குறைகளை விரைவில் தீர்ப்பதற்கு முனைப்புடன் செயல்பட வேண்டியுள்ளது. இதற்கென 'பொது மக்கள் தொடர்புத் திட்டம்' (மனு நீதித் திட்டம்) மற்றும் 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' ஆகிய இருபெரும் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது.

[1998 மே 4

(அ) மனுநீதித் திட்டம்

மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கென உருவாக்கப்பட்ட மனுநீதித் திட்டம் இந்தியாவில் முதன்முதலில் தமிழகத்தில்தான் 1969 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பொதுமக்களுக்கு மேலும் சிறந்த முறையில் பயன்தரத்தக்க அளவில் இந்த திட்டம் 1997-ல் திருத்தியமைக்கப்பட்டது. இந்தத் திட்டம் மாவட்ட ஆட்சியர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்களால் நடத்தப்படுகிறது. இதர அரசுத் துறை மற்றும் வங்கி அலுவலர்களும் இதில் முனைப்புடன் பங்கேற்கின்றனர்.

திட்டத்தின் செயல்பாட்டுமுறை

(1) இத்திட்டம் மாதம் ஒருமுறை, அதாவது மாதத்தில் இரண்டாவது புதன்கிழமை நடத்தப்படுகிறது.

(2) மூன்றாண்டு காலத்திற்குள் அனைத்து கிராமங்களிலும் மனுநீதித் திட்டம் நடத்தப்படும் வண்ணம் மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கோட்டாட்சியர் உள்ளிட்ட அனைத்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மூன்றாண்டு காலத்திற்குள் அனைத்து கிராமங்களிலும் மனுநீதித் திட்டத்தை நடத்தவியலாத மாவட்டங்களில், மூன்றாண்டு காலச் சுழற்சியில், மனுநீதித் திட்டத்தின் மூலம் எந்த ஒரு கிராமமும் பயனடையாது விடுபடும் நிலையைத் தவிர்க்கும் வகையில் ஒரு சில கிராமங்களை அருகிலுள்ள கிராமங்களுடன் இணைத்து மனுநீதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மிகவும் உள்ளடங்கிய கிராமங்களில் மனுநீதித் திட்டம் நடத்தும் பொருட்டு இந்த செயல்திட்டம் வகுக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அனைத்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களும் எந்தெந்த கிராமங்களுக்கு எந்தெந்த தேதியில் செல்ல வேண்டும் என்ற விபரத்தை மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு முன்னரே தெரிவிக்க வேண்டும். மாதமொருமுறை நடத்தப்படும் மனுநீதித் திட்டத்தை தள்ளி வைக்கவோ அல்லது கைவிடவோ கூடாது என மாவட்ட ஆட்சியர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

1998 மே 4]

(3) மனுநீதித் திட்டம் குறித்து 4 வாரங்களுக்கு முன்னரே ஒரு சார்நிலை அலுவலர், சம்பந்தப்பட்ட கிராமத்திற்குச் சென்று விளம்பரம் செய்து மனுக்கள் பெறுகிறார்.

(4) மனுநீதி நாட்களில் பெறப்படும் மனுக்கள் வருவாய்த் துறை சம்பந்தப்பட்டது மட்டுமல்லாமல் இதர துறைகள் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கக்கூடும். ஆகவே, மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் நடத்தும் மனுநீதித் திட்ட கூட்டங்களுக்கு அனைத்துத் துறையைச் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்களும் கட்டாயம் பங்கு கொள்ள வேண்டும் எனவும், கோட்டாட்சியர்/அரசிதழ் பதிவு பெற்ற இதர அலுவலர்கள் நடத்தும் கூட்டங்களுக்கு இதர துறைகளைச் சேர்ந்த வட்ட நிலையிலான அலுவலர்கள் கலந்துகொள்ள வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(5) எல்லா அலுவலர்களும் உரிய காலத்தில் மனுநீதி நாள் நடத்தப்படும் கிராமத்திற்கு போய்ச்சேர, தலைமையிடங்களிலிருந்து எல்லா அதிகாரிகளையும் சம்பந்தப்பட்ட கிராமத்திற்கு அழைத்துச் செல்ல பொதுவான பேருந்துகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என அரசு வலியுறுத்தியுள்ளது.

(6) மனுநீதித் திட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நாளுக்கு நான்கு வாரங்களுக்கு முன்னதாகவே முன்னறிவிப்பு செய்து கிராமத்திலிருந்து மனுக்கள் பெறப்படவேண்டும். அம்மனுக்களின் மீதான அறிக்கைகள், சம்பந்தப்பட்ட இதர துறை அலுவலர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளனவா என்பதை மனுநீதி நாளன்று கிராமத்திற்குச் செல்வதற்கு முன்னர் உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும். முதலில், ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்களின் மீதான முடிவுகளைச் சம்பந்தப்பட்ட மனுதாரர்களிடம் தெரிவிக்க வேண்டும். மனுநீதித் திட்ட நாளன்று பெறப்படும் மனுக்களுக்கான முடிவுகளை அன்றே மனுதாரர்களுக்குத் தெரிவிக்க இயலுமா என்பதைச் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தலத்திலேயே முடிவு எடுக்க இயலாத மனுக்களை, அதற்கென வரையறுக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்தபின், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அவற்றை ஆய்வு செய்து, ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு முடிவான பதில் கொடுக்க வேண்டும்.

[1998 மே 4

(7) மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களை முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்து குறைகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும், கீழ்க்காணும் இனங்களின் மீது குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது:

(1) பேறுகால உதவிகோரும் மனுதாரருக்கு கருவுற்ற 7-வது மாதத்திலிருந்து 30 நாட்களுக்குள் பேறுகால உதவி வழங்க வேண்டும்;

(2) விபத்து ஏற்பட்ட 30 நாட்களுக்குள் விபத்து நிவாரணத் தொகை வழங்க வேண்டும்;

(3) முதியோர் உதவித்தொகை கோரும் மனுக்கள் மீது 60 நாட்களுக்குள் முடிவெடுக்கப்பட வேண்டும்;

(4) பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது 100 நாட்களுக்கு மேல் முடிவெடுக்கப்படாமல் இருக்கக் கூடாது. 100 நாட்களுக்கு மேல் சில மனுக்களின் மீது முடிவெடுக்கப்படாமல் இருக்குமானால், அலுவலகத்தின் தலைமை அலுவலர் நாள்தோறும் அம்மனுக்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

(5) 200 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ள மனுக்கள் 'நிக்நெட்' மூலம் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட வேண்டும். அவற்றின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சியர் தாமே ஆய்வு செய்ய வேண்டும்.

(8) துறைத் தலைவர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யும்போது மனுநீதித் திட்டப் பதிவேட்டைத் தணிக்கை செய்ய வேண்டும். இதனால் இம்மனுக்களை முடிவு செய்வதில் முன்னேற்றம் காண இயலும். மாவட்ட ஆட்சியர் மனுநீதித் திட்டம் குறித்து தீவிர ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மனுநீதித் திட்டம் நடத்தப்பட்டது குறித்த அறிக்கையை எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஒவ்வொரு மாதமும் 25-ம் தேதிக்கு முன்பாக முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளை ஆய்வு செய்து, இந்தத் திட்டத்தைத் திறம்பட செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார். முதன்மை

1998 மே 4]

ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், அரசுக்கு காலாண்டு அறிக்கையொன்றை அனுப்புவார்.

1997 ஆம் ஆண்டில் 4,119 கிராமங்களில் மனுநீதித் திட்டம் நடத்தப்பட்டுள்ளது. 3,60,019 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றில் 3,30,292 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு 29,727 மனுக்கள் மட்டுமே நிலுவையாக உள்ளன.

(ஆ) பொது மக்கள் குறைதீர்க்கும் நாள்

அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்நாளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்கள் தலைமையிடத்திலேயே இருந்து பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கின்றனர். பொதுமக்கள் குறைகளைத் தீர்க்க அரசு விரிவான நெறிமுறைகளை வகுத்துள்ளது. பொதுமக்கள் தங்கள் குறைகள் தீர்க்கப்படுவதற்கு அரசு அலுவலகங்களில் பின்பற்றப்படும் பல்வகை நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகள் குறித்த தகவல்களை அறிவிப்புப் பலகை மற்றும் தகவல் மையம் மூலம் தெரிந்துகொள்ளச் செய்வது அரசின் நோக்கம்.

2. 1997 ஆம் ஆண்டு, முதல் கட்டமாக இடைத்தரகர்கள் தொல்லையை நீக்கும் பொருட்டு, 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதற்குட்பட்டு கூர் உணர்வுடைய தகவல்களைத் தவிர்த்து பொதுமக்கள் அறிந்து கொள்ள விரும்பும் தகவல்களை பொதுமக்கள் அதிகம் வரும் அரசு அலுவலகங்களில் அமைக்கப்படவுள்ள தகவல் நிலையங்கள் மூலம் அளிக்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. இதைத் தவிர வட்ட, கோட்ட மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களில் நுழைவாயிலிலேயே தகவல் மற்றும் சேவை மையங்கள் ஏற்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோர்களது பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றை விரைவில் தீர்ப்பதற்கு ஓய்வூதியம் பெறுவோரது குறைதீர்க்கும் நாள் அனைத்து மாவட்டங்களிலும் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படுகிறது. இதில் அனைத்துத் துறை அலுவலர்களும், ஓய்வூதியம்

[1998 மே 4

பெறுவோரும் கலந்துகொண்டு ஓய்வு பெறுவோரின் குறைகள் களையப்படுகின்றன.

(3) ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மக்கள் குறைதீர்க்கும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, தனித் துணை ஆட்சியர் (மக்கள் குறை தீர்க்கும் பிரிவு) ஒருவரது தலைமையிலும், மாவட்ட ஆட்சியரது மேற்பார்வையிலும் இயங்கி வருகிறது. தனித் துணை ஆட்சியருக்குத் தனியாக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இவர் மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள "நிக்நெட்" கணிப்பொறியின் உதவியுடனும் குறைதீர்க்கும் நாளன்று பெறப்படும் மனுக்களின்மீது அனைத்து அலுவலகங்களிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்கிறார். மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள் குறைதீர்க்கும் பிரிவுகள் திருப்திகரமாக செயல்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் முதலமைச்சரிடமோ அல்லது முதலமைச்சரது தனிப்பிரிவு மூலமாகவோ கொடுக்கும் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் மீதான முடிவுகள் 30 நாட்களுக்குள் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

4. 31-12-1997 வரை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் 2,81,956 மனுக்கள் பெறப்பட்டதில் 2,45,664 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. 36,292 மனுக்கள் மட்டுமே நிலுவையாக உள்ளன.

5. இவ்வாறு, பொதுமக்கள் குறைதீர்க்கும் பணிக்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து அப்பணி சிறப்பாக நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(இ) வருவாய் நிர்வாகத்தைச் சீரமைத்தல்

முன்னாள் தலைமைச் செயலர் திரு. பி. சபாநாயகம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட "வருவாய்த்துறை நிர்வாகச் சீர்திருத்தக்குழு" தனது அறிக்கையினை அரசிடம் அளித்துள்ளது. அவ்வறிக்கை தற்போது அரசின் ஆய்வில் உள்ளது.

(ஈ) வருவாய்த் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி

விரைவாகவும் சிறப்பாகவும் கடமையாற்ற உதவும் வகையிலும், வருவாய் நிர்வாகம் குறித்த அண்மைக்காலம் வரையிலான விவரங்களைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அறிந்து

1998 மே 4]

கொள்வதற்காகவும், துடிப்புடன் செயலாற்றவும் அவ்வப்போது அரசு இயற்றும் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப தங்களது கடமைகளை நிறைவேற்றும் வகையிலும், மாவட்ட வருவாய் அலகில் கிராம நிர்வாக அலுவலர் முதல் வட்டாட்சியர் வரை உள்ள அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் பயிற்சித் திட்டம் ஒன்றை 1995 ஆம் ஆண்டு முதல் நடத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2. இப்பயிற்சி இரு கட்டங்களைக் கொண்டது

கட்டம்-1: சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் மூலம் பயிற்சியாளர்களுக்காக நடத்தப்படும் பயிற்சி.

கட்டம்-2: மாவட்டங்களில் வருவாய்த்துறை அலுவலர்களுக்கான பயிற்சி.

3. அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி திட்டத்தின்கீழ் 75 வட்டாட்சியர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்றவர்கள் மாவட்டங்களில் உள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள். 1995 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய, 13,847 வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. (கிராம நிர்வாக அலுவலர்-7675; இளநிலை உதவியாளர்/உதவியாளர்-4598 மற்றும் துணை வட்டாட்சியர்/வட்டாட்சியர்-1574) இப்பயிற்சி, வருவாய் மற்றும் நில நிர்வாகம் சம்பந்தமாக அண்மைக்காலம் வரையிலான விவரங்களை அறிந்து கொள்ளவும், வருவாய் மற்றும் நில நிர்வாகம் தொடர்பான அனைத்துத் தன்மைகளில் திறனை மேம்படுத்துவதையும் மற்றும் நவீன மேலாண்மை கோட்பாட்டையும் உள்ளடக்கியதாகும்.

3. ஆட்சி எல்லைகளை சீரமைத்தல்

மாவட்ட நிர்வாகம் திறம்படச் செயல்படவும், பொதுமக்கள் குறைகள் மற்றும் தேவைகளுக்கு உதவும் வகையிலும் பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகள் மற்றும் இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும் காலங்களில் தடுக்கவும், முறையான ஆதரவு அளிக்கவும், மக்கள் நலப்பணிகள் தாமதமின்றி நடைபெறவும், எளிதில் கையாள முடியாத நிலையிலிருந்த முந்தைய மாவட்டங்கள்,

[1998 மே 4

கோட்டங்கள், வட்டங்கள் முதலியன சீரமைக்கப்பட்டு புதிய மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் முதலியன படிப்படியாக உருவாக்கப்படுகின்றன.

2. இன்றளவில் மாவட்டங்கள், வருவாய் கோட்டங்கள், வட்டங்கள், உள்வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

1.	மாவட்டங்கள்	..	29
2.	வருவாய் கோட்டங்கள்	..	72
3.	வட்டங்கள்	..	195
4.	உள்வட்டங்கள்	..	1109
5.	வருவாய் கிராமங்கள்	..	17273

அரசு ஒன்பது புதிய வட்டங்கள் மற்றும் ஒரு வருவாய் கோட்டத்தை பின்வருமாறு உருவாக்குவது குறித்து, கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது.

(i) நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம் மற்றும் கூடலூர் வட்டங்களைப் பிரித்து முறையே குந்தா மற்றும் பந்தலூர் என்ற இரண்டு புதிய வட்டங்கள் ஏற்படுத்துதல்;

(ii) தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி மற்றும் விளாத்திகுளம் வட்டங்களைப் பிரித்து எட்டயபுரம் என்ற புதிய வட்டம் ஏற்படுத்துதல்;

(iii) நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர் மற்றும் வேதாரண்யம் வட்டங்களை பிரித்து திருக்குவளை என்ற புதிய வட்டம் ஏற்படுத்துதல்;

(iv) சேலம் மாவட்டத்தில் உள்ள வாழப்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் ஏற்படுத்துதல்;

(v) புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் வட்டத்தை இரண்டாகப் பிரித்து மணமேல்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் ஏற்படுத்துதல்;

(vi) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் ஏற்படுத்துதல்;

1998 மே 4]

(vii) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வீர கேரளம்புதூரை, தற்பொழுது கூடுதல் வட்டமாக இருப்பதை நிலை உயர்த்தி ஒரு புதிய வட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும் ஏற்படுத்துதல்;

(viii) சேலம் மாவட்டத்தில் உள்ள சேலம் வருவாய் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆத்தூர், கங்கவல்லி ஆகிய இரண்டு வட்டங்களை உள்ளடக்கி புதிய "ஆத்தூர்" என்ற வருவாய்க் கோட்டம் ஏற்படுத்துதல்;

(ix) இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டம் சருகனி உள்வட்டத்தில் உள்ள 22 வருவாய் கிராமங்களையும், ஆனந்தூர் உள்வட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தையும் மொத்தம் 23 வருவாய் கிராமங்களை சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தேவகோட்டை வட்டத்துடன் இணைத்தல்.

புதிய மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்களை ஏற்படுத்தும்போதே தேவையான கட்டடங்கள், வாகனங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கூடுதல் அலுவலர்களை நியமிக்க அரசு கவனம் செலுத்தியுள்ளது.

3. சாதிமத பேதங்களையும் மற்றும் கட்சி மாச்சரியங்களையும் களைய வேண்டும் என்ற உன்னத நோக்குடன் சமுதாயத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் பெயர்களில் இயங்கிவந்த மாவட்டங்களின் பெயர்களை மாற்றி, அந்தந்த மாவட்டத் தலைமை இடங்களின் பெயர்களையே மாவட்டங்களுக்கு இவ்வரசு சூட்டியுள்ளது.

4. கிராம நிர்வாகம்

கிராம நிர்வாக அலுவலர்கள்

கிராம நிர்வாகம், மாவட்ட வருவாய் நிர்வாகத்தின் அடிப்படை அலகு ஆகும். இம்மாநிலத்தில் தற்போது 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். கிராம கணக்குகளைப் பராமரித்தல், அரசு நிலங்கள் மற்றும் கட்டடங்களைப் பாதுகாத்தல், நிலவரி வசூலித்தல் ஆகிய பணிகள் கிராம நிர்வாக அலுவலர்களின் பணிகளில் அடங்கும்.

2. முன்னாள் பகுதி நேர கிராம அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர் பதவிக்குத் தகுதி பெற்றிருப்பின், அவர்கள் தற்போதுள்ள

கிராம நிர்வாக அலுவலர்கள் பணியிடங்களில் நியமனம் செய்யப்படுகின்றனர். அவ்வாறு நியமனம் செய்யப்படுபவர்களின் பணி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவுடன் வரன்முறை செய்யப்படுகிறது.

3. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு பின்கண்டவாறு முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(i) 14-11-1980 அன்று பதவியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மாதம் ரூ. 175/- ஓய்வூதியத்துடன் இதரப்படிகளும் வழங்கப்படுகிறது.

(ii) 14-11-1980 அன்று பணியிலிருந்து இறந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ. 100/- வழங்கப்படுகிறது.

(iii) ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் 5-12-1986 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

4. மேலே குறிப்பிட்டுள்ள ஓய்வூதியத் திட்டம் 14-11-1980 அன்று பதவியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களில், பின்னர் கிராம நிர்வாக அலுவலர்களாக பணி நியமனம் பெற்று, ஓய்வு பெற்றபின் குறைந்தபட்ச ஓய்வூதியம் பெற 10 ஆண்டுகள் பணியில் இல்லாதவர்களுக்கு இவ்வோய்வூதியத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

5. இதுவரையில் 10,630 முன்னாள் கிராம அலுவலர்கள் மற்றும் அலுவலர்களின் குடும்பத்தினருக்கு இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

கிராம உதவியாளர்கள்

பகுதிநேர கிராம உதவியாளர்களாகப் பணிபுரிந்த அனைவரையும் 1-6-1995 முதல் முழுநேர கிராம உதவியாளர்களாக ரூ. 600-10-750 என்ற புதிய ஊதிய விகிதம் ஏற்படுத்தப்பட்டு நியமிக்கப்பட்டு உள்ளனர். இம்மாநிலத்தில் தற்போது சுமார் 27,000 கிராம உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 17,273 வருவாய் கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு கிராம உதவியாளர்களின் எண்ணிக்கையைச் சமமாக்கி சீர்செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

5. வருவாய்த்துறைக் கட்டடங்கள்

கிராம நிர்வாக அலுவலர்கள் அலுவலகம் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரையில் உள்ள வருவாய்த்துறை அலுவலகங்கள் கட்டுவதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.

அ. மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்:

தற்போது இருபத்தி ஒன்பது மாவட்டங்கள் உள்ளன. இதில் பத்தொன்பது மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அவைகளுக்காகக் கட்டப்பட்ட அரசு கட்டடங்களில் அமைந்துள்ளன. மீதியுள்ள பத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் நாகப்பட்டினம் தவிர ஒன்பது மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அரசு கட்டடங்கள் அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களின் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(1) விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் நகரம் பூந்தோட்ட ஏரிப் புறம்போக்கில் 118.54 ஏக்கர் பரப்பில் மாவட்ட பெருந்திட்ட வளாகம் அமைக்க அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. 7500 சதுர மீட்டரில் விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகம் அமைக்க அரசு ரூ. 300 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு மேல்பூச்சு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கட்டடம் விரைவில் உபயோகத்திற்குக் கொண்டுவரப்படும்.

(2) திருவள்ளூர், நாமக்கல், கரூர், தேனி, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்கள்

புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பின்வரும் மாவட்டங்களில் பெருந்திட்ட வளாகம் அமைப்பதற்கென முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில் உருவாக்கப்பட்ட உயர்மட்டக் குழு அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்ட புலங்களை 14-5-1997 நாளிட்ட ஆணையில் அரசு ஏற்பளித்து உத்திரவிட்டுள்ளது. இது தொடர்பான பணி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வ. எண்.	மாவட்டத்தின் பெயர்.	தேர்வு செய்யப்பட்டு அரசால் ஒப்பளிக்கப்பட்ட இடம்.	மொத்த பரப்பளவு (ஏக்கரில்).	தற்போதைய நிலை.
(1)	(2)	(3)	(4)	(5)
1.	திருவள்ளூர்	புங்கத்தூர் (புறம்போக்கு)	245.96	நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையில் உள்ளது.
		பெரும்பாக்கம் (பட்டா நிலம்)	185.09	
			431.05	
		சிறுவானூர் (புறம்போக்கு)	98.72	நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையில் உள்ளது.
		திருப்பாச்சூர் (பட்டா நிலம்)	316.42	
			415.14	
2.	திருவாரூர்	விளமல் கிராமம் (கோயில் நிலம்)	88.60	4(1) அறிவிக்கை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
		(பட்டா நிலம்)	146.18	
			234.78	
3.	நாகப்பட்டினம்	நாகூர் கிராமம் (புறம்போக்கு)	25.32	நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையில் உள்ளது.
		பால்பண்ணைச்சேரி (கோயில் நிலம்)	11.77	
		(பட்டா நிலம்)	114.45	
			151.54	

(1)	(2)	(3)	(4)	(5)
4.	கரூர்	தாந்தோனி (புறம்போக்கு)	58.78	நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையில் உள்ளது.
		ஆச்சிமங்களம் (கோயில் நிலம்)	139.29	
		(பட்டா நிலம்)	672.83	
			880.90	
5.	நாமக்கல்	சிலுவம்பட்டி (புறம்போக்கு)	14.54	நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையில் உள்ளது.
		(பட்டா நிலம்)	141.73	
			156.27	
		தும்மன்குறிச்சி (புறம்போக்கு)	35.73	நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையில் உள்ளது.
		(பட்டா நிலம்)	326.75	
			362.48	
6.	தேனி	அல்லிநகரம் மற்றும் வட வீர நாயக்கன் பட்டி (புறம்போக்கு)	293.96	நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையில் உள்ளது.
		(பூமிதான நிலம்)	34.40	
		(பட்டா நிலம்)	228.46	
			556.82	

(3) தூத்துக்குடி மாவட்டம்

இம்மாவட்டத்தில் 60.47 ஏக்கர் பரப்பளவில் (30.47 ஏக்கரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், 30 ஏக்கர் நிலத்தில் அலுவலர் குடியிருப்பும் கட்ட முறையே மீளவிட்டான் கிராமம் மற்றும் அய்யனடைப்பு கிராமத்திலும்) பெருந்திட்ட வளாகம் அமைக்க அரசு இசைவு அளித்துள்ளது. கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(4) திருவண்ணாமலை மாவட்டம்

செங்கம் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் 30.38 ஏக்கர் பரப்பில் பெருந்திட்ட வளாகம் அமைக்க 1993-ல் அரசு நிர்வாக

ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைப்பதற்கு ரூ. 300 இலட்சம் ஏற்பளித்து 1995-ல் அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

கட்டட பணிகள் நடைபெற்றுவந்த நிலையில் அருணாச்சல பக்தர்கள் சங்கம் தாக்கல் செய்த நீதிப்பேராணையில் உயர்நீதிமன்றம் தடை ஆணை பிறப்பித்ததால் கட்டுமானப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. தற்போது உயர்நீதிமன்ற தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இருப்பினும் மேற்படி இடத்தில் பெருந்திட்ட வளாகம் கட்டுவதை கைவிடுவது என்று அரசு முடிவெடுத்து அதனடிப்படையில் மாற்று இடத்தில் பெருந்திட்ட வளாகம் கட்ட முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில் உயர்மட்டக் குழு நியமிக்கப்பட்டது. உயர்மட்டக்குழு வேங்கிக்கால் கிராமத்தில் 235.88 ஏக்கர் (ஐ.ட்டி.ஐக்கு சொந்தமான நிலம் 33.00 ஏக்கர் மற்றும் வேங்கிக்கால் கிராமத்தில் பட்டா நிலம் 202.88 ஏக்கர்) நிலத்தை மாற்று இடமாக தேர்வு செய்துள்ளது. அரசாணை எண். 455, வருவாய், நாள் 14-5-1997-ன்படி நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(5) பெரம்பலூர் மாவட்டம்

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை காரணமாக பெருந்திட்ட வளாகத்திற்கான இடம் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை.

(ஆ) வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்:

மாநிலத்தில் உள்ள 72 வருவாய் கோட்ட அலுவலகங்களில் 59 வருவாய் கோட்ட அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் செயல்படுகின்றன. மீதமுள்ள 13 வருவாய் கோட்ட அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன. கள்ளக்குறிச்சி, லால்குடி, உடையார்பாளையம், திருச்செந்தூர் ஆகிய நான்கு வருவாய் கோட்டங்களில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு 1996-ல் ஆணையிடப்பட்டுள்ளது. பின்வரும் ஏழு வருவாய் கோட்டங்களில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு 1997-ல் ரூ. 378.35 லட்சத்திற்கான திட்ட மதிப்பீடுகளுக்கும் வரைபடத்திற்கும் ஒப்புதல் அளித்துள்ளது.

வ.எண்.	கோட்டம்.	பணி முன்னேற்றம்.
1.	பெரம்பலூர்	கட்டுமானப் பணி தற்சமயம் துவங்கப்பட்டுள்ளது.
2.	திருச்செங்கோடு	ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டுள்ளது. கட்டுமானப்பணி விரைவில் துவக்கப்படும்.
3.	மதுராந்தகம்	மதிப்பீடுகள் பொதுப்பணித் துறையின் பரிசீலனையில் உள்ளன.
4.	திருத்தணி	மதிப்பீடுகள் பொதுப்பணித் துறையின் பரிசீலனையில் உள்ளன.
5.	உத்தமபாளையம்	இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் பொதுப்பணித் துறையின் பரிசீலனையில் உள்ளன.
6.	திருவாரூர்	ஒப்பந்தப்புள்ளி பொதுப்பணித் துறையின் பரிசீலனையில் உள்ளன.
7.	குளித்தலை	கட்டுமானப்பணி துவக்கப் படவுள்ளது.

பொன்னேரி மற்றும் விழுப்புரம் கோட்டங்களில் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

(இ) வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுதல்:

மாநிலத்தில் தற்போது 195 வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளன. இவற்றுள் 171 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 24 வட்டங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் பணியின் நிலை இங்கே விளக்கப்பட்டுள்ளது.

(1) பின்வரும் ஆறு வட்டங்களுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன:

1. கமுதி	2. பேரையூர்	3. குன்னம்
4. செந்துறை	5. சங்கராபுரம்	6. அரவக்குறிச்சி

[1998 மே 4

(2) பின்வரும் வட்டங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவது ஒப்பந்தப்புள்ளி நிலையில் இருந்து வருகிறது.

போச்சம்பள்ளி, பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் முதுகுளத்தூர்.

(3) பின்வரும் 7 வட்டங்களில் புதிதாக வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

1. ஒட்டன்சத்திரம்
2. சிவகாசி
3. கடலாடி
4. அம்பத்தூர்
5. தாம்பரம்
6. திருவையாறு
7. ஆரணி

மீதமுள்ள வட்டங்களில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணி அடுத்து மேற்கொள்ளப்பட உள்ளன.

(ச) மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களைத் தற்காலிகமாக அமைக்க கட்டுமானப் பணிகள்

பெரம்பலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பகுதி நிலையான (Semi permanent) கட்டடம் அமைக்க 1995-96-ல் ரூ. 37.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 22-4-97-ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(உ) வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மிதிவண்டி நிறுத்துமிடம் கட்டுதல்

வேலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 'அ' மற்றும் 'ஆ' பகுதியிலுள்ள பணியாளர்களுக்கு மிதிவண்டி நிறுத்துமிடம் கட்டும் செயற்குறிப்பிற்கு 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

1998 மே 4]

(ஊ) எழிலக வளாகத்தில் பணிகள்

(1) எழிலக சிற்றுண்டி கட்டடத்தின் மேல் 3-ம் தளம் அமைக்க 1995 ஆம் ஆண்டில் ரூ. 26 லட்சம் மற்றும் இரண்டு மூடுமுகப்பு (ஒன்று வடப்புறத்திலும் மற்றொன்று தென் மூலையிலும்) கட்டுவதற்கு ரூ. 11.50 லட்சமும் வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

(2) எழிலக வளாகம் சுற்றுப்புறத்தில் வேலியிடவும், வாயிற் கதவுகள் அமைக்கவும் 1997-ல் ரூ. 5 லட்சம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

(3) எழிலகத்திலுள்ள வாகனங்கள் நிறுத்துமிடத்தின் மேலுள்ள மூன்றாவது தளத்தை மாநாட்டுக் கூடமாக மாற்றம் செய்யும் செயற்குறிப்பு 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

6. வருவாய்த் துறைக்கு உள்ளமைப்பு வசதிகள்

(1) மோட்டார் வாகனங்கள்:

1996-97 மற்றும் 1997-98 ஆகிய ஆண்டுகளில் (பிப்ரவரி 1998 வரை) பின்வருமாறு வாகனங்கள் மாவட்ட நிர்வாக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன:

சிருந்துகள்	..	50 (ரூ. 1,63,33,515)
ஈப்புகள்	..	138 (ரூ. 4,29,77,722)

நீலகிரி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு, முக்கிய பிரமுகர் பயன்பாட்டிற்கென தலா ஒரு அம்பாஸிடர் கார் வாங்கும் செயற்குறிப்பிற்கு 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 . திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

(2) தொலை அச்சு இயந்திரங்கள்:

கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) மற்றும் இணை ஆணையர் (நில வருவாய்) ஆகியோர் அறைகளில் தொலைபேசியுடன் கூடிய தொலை அச்சு இயந்திரங்கள் அமைக்கும் செயற்குறிப்பிற்கு 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

|1998 மே

(3) எழிலக வளாகத்திற்கு மின்னணு தொலைபேசி இணைப்ப

எழிலகம் வளாகத்திற்கு மின்னணு தொலைபேசி இணைப்ப அமைக்க ரூ. 10 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ப முடிவடைந்துள்ளது.

(4) எழிலகம் கட்டடத்திற்கு மின் ஆக்கி அமைப்பு வச ஏற்படுத்துதல்

எழிலகம் கட்டடத்தில் மின் ஆக்கி அமைப்பு வைப்பதற்கு ரூ. 1 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(5) மின்னணுவியல் தொலைபேசி நிறுவுதல்

விருதுநகர், ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டாட்சியர் அலுவலகங்களில் பிஏபிஎக்ஸ் தொலைபேசியை ஈபிஏபிஎக்ஸ் (மின்னணுவியல்) ஆக மாற்றியமைக்கும் செயற்குறிப்பிற்கு 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

6. தொலைதூர நேரடி தொலைபேசி வசதி

தற்போது கோட்டாட்சியர்/சார் ஆட்சியர் அலுவலகங்களில் தொலைதூர நேரடி தொலைபேசி வசதியில்லை. உள்ளூர் தொலைபேசி நிலையத்துடன் தொடர்புகொண்டு தொலை தூர இடங்களுக்கான இணைப்புகளைப் பதிவு செய்து, தொடர்புகொள்ள வேண்டியிருக்கிறது. சட்டம், ஒழுங்கு மற்றும் இயற்கை இடர்ப்பாடு காலங்களில் அவசர தொடர்பு கொள்வதற்கு காலதாமதம் ஆவதைக் கருத்திற்கொண்டு வருவாய்க் கோட்டாட்சியர்/சார் ஆட்சியர்களுக்கு நேரடி தொலைதூர தொலைபேசி வசதியமைக்க அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இதன்மூலம் 72 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் இவ்வசதியைப் பெறும்.

* *

D
V211,31 N98
N98.50.1
219093

2

(1)	(2)	(1)	(2)